Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆவணி 31 செவ்வாய்க்கிழமை (16.09.2014) பக்கங்கள் 20 ஓசை – 350

## சீன ஜனாதிபதி இன்று கொழும்புக்கு

(கொழும்பு)

இன்று கொழும்புக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ள சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங், இலங்கையுடன் 23 உடன்படிக்கைகளில் கைச்சாத்திடவுள்ளார்.

இதில் பல உடன்படிக்கைகள் குறித்த தகவல்கள் இறுதி நேரத்திலேயே கிடைத்துள்ளதால். இந்த உடன்படிக்கைகளில் மாற்றங்களைச் செய்யவோ அல்லது அவை குறித்த விடயங்களை பொதுமக்களுக்கு பகிரங்கப்படுத்தமுடியாத நிலையிலும் வெளிவிவகார அமைச்சக அதிகாரிகள் காணப்படுகின்றனர்.

சீன ஜனாதிபதி அவரது இலங்கை விஜயத்தின்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் பேச்சுகளை மேற்கொள்ளவுள்ளார். பின்னர் இருவரும் இணைந்து நுரைச்சோலையின் லக் விஜய மின்திட்டத்தின் இரண்டாவது பகுதியை ஆரம்பித்து வைக்கவுள்ளனர். ஜனாதிபதி செயலகத்திலிருந்தே இதனை அவர்கள் திறந்துவைககவுள்ளனர்.

மறுநாள் இந்தியாவிற்கான

19 ஆம் பக்கம் பார்க்க

# இந்தியாவுக்கு எதிராக புலிகளின் செயற்பாடு


பிரத்தியேக செய்தி

### பாகிஸ்தானுடனும் கூட்டு

(கொழும்பு)

வெளிநாடுகளில் விடுதலைப் புலிகள் சிலர் பாகிஸ்தானுடன் இணைந்து இந்தியாவுக்கு எதிராக செயற்பட ஆரம்பித்துள்ளனர். எனவே விடுதலைப் புலி உறுப்பினர்கள் மீண்டும் ஒன்றிணைந்து செயற்படுவதை தடுப்பதற்கு இந்தியா விழிப்புடன் செயற்படவேண்டும் என்று தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



இந்த விடயத்தில் இலங்கையுடன் இந்தியா தொடர்ந்தும்

19 ஆம் பக்கம் பார்க்க

# சர்வதேச நிபுணர்கள் முன்னிலையில் காணாமற்போனோர் விசாரணை



## கிளிநொச்சியில் அடுத்தவாரம் அமர்வு

(கொழும்பு)

காணாமற் போனவர்கள் தொடர்பான விசாரணை அமர்வுகள் சர்வதேச நிபுணர்களின் பிரசன்னத்துடன் கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளன. அநேகமாக இந்த மாத இறுதியில் நான்கு நாட்கள் இந்த விசாரணை அமர்வுகள் கிளிநொச்சியில் இடம் பெறவுள்ளன.

இதன் முதற்கட்டமாக காணாமற் போனவர்கள் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழு, மேற்படி சர்வதேச நிபுணர்களை சந்திக்கவுள்ளது.

காணாமற் போனவர்கள் மற்றும் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தும் நோக்கில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் ஆணைக்குழு நிறுவப்பட்டது.

மக்ஸ்வல் பரணகம தலைமையிலான இந்த ஆணைக்குழுவிற்கு ஆலோசனை வழங்கும் நோக்கில் வெளிநாட்டு நிபுணர்கள் ஐந்து பேர் நியமிக்கப்பட்டனர்.

ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், நிபுணர் குழு உறுப்பினர்களை எதிர்வரும் 19 ஆம் திகதி சந்திக்கவுள்ளனர். மத்திய வங்கியில் இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது.

விசாரணைகளின் தற்போதைய

19 ஆம் பக்கம் பார்க்க

## முறிகண்டியில் விபத்து; உடல் நசிந்து இளைஞர் பலி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு முறிகண்டிப் பகுதியில் ஏ-9 வீதியில் பஸ் சில்லுக்குள் தவறிவீழ்ந்து அதன் நடத்துநர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் 11.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இதில் வவுனியா, கிச்சிராபுரத்தைச் சேர்ந்த ச.தர்சன் (வயது - 19) என்ற இளைஞரே உடல் நசுங்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த தனியார் பேருந்து முறிகண்டி பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் வளைவு ஒன்றில் வேகமாகத் திரும்பியபோது பேருந்தின் முன்வாசலில் நின்ற நடத்துநரே

19 ஆம் பக்கம் பார்க்க

## பள்ளிவாசல் மீது தாக்குதல்

(கொழும்பு)

தம்புள்ள ஹைரியா ஜும்ஆ பள்ளிவாசல் மீது இனந்தெரியாதோரால் நேற்று பெற்றோல் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அப்பள்ளியின் நிர்வாக சபை உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

நேற்று அதிகாலை 12:40 மணியளவில் குறித்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக அவர்

19 ஆம் பக்கம் பார்க்க

## மன்னார் கடற்கரையில் ஆணின் சடலம் மீட்பு

(மன்னார்)

மன்னார் - சவுத்பார் கடற்கரையில் உருக்குலைந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று கரை ஒதுங்கியுள்ளது. சவுத்பார் கடற்படை முகாமிலிருந்து வங்காலைப் பகுதியை நோக்கிய சுமார் 3 கிலோமீற்றர் தொலைவில் குறித்த சடலம் கரை ஒதுங்கியுள்ளது.

இத்னையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சடலம் உருக்குலைந்த நிலையில் ஆடைகள் அற்ற நிலையில் காணப்படுகிறது.

இதேவேளை பிரேத பரிசோதனை அதிகாரி ரி.பி.சிந்தாத்துரை, சடலத்தை நேரில் சென்று பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்டதுடன் சடலத்தை மன்னார் பொது வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கும்படியும் அடையாளம் காண இரு வாரங்கள் வைத்தியசாலையில் வைக்கும்படியும் உத்தரவிட்டார்.

மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பொன்சேகாவுக்கெதிராக முறைப்பாடு மனித உரிமை ஆணைக்குழுவில்

(கொழும்பு)

ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகாவுக்கு எதிராக அந்தக் கட்சியைச் சேர்ந்த நான்கு வேட்பாளர்கள் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

ஜனநாயகக் கட்சியின் தலைமை தமக்குக் கிடைக்க வேண்டிய சிறப்புரிமைகளை இல்லாமல் செய்து சர்வாதிகாரப் போக்கில் செயற்பட்டுள்ளதால் தமது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

ஊவா மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு உறுப்பினராகும் எதிர்பார்ப்பில் தாம் தொகுதி அமைப்பாளர்கள் என்ற வகையில் அரசியல் - நடவடிக்கைகளுக்காக 15 இலட்சம் ரூபா செலவிட்டுள்ளதாகவும் அந்தப் பணத்தை திருப்பி தருமாறு கோரி பதுளை மாவட்டத்தில் ஜனநாயகக் கட்சியின் சார்பில் போட்டியிடும் 4 வேட்பாளர்கள் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

ஏ.எம்.விஜித குமார, எஸ்.பீ.பீ. லயனல் சந்திரசிறி முகாந்திரம்,

19 ஆம் பக்கம் பார்க்க

## மகிந்தவுடன் கமரூன் நியூயோர்க்கில் சந்திப்பு


### நடக்கிறது ஏற்பாடு

ஐ.நா. பொதுச்சபையின் கூட்டத்தொடரில் கலந்துகொள்வதற்காக நியூயோர்க் செல்லவுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, கனடா பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர் மற்றும் பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் ஆகியோரைச் சந்தித்து பேச்சுக்களை நடாத்தவுள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐ.நா. கூட்டத்தொடர் இடம்பெறவுள்ள நியூயோர்க்கிலேயே பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் இரு மாநாடுகள் இடம்பெறவுள்ளன. குறிப்பிட்ட மாநாடுகளின்போது இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

பொதுநல

19 ஆம் பக்கம் பார்க்க



# எதிர்ப்பு அரசியல் தமிழர்களுக்கு அழிவையே பெற்றுத் தரும்

## வலி.கிழக்கு பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு





(ஊரெழு)

எதிர்ப்பு அரசியல் என்பது தமிழ் மக்களுக்கு அழிவையே பெற்றுத் தரும் என வலி.கிழக்கு பிரதேச சபையின் எதிர்க் கட்சித் தலைவரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வலி. கிழக்கு பிரதேச இணைப்பாளருமான இராமநாதன் ஐங்கரன் தெரிவித்துள்ளார்.

ஊரெழு கிராம மக்களுடைய வாழ்வாதாரத்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று ஊரெழு பொது நோக்கு மண்டபத்தில் வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர் பவானந்தம் பிரவிந் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இதன்போது உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் எதிர்ப்பு அரசியல் ஊடாக தமிழ் மக்களுக்கு அழிவையே பெற்றுக் கொடுத்திருக்கின்றார்கள்.

ஆனால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இணக்க அரசியல் ஊடாக எமது தமிழ் மக்களை அழிவில் இருந்து காப்பாற்றியதுடன், பாரிய அபிவிருத்திகளை செய்தும், செய்து கொண்டும் இருக்கின்றார்.

மக்களுக்காக அரசாங்கத்திடம் இருந்து மக்களுக்கு அவர்களுடைய தேவைகளைப் பெற்றுக் கொடுப்பது அற்ப சலுகை என்று கூறிய இவர்கள் கோடிக் கணக்கில் பெறுமதியான சொகுசு வாகனங்களை எந்த அரசாங்கத்திடம் இருந்து பெற்றுக்கொள்கின்றார்கள்.

இவர்களுடைய கொள்கை இவர்கள் உடுக்கும் உடைகளில் கூட இல்லாத பொழுது இவர்களுடைய மனங்களில் எவ்வாறு இருக்கும்.

நீங்கள் சிந்திக்காத வரைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடைய பொய்த் தேசியம் என்பது உங்களை அழித்துக்கொண்டே இருக்கும்.

ஆகவே நீங்கள் சிந்தித்து செயற்பட்டால் அவர்களுடைய பொய்த்தேசியம் தோல்வியுற்று இணக்க அரசியல் வெற்றி பெறும் போது உங்களுடைய வாழ்க்கை நிச்சயமாக ஒளிமயமாக்கப்படும்.

ஆகவே நீங்கள் அனைவரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கரங்களைப் பலப்படுத்தி உங்களுடைய வாழ்க்கையினை வளப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

இக் கலந்துரையாடலில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வலி.கிழக்கு பிரதேச நிர்வாக உறுப்பினர் சிவலிங்கம் நிமல் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

# வவுனியா வடக்கு பிரதேச சபைக்கு 20 ஊழியர்கள் நியமனம்

(வவுனியா)

வவுனியா வடக்கு பிரதேச சபைக்கு 20 அட்டவணைப்படுத்தப்பட்ட ஊழியர்களுக்கு நியமனம் அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா வடக்கு பிரதேச சபை தவிசாளர் மு.பாலசுப்பிரமணியம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின் இப்பிரதேச சபைக்காக 20 ஊழியர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இப்பிரதேச சபைக்கு சாரதி நியமனம் 6 பேருக்கும், அலுவலர் பணியாளர் நியமனம் 3 பேருக்கும், மின் இணைப்பாளர் நியமனம் ஒருவருக்கும், வெளி தொழிலாளர் நியமனம் 6 பேருக்கும், ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர் 2 பேருக்கும் வழங்கப்பட்டது.



நியமனக் கடிதங்களை வட மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயளாலர் திருவாகரன் நியமனக் கடிதங்களை வழங்கி வைத்துள்ளார்.

இந்நிகழ்வில், வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மு. ஜெகூ, வவுனியா பிராந்திய உதவியாணையாளர் பி.எம். அசங்க காஞ்சன குமாரவும், வவுனியா வடக்கு க.பரந்தாமன் ஆகியோர் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (40)

# மயிலங்காட்டில் விபத்து; குடும்பஸ்தர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மயிலங்காட்டில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குப்பிளான் தெற்கைச் சேர்ந்த எஸ்.பாஸ்கரன் (வயது-35) என்ற இரு பிள்ளைகளின் தந்தையே இவ்விபத்தில் படுகாய மடைந்துள்ளார்.

சைக்கிளில் சென்ற குடும்பஸ்தரே வானுடன் மோதி விபத்துக்குள்ளானதாகத் தெரி[illegible]கப் படுகிறது. (இ)

# கரையொதுங்கிய சடலம் அடையாளம் காணப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

தீவுப் பகுதிக் கடற்பரப்பில் கரையொதுங்கிய இந்திய மீனவருடையது எனத் தெரிவிக்கப்படும் சடலம் நேற்று வரை அடையாளம் காணப்படவில்லை என்று யாழ்.போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் அடையாளம் காண்பதற்காக அந்தச் சடலம் தொடர்ந்து யாழ்.போதனா வைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (பா)

# முல்லைத்தீவு மாவட்ட ஊடகவியலாளர்களுடன் சந்திப்பு



(முல்லைத்தீவு)

முல்லை மாவட்ட தேசிய இளைஞர் மன்றத்துக்கும் மாவட்ட ஊடகவியலாளருக்கும் இடையிலான கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

முல்லை மாவட்ட இளைஞர் சேவை உத்தியோகத்தர் மா. சசிகுமார் தலைமையில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் பி.ப 2.00 மணியளவில் இக்கலந்துரையாடல் இடம்பெற்றது.

முல்லை மாவட்டத்தில் இளைஞர் சேவை மன்றத்தினால் செயற்படுத்தப்படும் திட்டங்கள் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது. நீண்ட காலமாக மூடப்பட்டிருக்கும் ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையினை இயக்குவதற்கு வழிவகுத்து இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுக்குமாறு ஊடவியலாளர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

தேசிய இளைஞர்சேவை மன்றத்தின் வடமாகாண பணிப்பாளர் சரத் சந்திரபாலா இது தொடர்பாக சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மட்டத்துக்கு கொண்டு சென்று இதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதாக உறுதியளித்துள்ளார். (40)

# 15 நபர்களில் 4 பேருக்கு டெங்கு நோய்க்கு சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

கடந்த பதினைந்து நாட்களில் சுமார் 74 பேர் டெங்குத் தொற்றுக்கு இலக்காகியுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்படுவதாக யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா நேற்றுத் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளில் இருந்தும் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

நேற்று வரை இவ்வாறு அனுமதிக்கப்பட்டவர்களில் 74 பேர் வரையில் டெங்குத் தொற்றுக்கு ஆளாகியுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டு அவர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது.

இதில் நேற்று முன்தினமும், நேற்றுக்காலையும் பல்கலைக் கழக மாணவர்கள் சிலர் இவ்வாறு டெங்குத் தொற்றுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வருடத்தில் கடந்த எட்டு மாதங்களை விடவும் ஒப்பீட்டளவில் இம்மாதம் டெங்குத் தொற்றின் தாக்கம் அதிகரித்திருப்பதாகவும், எனினும் தற்போது டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருவதாகவும், காய்ச்சல் ஏற்படும் பட்சத்தில் வைத்தியரை உடன் நாடி உரிய சிகிச்சைகளைப் பெற வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ, 25)

# தாய்மொழியில் கடமையாற்றும் வாய்ப்பை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது

## தேசிய மொழிகள், சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் மேலதிக செயலாளர் புகழாரம்

இலங்கையிலுள்ள அனைவரும் தங்கள் கடமைகளை தமது தாய் மொழியில் மேற்கொள்ளக் கூடிய வசதிகள். தற்போதய அரசாங்கத்தின் காலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக .தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் மேலதிக செயலாளர் எச்.ஆர்.ஹேவகே, நேற்றுத் தெரிவித்தார்.

தேசிய மொழிகள் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் செயலமர்வு கரைச்சிப் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த செயலமர்வில் கலந்து கொண்டு கருத்துரை வழங்கிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

மொழி உரிமைகள் தொடர்பான கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் பொருட்டு, இந்த அரசாங்கத்தால் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு செயற்படுத்தப்படுகின்றது.

தாய்மொழியுடன் பிறமொழிகளையும் கற்றுக்கொள்ள ஏதுவாக அமைச்சால் கிராமிய மொழிச் சங்கங்கள் உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்படுகின்றன. அந்தச் சங்கங்களுக்கு மொழிகளை கற்பிப்பதற்கான ஆசிரியர்கள் முதற் கொண்டு அனைத்து வசதிகளையும் அமைச்சு மேற்கொண்டுள்ளது.

சிறு விளம்பரம்

டயானா பிளாஸ்ரிக் ரீசைக்கிள் (மீள்சுழற்சி)

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்.
சிவலிங்கப்புளியடி.
வண்ணார்பண்ணை.
யாழ்ப்பாணம்.

021 222 8680,
077 592 5088.

(C/3800)

# ஊர்காவற்றுறை அரச வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவு அமைக்க ஒப்பந்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஊர்காவற்றுறை ஆதாரவைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவை அமைப்பதற்காக டில்மா நிறுவனத்தினால் 60 மில்லியன் ரூபா நன்கொடை வேலைத்திட்ட உடன்படிக்கை நிகழ்வு வடமாகாண பிரதம செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நண்பகல் இடம்பெற்றது.

இந்த வேலைத்திட்டம் ஒரு வருட காலத்துக்குள் நிறைவேற்றப்படும் என டில்மா நிறுவனத்தினர் உறுதியளித்துள்ளனர்

மேலும் இவ் வேலைத்திட்டம் வடமாகாண அமைச்சின் கோரிக்கைக்கு அமைவாக வடமாகாண ஆளுநரின் அனுமதியுடன் வடமாகாண சபையின் சார்பாக கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த திட்டத்துக்கு வடமாகாண பிரதம செயலாளர் திருமதி.ஆர். விஜயலட்சுமி, டில்மா நிறுவனத்தின் நம்பிக்கை நிதியத்தலைவர் டிலாஸ் கரிச்சந்திரா பெர்ணான்டோ ஆகியோர் கைச்சாத்திட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இந்த நிகழ்வுக்கு வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர். எஸ்.ரவீந்திரன், யாழ்.மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர்.கேதீஸ்வரன், டில்மா நிறுவனத்தின் குழுத்தலைவரும் முகாமையாளருமான எஸ்.கமலநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## வில்லிசை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சாயிபவாஸ் அவதார மகிமை வில்லிசை நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.30 மணி முதல் 6.30 மணிவரை மானிப்பாய் சத்தியசாயி பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நாட்டில் புகழ் பெற்ற ஸ்ரீ சாயிராய் ராமானுஜ வில்லிசைக் குழுவினரின் வில்லிசை நடைபெறவுள்ளது.

## நர்த்தனாஞ்சலி நடன நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்திய துணைத்தூதரகமும் நிருத்திய நிகேதன நுண் கலைக் கல்லூரியும் இணைந்து வழங்கும் "நர்த்தனாஞ்சலி" மாபெரும் நடன நிகழ்ச்சி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு வவுனியா நகரசபையின் புதிய கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்மணி அகளங்கன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண சுகாதார, சுதேச வைத்தியத்துறை அமைச்சர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. ச.மோகநாதன், வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா, வவுனியா தெற்கு வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி.செ.அன்ரனி சோமராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.


கௌரவ விருந்தினராக யாழ். இந்திய பிரதி துணைத்தூதுவர் சு.தட்சணாமூர்த்தி கலந்து கொள்ளவுள்ளார். (எஸ்.பி)

## தொழில்நுட்பம் பற்றிய விளக்கம்

(யாழ்ப்பாணம்)

"வோர்டும் எனர்ஜி" என்னும் நிறுவனத்தினர் நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு 165, மானிப்பாய் வீதியில் உள்ள யாழ். வணிகர் கழகத்தின் பணிமனையில் சூரிய சக்தியை மிகவும் பயனுள்ள, வினைத்திறன் மிக்க வகையில் பயன்படுத்தக்கூடிய வகையிலான தொழில்நுட்பங்கள் பற்றிய தெளிவான விளக்கங்களை மக்களிடம் பகிரவுள்ளனர்.

எனவே ஆர்வமுடையவர்கள் அனைவரும் இக்கூட்டத்தில் பங்குபற்றி பயனடையுமாறு யாழ்.வணிகர் கழகம் கேட்டுக்கொள்கிறது.



பொலிகை இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற கல்விக் கண்காட்சியின் பதிவு.... (116)

## வரதராஜக்குருக்கள் ஸ்ரீகாந்தனுக்கு "சமூகசுடர்" பட்டம் வழங்கி கௌரவிப்பு

கல்விப்பணி, சமூகப்பணி, ஆன்மீகப்பணி ஆகிய முப்பணிகளையும் கடந்த 37 ஆண்டுகளாக முன்னெடுத்து ஓய்வு பெற்ற சுழிபுரம் விக்ரோரியக் கல்லூரி அதிபர் பிரம்மஸ்ரீ வரதராஜக்குருக்கள் ஸ்ரீகாந்தனின் பன்முக சேவையைப் பாராட்டி "சமூகசுடர்" எனும் உயர்பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

விக்ரோரியக் கல்லூரியின் ஓய்வு நிலை அதிபர் பிரம்மஸ்ரீ வரதராஜக் குருக்கள் ஸ்ரீகாந்தனின் மணிவிழாவும் 'ஸ்ரீகாந்தம் மலர்' வெளியீடும் நேற்றுமுன்தினம் கல்லூரி முதல்வர் திருமதி.ச.சிவகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் நவாலி ஹேமலதா செல்வராஜா சிறுவர் ஞாபகார்த்த நிதியம் சார்பில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியை திருமதி.சுதா ரமேஷால் அவருக்கு "சமூகசுடர்" எனும் உயர்பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. மேற்படி நிகழ்வில் 'ஸ்ரீகாந்தம்' என்ற சிறப்பு வரலாற்று நூலும் வலி. மேற்கு பிரதேசசபை மணிவிழா குழு பொருளாளர் சிரேஷ்ட நூலகர் கு.பா. விஜயகுமாரால் வெளியீட்டுரை நிகழ்த்தப்பட்டது. (92)

# எனக்கு நீ உனக்கு நான் எண்ட விளையாட்டில போகுது இனப்பிரச்சினை...




**'தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துக்கு ஆதரவாகவே செயற்பட்டு வருது'** எண்டதில என்ரை நண்பர்களுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை.

**'அதாலதான் தேர்தல் காலங்களில தமிழ்க் கூட்டமைப்பை வளர்க்கிற மாதிரி சில காரியங்கள் நடக்கிறதுக்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுது'** எண்டும் அவை சொல்லுகினை.

**அதாவது, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெறுகிறதுக்குத் தோதான மாதிரிச் சில காரியங்களைச் செய்யிறது.....**

**இது ஏனெண்டால், இந்தத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புத்தான் அரசாங்கத்தின்ரை - மகிந்தற்றை - வெற்றிக்கே பெரிய உதவிகளை எல்லாம் செய்து கொண்டிருக்கு.**

கூட்டமைப்புக்காரர் இனவாதத்தைப் பேசி. சர்வதேச சமூகத்தைக் கொண்டு இலங்கை அரசாங்கத்தைக் கவிழ்க்கப்போகிறம் எண்டு சொல்லச் சொல்லச் சிங்கள மக்கள் மகிந்தரையும் மகிந்தற்றை அரசாங்கத்தையும்தான் அந்த மாதிரிப் பலப்படுத்துகினம்....

அதோட இவை ஒரு நாளும் உருப்படியாக அரசாங்கத்தை எதிர்க்கப்போறதே இல்லை. இவையின்ரை எல்லையும் வவுனியாவுக்கு வடக்கில மட்டுந்தான்.

ஐக்கிய தேசியக் கட்சியோ. ஜே.வி.பி யோ வளர்ந்தால்தான் அரசாங்கத்துக்குக் கெடுதி. இவை எப்பிடி வளர்ந்தாலும் எந்தப் பிரச்சினையும் வராது எண்டு எல்லாருக்கும் தெரியும்.

ஏனெண்டால், இவையால ஒரு நாளும் உருப்படியாகப் போராட முடியாது. உருப்படியாக ஒரு காரியத்தைச் செய்ய ஏலாது. உருப்படியான ஒரு நல்ல சிந்தனையைச் செய்ய முடியாது.

வாயில மட்டும்தான் இவையின்ரை புரட்சியை பாக்கலாம். வாயாலதான் இவை பீரங்கிகளை அடிச்சுக் கொண்டிருக்கினம்.

நெஞ்சில நெருப்பெரியிறவை எல்லாம் போரால பாதிக்கப்பட்ட சனங்களுக்கு எதையாவது உருப்படியாகச் செய்ய வேணும் எண்டு நினைக்கினம். அப்பிடி நினைச்சுத் தங்களால முடிந்த வரையில எதையோவெல்லாம் செய்து கொண்டிருக்கினை. இதைப் பொறுக்க முடியாத இந்தக் கூட்டமைப்புக் கும்பல் இந்த உணர்வாளர்களைத் துரோகிகள் எண்டு அநியாயமாகப் பட்டம் சூட்டுது.

இப்பிடியே ஊரை ஏமாத்தி, உலகத்தை ஏமாத்திப் பிழைக்கிற இந்தக் கூட்டத்தை எப்பிடித் தமிழர்கள் ஆதரிக்கிறார்கள் எண்டு உலகமே வியக்குது.

அரசாங்கத்தை எதிர்க்கிறதாக பெரிய பில்டப் எல்லாம் காட்டுகிற கூட்டமைப்புக் கும்பல் இதுவரையில ஒழுங்காக அதைச் செய்திருக்கா?

ஒரு உருப்படியான உண்ணாவிரதப் போராட்டத்தை இதுவரையில நடத்தியிருக்கா?

அப்பிடி ஒரு பொறுப்பான உண்ணாவிரதப் போராட்டத்தில இருக்கிறதுக்கோ முன்னுக்கு நிண்டு நடத்திறதுக்கோ ஆராவது ஒரு ஆளை கூட்டமைப்புக்குள்ள கண்டு பிடிச்சுச் சொல்லட்டும்.

அப்பிடி ஒரு ஆளைக் கண்டு பிடிச்சுச் சொன்னால், அந்த ஆள் முறையான உண்ணாவிரதப்போராட்டத்தை நடத்திறதுக்கு தலைமை தாங்கினால் நான் இந்த எழுதிற வேலையை விட்டுப்போட்டுப்போய் அந்த ஆளுடன் உண்ணாவிரதப் போராட்டத்தில கலந்து கொள்கிறன்.

அரசாங்கத்தை ஆட்டம் காண வைக்கிற போராட்டமாக இருக்க வேணும். அதை விட்டுப்போட்டு சனங்களைப் பேய்க்காட்டிற மாதிரி ஒரு நாலு மணிநேரம் நாலு பேர் குந்தியிருந்து கொண்டு பேப்பர் பார்த்து பகிடி விட்டுக் கதைச்சுக் கொண்டிருந்திட்டு எழும்பிப் போற போராட்டமாக இருக்கப்பிடாது.

உண்ணாவிரதப் போராட்டத்தைப்போல, ஊழியம் செய்ய மறுக்கிற போராட்டத்தையும் முன்னெடுக்கலாம். அரசாங்க உத்தியோகத்தர்கள் தாங்கள் கடமைகளைச் செய்ய மாட்டம் எண்டு சொல்லி வேலை செய்யாமல் நிறுத்திற போராட்டத்தை முன்னெடுத்து அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கலாம்.

ஏன் இதைச் சொல்லிறன் எண்டால், அரச உத்தியோகத்தர்களில 90 வீதமானவை கூட்டமைப்பை ஆதரிச்சு வாக்களிச்சவை. அதால கூட்டமைப்பின்ரை சொல்லைக் கேட்கக் கூடியவை. கூட்டமைப்பின்ரை போராட்டங்களை ஆதரிக்க வேண்டிய பொறுப்பில இருக்கிறவை. ஆகவே அரச உத்தியோகத்தர்மாரை வைச்சு ஒரு பெரிய நெருக்கடியை அரசாங்கத்துக்குக் குடுக்கலாம்.

இதுக்கு எதிராக அரசாங்கம் சில வேளை சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கலாம். அதுக்கெல்லாம் பயப்பிடலாமோ.... போராட்டம் எண்டால் பின்னுக்குப் பதுங்கிறதோ இழப்புகளைக் கண்டு ஒதுங்கிறதோ இல்லை. எதுக்கும் தயாராக இருக்க வேண்டிய ஒண்டு....

இப்பிடி உருப்படியான போராட்டத்தைப் பற்றிச் சிந்திக்காமல் சும்மா புச்சுக் காட்டிக் கொண்டிருக்கிற விளையாட்டைத்தான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புச் செய்யும் எண்டால், அதால சிக்ஸர் அடிக்கப்போறது மகிந்தர்தான். கூட்டமைப்பு அரசியல்வாதிகளின் வயிறும் வாழ்வும் சிறக்கும். ஏனெண்டால் எனக்கு நீ உனக்கு நான் எண்ட விளையாட்டில ரண்டு தரப்புக்கும் உச்சப்பயன்தானே...

தமிழ்ச் சனங்களின்ரை பாடுதான் குளம் வத்த மட்டும் காத்திருந்து தான் வாடிச் செத்த கொக்கின்ர கதையைப்போல.....

கோபம் வந்துவிட்டால் நியாயங்கள் குழம்பிப் போவது வழக்கம். - நாமக்கல் கவிஞர்

தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## மனிதர்களைத் தகவமைக்கும் பணி

இந்த மாதத்தின் முதல் வாரம் ஆசிரியர் தினத்தைக் கொண்டிருந்தது. குழந்தைகளை சமுதாயத்திற்குகந்த மனிதர்களாக மாற்றித்தரும் பெரும் பொறுப்பைக் கொண்டிருப்பவர்கள் ஆசிரியர்கள்.

ஒரு கட்டடத்தைக் கட்டி முடிக்கிறவர் பொறியியலாளர். வேளாண்மை வளர்ப்பவர் விவசாயி. சமூகத்தைக் கட்டுகிறவர் ஆசிரியர்.

ஆசிரியர் மற்ற பணிகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டவர். சமூக அமைப்பைப் புரிந்துகொண்டு அதற்குத் தேவையானவற்றை கொடுக்கிற சமூக சேவகர். ஒவ்வொரு குழந்தையின் மனதுக்குள்ளும் பயணிக்க வேண்டிய அவசியமிருக்கிறது ஆசிரியருக்கு.

குழந்தையின் விருப்பு, வெறுப்பு, பழகும் தன்மை, குடும்பப் பின்னணி, சமூகச்சூழல் புற்றியெல்லாம் முழுமையாகத் தெரிந்துகொண்டு செயல்பட வேண்டிய பொறுப்புணர்வு மிக்க சமூக ஆய்வாளரே ஆசிரியர்.

இதற்குத் தகுதியானவராக ஆசிரியர் தன்னை வளர்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. எப்படியெல்லாம் தன்னைத் தகவமைத்துக் கொள்ள வேண்டும் என்பது குறித்து விழிப்புணர்வு அவரது முதல் தேவை.

நிறைய வாசிக்க, கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. குழந்தைகளின் உலகம் தெரிந்து, குழந்தைகளைக் கையாள்வதற்கு ஒரு பரந்த வாசிப்பு உலகத்துக்குள் பயணிக்க வேண்டும்.

...மொழி பற்றி, வரலாறு பற்றி, ...சியல் பற்றி, அன் ...றி, மானுடம் பற்றி, ...ாவதேசம் பற்றி, குழந் ...ளுக்கான கதைகள் பற்றி, ...றவு பற்றி, வீழ்ச்சியுற்றிருக்கிற மானுடப் ...புகள் பற்றி, சமூகப் பொறுப்... ...ளடகங்கள் பற்றி, ரசனையை வளர்த்து மனம் நெகிழ்... ...ாக்கள் பற்றி, மக்களில் அக்கறை கொண்ட ...புகள் பற்றி என எல்லாவற்றைப் பற்றியும் ஒரு குறைந்தபட்ச அறிவுடனும் புரிதலுடனும் இருப்பவரே ஆசிரியர்.

புதிய பொருளாதாரம், உழைப்பின் மேன்மை, தொலைந்து போன விழுமியங்கள், மனித உறவுகளின் சிக்கல்கள், வாழ்வதற்கும் இருப்பதற்குமான வேறுபாடு பற்றியெல்லாம்கூட ஓர் ஆசிரியர் அறிந்து ஒழுக வேண்டியிருக்கிறது.

பாடசாலைகள் சமுதாயத்தின் சுருங்கிய மாதிரி வடிவம் என்கிறார்கள். சமூகத்தின் அத்தனை அம்சங்களையும் அது தன்னுள் அடக்கி அங்கிருந்துதான் சமூக மனிதர்களைத் தகவமைத்து வெளியனுப்புகிறது. பள்ளிக்கூடங்கள் வடிவமைத்துத் தந்திருப்பதே இந்தச் சமூகம்.

ஒரு குழந்தைக்கான சமூகத்தொடர்பு பள்ளிக்கூடத்திலிருந்துதான் தொடங்குகிறது. வீடு, உறவுகள் தாண்டி ஒரு குழந்தைக்கான சமூக உறவை ஏற்படுத்தித் தருவது பள்ளிக்கூடங்கள்தான். இங்கிருந்துதான் சமூகத்தின் பல்வேறு அம்சங்களைப் பார்க்கவும், பழகவும் கற்றுக்கொள்கிறார்கள்.

புத்தகத்திலிருந்து தகவல்களைச் சுருக்கக் குறிப்புகளாக மாற்றி மாணவர் கொப்பிகளில் இடப்பெயர்வு செய்வது கற்பித்தல் ஆகிவிடாது. அது கற்பித்தல் பணியின் ஒரு பகுதி மட்டுமே. தன்னை நம்பி வந்திருப்பவர்களை தகுதி வாய்ந்த மனிதர்களாகத் தகவமைக்கும் பணியே கல்விப்பணி.

பள்ளிக்கூடத்தில் எதுவெல்லாம் சொல்லிக் கொடுக்கப்படுகிறதோ, அதுவே மிகச் சரியானது என நம்புகிறது குழந்தைகளின் உலகம்.

சொல்லிக் கொடுக்கப்படுகிற அனைத்தும் சரியானதாக, அறிவூட்டக்கூடியதாக, சமூகப் பொறுப்புள்ளதாக, அன்பூட்டுவதாக இருந்துவிட்டால் குழந்தைகள் மகிழ்ச்சியோடும் குதூகலத்தோடும் சரியான திசையில் பயணிக்க முடியும். - *ஆசிரியர்*

# அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதி; அதிகரிக்க உலகவங்கி திட்டம்

நாட்டில் அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு வழங்கவுள்ள நிதியுதவித் தொகையினை மேலும் 331.5 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரிக்க திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக உலகவங்கி தெரிவித்துள்ளது.

எனவே இந்த நிதித்தொகை அரச திறன்கள்துறை, அபிவிருத்தித் திட்டம், அணை பாதுகாப்பு, முக்கிய நகர அபிவிருத்தி உட்பட நீர்வள திட்டமிடல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படவுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு கடந்த வெள்ளி இடம்பெற்றது. இதில் அரசாங்கத்தின் சார்பில் ஒப் பந்தம் கைச்சாத்திடும் பணியினை திறைசேரிக்கான செயலாளர் கலாநிதி பி.பி.ஜயசுந்தரவும், உலகவங்கியின் சார்பாக இலங்கை, மற்றும் மாலைதீவுக்கான பணிப்பாளர் ப்ரான்கோசிஸ் குளோற்ஸ்வும் கைச்சாத்திட்டுள்ளனர்.

மேலும் உலகவங்கியால் மேற்கொள்ளப்பட்டுள்ள 2014 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டுக்கான திறன்கள் துறை அபிவிருத்தித் திட்டத்தினை செயல்படுத்த ஆதரவு வழங்கும் விதமாக உலக வங்கி 101.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க தீர்மானம் மேற்கொண்டுள்ளது.

''அனைவருக்குமான தொழில்வாய்ப்பினை நோக்கி'' என்பதே இத்திறன் அபிவிருத்தித் திட்டத்தின் தொனிப்பொருளாக அமைந்துள்ளது. இவ்வாறான அபிவிருத்தித் திட்ட மேம்பாட்டின் மூலம் தகுந்த தொழில் விருத்தியை உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாட்டிலும் தொழில் வாய்ப்புக்களை மேற்கொள்ள முடியும். இதனால் இன்றைய இளைஞர், யுவதிகள் மத்தியில் 2010 ஆம் ஆண்டளவில் சிறந்த தொழிலுக்கான கேள்வியினை முன்வைக்க முடியும்.

இவற்றுக்கான மொத்த மதிப்பீட்டுத் தொகையாக 980 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரவு செலவுத்திட்டத்தில் பதியப்பட்டுள்ளது. ஆயினும் உலகவங்கியால் ஒதுக்கீடு செய்யப்பட்ட 101.5 அமெரிக்க டொலர்கள் 825,000 இளைஞர்களுக்கு தொழில்வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ள உதவுமெனவும், இவர்களுக்கான தொழில் வாய்ப்புக்கள் தனியார் அரசாங்க தொழில்பயிற்சி நிலையங்களில தொடர்ந்து இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குளவி கொட்டுக்கு இலக்காகி 20 பேர் வைத்தியசாலையில்

அக்கரப்பத்தனை றொரின்டன் தோட்டத்தைச் சேர்ந்த 20 பேர் நேற்று குளவிக்கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

றொரின்டன் பெல்மதுரைப் பிரிவில் வேலை செய்துகொண்டிருந்த 19 தொழிலாளர்களும், தோட்ட உத்தியோகத்தர் ஒருவரும் குளவிக் கொட்டுக்கு இலக்கானதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் 20 பேரும் அக்கரப்பத்தனை பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களில் 17 பெண்களும், ஆண்கள் மூவரும் அடங்குவதாக மாவட்ட வைத்திய அதிகாரி ஆறுமுகம் ஜெயராஜன் கூறுகின்றார். மலையகத்தின் பல்வேறு பகுதிகளும் அண்மைக்காலமாக குளவிக்கொட்டுக்கு இலக்கானோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## பெண் கைதிகளுக்கு தொழிற்பயிற்சி

வெலிக்கடை ... ...ள பெண் ... ...ழில் பயிற்சி வழங்கும் திட்டம ஒன்று அடுத்த மாதம் 2ஆம் திகதி ஆரம்பமாகிறது. கொழும்பு மாவட்ட செயலகம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

சிகை அலங்காரம், அழகு சாதனம் மற்றும் பற்றிக் அலங்காரம் போன்ற பல்வேறு துறைகளில் இந்த பெண் கைதிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுமென கொழும்பு மாவட்ட செயலக மகளிர் அபிவிருத்தி அதிகாரி அனுராதா மாயாதுன்னே தெரிவித்தார். மகளிர் விவகார அமைச்சினால் இதற்கான நிதி ஒதுககப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## புலனாய்வு அதிகாரியை தாக்கிய பொலிஸ் பரிசோதகர் பணிநீக்கம்

இராணுவ புலனாய்வுப் பிரிவு அதிகாரியை தாக்கியதாக குற்றம் சுமத்தப்பட்ட பொலிஸ் பரிசோதகர் ஒருவர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

அம்பலாங்கொட பொலிஸ் நிலையத்தில் வைத்து இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தாக்குதலில் காயமடைந்த இராணுவ புல னாய்வுப் பிரிவு அதிகாரி பலபிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் அம்பலாங்கொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நேபாள வெளியுறவு அமைச்சர் இன்று இலங்கை விஜயம்

நேபாள வெளியுறவு அமைச்சர் மஹேந்திர பகதூர் பாண்டே இலங்கைக்கு இன்று விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 22 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை காத்மண்டுவில் நடைபெறவுள்ள 18 ஆவது தெற்காசிய ஒத்துழைப்பு நாடுகளின் தலைவர்களின் அமர்வுக்காக உத்தியோகபூர்வ அழைப்பை விடுப்பதற்காகவே அவர் இலங்கை வருகிறார்.

நேபாள பிரதமர் சுசில் கொய்ராலாவின் விசேட பிரதிநிதியாகவே பகதூர் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# தேர்தல் விதி மீறல்களில் ஈடுபடுகிறது ஆளும்கட்சி

### குற்றஞ்சாட்டுகிறது ஜே.வி.பி.

(ஊவா)

ஊவாவில் நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தல்களில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பல்வேறு தேர்தல் விதி மீறல்களில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு ஆளும் கட்சி தேர்தல் விதி மீறல்களில் ஈடுபடுவதற்கு ஜனாதிபதியே காரணம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியே தேர்தல் வன்முறைகள் மற்றும் தேர்தல் விதி மீறல்களில் அதிகம் ஈடுபட்டு வருவதாக ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதனைப் போன்று, மாகாணசபைத் தேர்தலில் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊவாமாகாணத்தில் அதிக எண்ணிக்கையிலான தேவையற்ற திறப்பு விழாக்கள் மற்றும ஜனாதிபதி தலைமையிலான நிகழ்வுகள் நடைபெற்று வருவதாகத் தெரிவித்துள்ளார்.

பொலிஸாரினால் ஜனாதிபதிக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாது எனவும் இதனால், பொலிஸார் வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்க வளங்களும் அரச அதிகாரிகளும் மிகவும் மோசமாக துஸ்பிரயோகம் செய்யப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்திருந்தால் இவ்வளவு பீதியடைய வேண்டியதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறெனினும் இந்த ஊவா மாகாண சபைத் தேர்தலில் அரசாங்கம் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றுக் கொள்ளாது என அவர் தெரிவித்துள்ளார்.

## நான்கு முத்திரைகள் வெளியீடு

(கொழும்பு)

கொழும்பில் நேற்று ஆரம்பமான ஆசிய பசுபிக் தபால் நிறைவேற்று சங்கத்தின் கூட்டத்தை முன்னிட்டு தபால் திணைக்களம் புதிதாக நான்கு ஞாபகார்த்த முத்திரைகள் வெளியிட்டுள்ளது.

முறையே 7 ரூபா, 10 ரூபா, 35 ரூபா மற்றும் 50 ரூபா பெறுமதி வாய்ந்த இந்த முத்திரைகளை பீ.இசுரு சத்துரங்க வடிவமைத்துள்ளார்.

ஞாபகார்த்த முத்திரைகளுடன் முதல் நாள் மேலுறைகளும் வெளியிடப்பட்டன. தபால் திணைக்களத்தின் முத்திரை பணியகம் இந்த முத்திரைகளை வெளியிட்டது.

அரசாங்கத்துக்கும் மற்றும் ரி.என். ஏக்கும் இடையே இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வு மூலமாக ஒரு தீர்வை காண்பதற்காக பேச்சு வார்த்தைகள் மற்றும் அரசியல் கலந்துரையாடல்கள் புத்துயிர் பெறக்கூடிய சாத்தியம் உள்ளது என்கிற நம்பிக்கைகள் இப்போது அரும்பி உள்ளன.

இரு தரப்பினரும் கடந்த காலத்தை திரும்ப நோக்கி மற்றும் அதே பழைய தவறுகளை அவர்கள் திரும்பவும் செய்யாதிருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இதன் கருத்து அவர்கள் புதிய தவறுகள் செய்வதற்கு இடம் கொடுக்கலாம் என்பதல்ல.

இன்றைய அரசாங்கத்துக்கும் மற்றும் தமிழ் சமூகத் தலைவர்களுக்கும் இடையே கடந்த காலங்களில் பரஸ்பர நம்பிக்கைக்கு உரிய மூலகங்களை அடையாளம் காண்பதைக் காட்டிலும் அதிகம் அவ நம்பிக்கையை வைப்புச் செய்வதையே இது ஆரம்பித்து வைத்தது.

விசாரணையில் ரி.என்.ஏ, நாட்டின் கொள்கை வகுப்பாளர்களும் மற்றும் ஆயுதப்படையினரும் தொடர்புடைய பொறுப்புக்கூறல் விடயத்தை பின்னிணைப்பது, இடைவிட்டு சாட்டப்படும் சிங்களக் குடியேற்றம் பற்றிய குற்றச்சாட்டுகள் என்பன அரசியல் பேச்சு வார்த்தைகளின் பகுதியல்ல.

இருந்தும் நாட்டிற்கு உள்ளேயும் மற்றும் வெளியேயும் உள்ள தமிழ் பொதுமக்கள் குழுக்களின் அழுத்தம் காரணமாக ரி.என்.ஏ ஒன்றின் பின் ஒன்றாக அவைகளை தனது கோரிக்கைப் பட்டியலில் சேர்க்கிறது.

இனப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வை வழிநடத்தக் கூடிய ஒரு அரசியல் பேச்சு வார்த்தையை அரசாங்கம் மேற்கொள்வது, ஐநா மனித உரிமை சபை முன்னணியின் கவலைகள் காரணமாக தடை பட்டிருக்கலாம். ரி.என்.ஏ பொறுப்புக்கூறல் விடயத்தையும் மற்றும் இராணுவத்தை அகற்றும் விடயத்தையும் தனது பட்டியலில் சோத்திருப்பதனால்,

அடிப்படையாக கொண்டிருத்தல் வேண்டும்.

இராணுவத்தை அகற்றுதல் மற்றும் குடியேற்றத்தை அகற்றுதல் உட்பட ஏனைய விடயங்கள் மேற்குறித்த பேச்சு வார்த்தைகளுக்கு வெளியே கையாளப்படவேண்டும். ஒருவேளை பாராளுமன்றம், நாட்டிலுள்ள மனித உரிமை மற்றும் நீதித்துறை போன்ற பொறிமுறைகளால் கையாளப்படலாம்.

அரசாங்கமும்கூட நாட்டிலுள்ள பெருந்தொகையான தமிழ் மக்கள் மற்றும் ரி.என்.ஏ என்பவற்றை அணுகி தொடர்புகளை மேற்கொள்ளும் அதேவேளை எச்சரிக்கையுடன் கூடிய நம்பிக்கையை வெளிக்காட்ட வேண்டும். அப்படிச் செய்யும்போது அரசாங்கம் அதை நாட்டின் மக்கள் தொகையில் இனம், மொழி, மற்றும் மதச்சட்டத்தை மதிக்கும் பிரிவுகள் என்பனவற்றை ஒருபுறம் பாதுகாப்பதுடன், நாட்டின் இறைமை,பிராந்திய ஒருமைப்பாடு என்பனவற்றை பாதுகாக்கும் அதன் உள்ளார்ந்த பொறுப்பை அடிப்படையில் இன்றிமையாததாக்குகிறது.



# ரி.என்.ஏ யானது எல்.ரீ.ரீ.ஈ யின் குணாதிசயங்களையும் தந்திரங்களையும் தொடர்ந்து கைக்கொண்டு வருகிறது



**என்.சத்தியமூர்த்தி கட்டுரையிலிருந்து**

**அரசியல் யதார்த்தத்தை ரி.என்.ஏ புரிந்து கொள்ளவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ இல்லை, ஏக பிரதிநிதியாக இருக்க வழி தேடுவதன் மூலம் நாட்டின் பெரும் பகுதியில் வாழும் பெரும்பான்மை சிங்கள மக்களின் மனங்களில் சந்தேக விதைகளை விதைக்க நேரிடுகிறது. இது எல்.ரீ.ரீ,ஈ தனது கொடுமையானதும் மற்றும் குரூரமானதுமான நடவடிக்கையினால் தனது சொந்த தமிழ் மக்களின் ஒவ்வொரு மாற்றுக் கட்சி பிரதிநிதியையும் ஒருவர் பின் ஒருவராக கொன்றொழித்தது மூலம் கற்பித்த கோஷமும் அடையாளமும் ஆகும்.**

சுதந்திரம் பெற்ற ஐம்பதாம் ஆண்டுகள் தொடக்கம் உள்ள கடந்தகால அனுபவங்கள் மீது பழிசுமத்தி மறுபக்கத்தினர் செய்ததை அல்லது செய்யாததை அவர்கள் கணக்கிட்டனர். வழமையாக இந்த நடவடிக்கைகளில் தங்கள் சொந்தப் பங்களிப்பை ஒப்புக் கொள்வது அவர்களுக்கு இயலாததாக இருந்தது.

ஐம்பதுகளில் இடம்பெற்ற பண்டா செல்வா ஒப்பந்தம் இன்னமும் சுட்டிக் காண்பிக்கப்படும் ஒரு விடயமாக உள்ளது. அது தோற்றுப் போனதுக்கு அப்போதிருந்த பிரதம மந்திரி காலம் சென்ற எஸ்.டபிள்யு.ஆர்.டி பண்டார நாயக்கா தனது அர்ப்பணிப்பிலிருந்து பின்வாங்கியது மட்டும் காரணமில்லை.

அந்த ஒப்பந்தம் கையெழுத்தான மூன்று நாட்களுக்குப் பிறகு தமிழ் தலைவர் காலம் சென்ற எஸ்.ஜே.வி. செல்வநாயகம் மட்டக்களப்பில் நடைபெற்ற பேரணி ஒன்றில் கிளர்ச்சி செய்யும் ஆதரவாளர்கள் முன்பாக “இது முதல் படி மட்டுமே” என அறிவிப்புச் செய்தார். யுத்தத்தின் பின்னர் ரி.என்.ஏ தலைவர் சம்பந்தன், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்துடனான பேச்சு வார்த்தைகள் நடக்கும்போது கிட்டத்தட்ட இதே போலத்தான் சொன்னார்.

ரி.என்.ஏ யின் கோரிக்கைகளில் புதிதாக சேர்ந்துள்ள ஒரு அங்கம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தில் இடம் பெறும் அமெரிக்காவின் போர்க்குற்றப் பிரேரணைக்கு பாராட்டு தெரிவிப்பது.

கட்சியானது ஒரு அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தை நடத்தும்போது, இழந்துவிட்ட பொறுப்புக்கூறல் விடயங்களைப் பற்றியும் அது கோரிக்கை வைத்தது. அது நிச்சயம் பின்விளைவுகளை ஏற்படுத்தியிருக்கும்.

அரசாங்கம் தொடர்ச்சியாக குற்றம் சாட்டுவது ரி.என்.ஏ அடிக்கடி புதுப்புது கோரிக்கைகளுடன் வருகிறது என்று. வடக்கில் இராணுவத்தை அகற்றும் கோரிக்கை, ஐநா மனித உரிமை சபை

அரசாங்கம் இந்தக் கட்சிக்கு கேக்கும் முழுதாய் வேண்டும் அதே நேரம் அதைச் சாப்பிடவும் வேண்டும் போல இருக்கிறதே என்று எண்ணியிருக்கலாம்.

ரி.என்.ஏயின் மறக்கமுடியாத இந்த எல்.ரீ.ரீ.ஈ குணாதிசயங்கள் மற்றும் தந்திரங்கள் காரணமாக அது ஒவ்வொரு முறையும் முன்பு சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலின் பகுதியாக புதுப்புது கோரிக்கைகளை சேர்ப்பதினால், அரசாங்கம் அதன் குறித்த இலக்குக்கு அப்பால் செல்வதை விரும்பாமலிருக்கலாம்.

ரி.என்.ஏ, எல்.ரீ.ரீ,ஈயின் தேய்ந்துபோன தந்திரோபாயங்களை விரிவு படுத்துகிறது என்கிற அபிப்ராயத்தை அழிக்க ரி.என்.ஏ எதுவித முயற்சியும் மேற்கொள்ளவில்லை. ஐ.நா. மனித உரிமை சபை விசாரணை மற்றும் கோரிக்கைகளை அடையாளம் காட்டியதன் பின்னர் அது இன்னும் அதிகமாகியுள்ளது. அது நாட்டின் ஆயுதப்படையினரையும் சம்பந்தப்படுத்துவதாக உளளதால், தற்போது கொழும்பில் ஆட்சி நடத்தும் அரசாங்கத்தின் இடத்தில் இருக்கும் எந்தவொரு அரசாங்கமும் இந்த விடயத்தில் இதை விட இன்னும் அதிமாக அக்கறை காட்டவே செய்யும்.

இப்போது ஜெனிவா நடவடிக்கை, இனப் பிரச்சினைக்கு அவசியமான அரசியல் தீர்வை வழங்க உதவாமல் அரசாங்கம், ஆயுதப்படை அல்லது இரண்டையும் தண்டிக்கும் நடவடிக்கையாக மட்டுமே உள்ளது என்று ரி.என்.ஏ உணர்ந்துள்ளது போலத் தெரிகிறது. அதனால் முந்தைய ஒன்றிரண்டு வருடங்களை விட இப்போது 13 ஏ கூட்டமைப்பின் அறிக்கைகளில் நன்கு புலப்படும் ஒன்றாக மாறிவிட்டது.

புத்துயிர் பெறும் எந்த அரசியல் பேச்சு வார்த்தையும் சாத்தியமான வெற்றியை பெறுவதற்கு இரண்டு பகுதியினரும் கையிலுள்ள நடவடிக்கைகளில் அரசியலைக் கலக்கக் கூடாது. அது பிரத்தியேகமான முறையில் அதிகாரப் பகிர்வு சம்பந்தமான விடயங்களை மட்டுமே

அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், ல்.ரீ.ரீ.ஈக்கு என்ன பிரயோகிக்கப்பட்டதோ அதுதான் ஜேவிபி போராளிகளுக்கும் பிரயோகிக்கப் பட்டது. முதலாவது ஜேவிபி கிளர்ச்சி நடந்தபோது நாடு கொண்டிருந்த சடங்கு முறையான இராணுவத்தைக் காட்டிலும் இன்று இலங்கை ஆயுதப் படைகள் பல , மடங்கு முன்னிலையில் உள்ளார்கள்.

அந்த நேரம் ஆட்சியிலிருந்த அரசாங்கத்துக்கு எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய போர்க்குண சாத்தியத்தை பற்றிய விழிப்பு ஏற்படவில்லை. அதனால் தேசம் முந்தையதைக் காட்டிலும் நீண்டதும் செலவு மிக்கதுமான பிந்தைய கிளர்ச்சியில் இனப் பிளவுகளின் இரு புறத்திலும் பெரும் விலையை கொடுக்க நேர்ந்தது.

யாராவது கூச்சல் குழப்பம் ஏற்படுத்தி துன்புறுத்தும் உணர்வுகளைக் காட்டாமல் இருந்தால், பயங்கரவாதத்துக்கு எதிராக பெற்ற வெற்றியைப் பற்றி அரசாங்கம் நீண்டகாலத்துக்கு பேசிக்கொண்டிருக்க முடியாது. அப்படி பேசுவது சமூக அரசியல் நல்லிணக்கம் ஆகாது.

மாறாக ஒரு வெற்றிகரமான யுத்தத்துக்கு பிந்தைய அரசாங்கம் துணிவு மற்றும் உறுதி, நம்பிக்கை மற்றும் உத்தரவாதம் என்பனவற்றுடன் பேச்சு வார்த்தைகளை நடத்த வேண்டும். ஒரு முறை அதைச் செய்துவிட்டால் அதனால் அதை எப்போதும் செய்ய முடியும், அதற்கேற்ற அணுகுமுறை யும் நடத்தையும் இருக்கவேண்டும். போர்

முடிந்து முழுதாக ஐந்து வருடங்களுக்குப் பிறகு குறைந்தது இப்போதாவது அதைச் செய்திருக்க வேண்டும்.

ஒரு பேச்சு வார்த்தைக்கு இசைவான மிகவும் தீவிரமான விடயங்கள் உள்ளன. அரசியல் யதார்த்தத்தை ரி.என்.ஏ புரிந்து கொள்ளவோ அல்லது ஏற்றுக்கொள்ளுவோ இல்லை, ஏக பிரதிநிதியாக இருக்க வழி தேடுவதன் மூலம் நாட்டின் பெரும் பகுதியில் வாழும் பெரும்பான்மை சிங்கள மக்களின் மனங்களில் சந்தேக விதைகளை விதைக்க நேரிடுகிறது. இது எல்.ரீ.ரீ,ஈ தனது கொடுமையானதும் மற்றும் குரூரமானதுமான நடவடிக்கையினால் தனது சொந்த தமிழ் மக்களின் ஒவ்வொரு மாற்றுக் கட்சி பிரதிநிதியையும் ஒருவர் பின் ஒருவராக கொன்றொழித்தது மூலம் கற்பித்த கோஷமும் அடையாளமும் ஆகும்.


வடக்கு மாகாணசபை தேர்தல்களும் மற்றும் அதன் முடிவுகளும் ரி.என். ஏயின் கோரிக்கைகளுக்கு குறிப்பிட்ட சில நியாயங்களை வழங்கியிருக்கலாம். அதற்கு முன் மார்ச் 2010இல் நடந்த பாராளுமன்ற தேர்தலில் அதற்கு முன் நடந்த ஜனாதிபதி தேர்தலில் ரி.என்.ஏ ஆதரவுடன் சரத்பொன்சேகா பெற்ற வாக்குகளில் ஐம்பது வீதத்துக்கும் சற்று அதிகமான வாக்குகளையே ரி.என்.ஏ பெற்றது.

ரி.என்.ஏயில் உள்ள சிலர் இப்போது விவாதிப்பது ரி.என்.ஏயின் ஆதரவு சரத் பொன்சேகாவின் தோல்வியை உறுதி செய்ததுடன், ஆட்சியில் இருந்த ராஜபக்ஸவை வெல்லச் செய்தது என்று. அதற்கு ஐந்து வருடங்களுக்கு முன்னர் எல்.ரீ.ரீ,ஈ தமிழர்களின் தேர்தல் புறக்கணிப்பை உறுதி செய்ததினால் ராஜபக்ஸ வென்றார்.

அரசியல் மற்றும் சமூகத்திலுள்ள தமிழ் தலைவர்கள், தேசிய வாக்காளர்களின் மனநிலையை மதிப்பீடு செய்வதிலும் மற்றும் அரசியல் மற்றும் தேர்தல்களில் தமது மக்களை வியூகம் அமைப்பதிலும் தங்களது இயலாமையை எற்றுக்கொள்ள வேண்டியது அவசியம். தேசிய அரசியலில் “அவர்களது தனிமைப்படுத்தப்பட்ட அணுகுமுறை தலைமைத்துவத்துக்கோ அல்லது சமூகத்துக்கோ எதுவித உதவியையும் செய்யவில்லை.

# 2015 வரவு செலவு திட்டத்தில்

## கல்வி,சுகாதாரத்துறைக்கு அதிகநிதி



(கொழும்பு)

2015ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் 7ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட உள்ளது

நிதி அமைச்சரும் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கவுள்ளார்.

நிதி அமைச்சர் என்ற ரீதியில் தொடர்ச்சியாக பத்தாவது தடவையாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கவுள்ளார்.

மனித வளங்களை அடிப்படையாகக் கொண்ட ஒர் வரவு செலவுத் திட்டமாக இந்த வரவு செலவுத் திட்டம் அமையும எனத் தெரிவிக்கப்படுகிறது.சுயதொழில். தொழில் வாய்ப்பு உள்ளிட்ட காரணிகள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளதாக திறைசேரி அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

மேலும் வேலைவாய்ப்பு. சுய தொழில் முயற்சி. தொழில் பயிற்சி என்பவற்றுக்கும் தொழில நுட்ப திறன் அபிவிருத்தி. மூன்றாம் நிலை கற்கைகளுக்கும் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது எனவும்.

சுகாதாரம் மற்றும் கல்வித்துறைக்கான ஒதுக்கீடுகள் அதிகரிக்கப்பட உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.வரவு செலவுத் திட்ட தயாரிப்பு குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாக திறைசேரி அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை. ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்து இந்த வரவு செலவுத் திட்டம் அமையக் கூடுமென அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் சம்பள உயர்வுகளை எதிர்பார்க்க முடியும் எனவும் தெரிவிக்கின்றனர். மேலும். நவம்பர் மாதம் 7ஆம் திகதி வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுவதன் மூலம். ஜனாதிபதி தேர்தல் முன்கூட்டியே நடத்தப்படலாம் என்ற ஊகமும் வெளியிடப்பட்டுள்ளது.

# ஊவா மாகாணசபை தேர்தல் பாதுகாப்பு அதிகரிக்கப்படும்

## பொலிஸ் தலைமையகம் அறிவிப்பு

(கொழும்பு)



ஊவா மாகாணத்தின் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவிக்கின்றது.

சுந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் ஒன்றை நடத்துவதே இந்த நடவடிக்கையின் நோக்கம் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

தேர்தல் தினத்தன்று வாக்காளர்கள் வாக்களிப்பு நிலையங்களுக்கு அச்சமின்றி செல்வதற்கான உரிமை உறுதிப்படுத்தப்படும் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்

தேர்தல் தினத்தன்று வாக்காளர்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் கைபற்றப்படுவதுடன் சாரதிகளும் கைது செய்யப்படுவார்கள் என அவர் தெரிவித்துள்ளார்

அதேபோன்று வாக்களிப்பு நிலையங்களுக்கு அருகில் எவரேனும் துண்டுபிரசுரங்கள் போன்றவற்றை விநியோகிப்பார்களாயின் அவர்களும் கைது செய்யப்படுவார்கள் என பொலிஸ் ஊடகப் பேசசாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்

# ஹோட்டல்களில் தங்குவோரின் விபரங்கள் திரட்டப்படுகின்றன

(கொழும்பு)

ஹோட்டல்களில் தங்குவோரின் விபரங்களை புலனாய்வுப் பிரிவினர் திரட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஹோட்டல்கள். விடுதிகளில் தங்கியிருக்கும் உள்நாட்டுப் பிரஜைகளின் பெயர் விபரங்கள். முகவரிகள். தங்கியிருந்த நாட்களின் எண்ணிக்கை. தங்கிய தினம் போன்ற விபரங்களை பொலிஸார் திரட்டி வருகின்றனர். மனைவி. பிள்ளைகளுடன் ஹோட்டல்களில் தங்கியிருப்போர் பற்றிய தகவல்களும் திரட்டப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் ஹோட்டல் மற்றும் விடுதி நிர்வாகங்களுக்கு பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இந்த தகவல்கள் நாள்தோறும் பொலிஸாருக்கு வழங்கப்பட வேண்டும். அத்துடன் இந்த தகவல்கள் மாவட்ட புலனாய்வுப் பிரிவிற்கு அனுப்பி வைக்கப்படுகின்றது.

அந்த தகவல்களை தேசிய புலனாய்வுப் பிரிவினர் திரட்டுகின்றனர். எனினும். இவ்வாறு தகவல்கள் திரட்டப்படுவதனால வாடிக்கையாளர்களின் அந்தரங்கத்தன்மைக்கு குந்தகம் ஏற்பட்டு வருவதாக ஹோட்டல் விடுதி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். இதனால் வாடிக்கையாளர்களின் வரவு குறைவடையக் கூடிய அபாயம் காணப்படுகின்றது எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

# தேர்தல் பிரசார நடவடிக்கையாக கைப்பைகளை வழங்கிய வேட்பாளர்

(கொழும்பு)



ஆளும் கட்சியைச் சேர்ந்த வேட்பாளர் ஒருவர் மொனராகல் மாவட்டத்தில் பெண்களுக்கான கைப் பைகளை அவரின் விருப்பத் தேர்வு இலக்கத்தை அச்சிட்டு விநியோகித்துள்ளார் என தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

ஊவா மாகாண சபைத் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் தற்போது உச்சக்கட்டத்தை நெருங்கியுள்ளன. இந்நிலையிலேயே மொனராகல மாவட்டத்தில் ஆளும் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் இவ்வாறு பெண்கள் பயன்படுத்தும் 2 இலட்சம் கைப் பைகளில் தேர்தலில் அவரின் விருப்பு இலக்கத்தை அச்சிட்டு விநியோகித்துள்ளார் என்று அந்த அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இந்தக் கைப்பைகள் மௌதகம. நொச்சியாகம பகுதிகளில் தயாரிக்கப்பட்டு அங்கிருந்து கடந்த 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மொனராகல மாவட்டத்துக்கு கொண்டு வரப்பட்டு விநியோகிக்கப் பட்டதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்பான "கபே" இன் தலைவர் ரஜித் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார். அத்துடன் இது தேர்தல் சட்ட விதிகளுக்கு முரணானது என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

# குழந்தை கடத்தல் பெண்ணுக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

நான்கு வயது 3 மாதங்களேயான குழந்தை கடத்தலுடன் தொடர்புடையதாக கூறப்படும் இலேபெருமஆராச்சிகே காமினி(32) என்பவரை எதிர்வரும் 24 ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு குருநாகல் நீதவான் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

குருநாகல். கனேவத்தை. அம்பகொலவெவ பிரதேசத்தில் உள்ள வீட்டில் தூங்கிகொண்டிருந்த நான்கு வயது 3 மாதங்களேயான பமாரா கேஷனி பண்டார என்ற சிறுமி கடந்த 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை கடத்தப்பட்டு வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டார்

சம்பவத்துடன் தொடர்புடையதாக கூறப்படும் பிரதான சந்தேகநபரின் சகோதரன் மற்றும் அவர்களுடைய தாய் ஆகிய இருவரையும் எதிர்வரும் 24 ஆம் திகதிவரையிலும் முன்னதாகவே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரிசியை குறைந்த விலையில் விற்பனை செய்யுமாறு பணிப்பு

(கொழும்பு)

குறித்த நிர்ணய விலையை விடவும் குறைந்த விலைக்குத் அரிசியை மக்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கூட்டுறவு ,உள்ளூர் வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாந்து சதொச தலைவருக்கு உத்தரவிட்டுள்ளார்.

சந்தையில் அரிசி விலைகள் உயர்வடைந்துள்ள நிலையில் பிரதான நகரங்களிலுள்ள சதொச வர்த்தக நிலையங்களினூடாக நிர்ணய விலையை விட குறைந்த விலைக்கு அரிசியை விற்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

இதன்படி சம்பா 76 ரூபாவுக்கும். வெள்ளை அரிசி 64 ரூபாவுக்கும். வெள்ளை நாட்டரிசி 67 ரூபாவுக்கும் விற்கப்படுகிறது கடந்த காலத்தில் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டதுடன் அரிசி விலை உயர்வு காரணமாக மக்களுக்கு குறைந்த விலையில் சதொச ஊடாக அரிசி வழங்க நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

# அரசின் மீது முஸ்லிம் மக்கள் அச்சம் அடையதேவையில்லை

## கிழக்கு மாகாண இராணுவ கட்டளைத்தளபதி தெரிவிப்பு



(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் பொது பலசேனாவுக்கும் இடையில் எவ்விதமான தொடர்பும் இல்லை என்பதுடன் அரசாங்கத்தின் மீது முஸ்லிம் மக்கள் எந்தவிதமான சந்தேகங்களும் அச்சமும் கொள்ளத் தேவையில்லை எனவும் கிழக்கு மாகாண இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் லால் பெரேரா தெரிவித்துள்ளார்.

திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள வறிய குடும்பத்துக்கு. இராணுவத்தினரின் உதவியுடன் நிரந்தர வீடொன்றை கையளிக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.


பொதுபல சேனாவுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில தொடர்பு இருப்பதாக முஸ்லிம் மக்களிடம் ஒரு சந்தேகம் இருக்கின்றது. இதனை நிவர்த்தி செய்யும் வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அது தொடர்பில் உங்கள் கருத்து என்ன? என்று ஊடகவியலாளர் கேள்வி எழுப்பியிருந்தார்.

அதற்கு பதிலளித்த கிழக்கு மாகாண இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் லால் பெரேரா. இது தொடர்பிலான பல சந்தேகங்களுக்கு முஸ்லிம் மக்கள் தெளிவு பெறும் வகையில். அண்மையில் பாதுகாப்பு செயலாளர். ஊடகங்கள் மூலமாக. விரிவான விளக்கம் ஒன்றினை தெரியப்படுத்தியுள்ளார்.

எனவே. அரசாங்கம் மக்களின் பாதுகாப்பிலும் அபிவிருத்தி விடயங்களிலும் கரிசனையுடன் உள்ளது. பொய் பிரசாரங்களின் மூலம் முஸ்லிம் மக்கள் அரசாங்கம் மீது அச்சம் கொள்ளத தேவையில்லை என்றார்.

# அளுத்கமவில் துப்பாக்கிச் சூடு நடத்தியோரை கைது செய்ய உத்தரவு

(கொழும்பு)




அளுத்கம பிரதேசத்தில் இடம் பெற்ற வன்முறைச் சம்பவத்தில் உயிரிழந்த இருவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களை கைது செய்யுமாறு களுத்துறை மேலதிக் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஜுன் மாதம் 15ஆம் திகதி அளுத்கம பிரதேசத்தில் இடம் பெற்ற மோதல் சம்பவத்தில் இரண்டு முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டிருந்தனர். இந்த இருவரும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியே கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்துடன் தொடர் புடையவர்களை உடனடியாக கைது செய்யுமாறு நீதவான் ஆயேஸா ஆப்தீன் கடந்த வாரம் உத்தரவிட்டுள்ளார்.


இச் சம்பவத்தில் அளுத்கம தர்கா நகரைச் சேர்ந்த மொஹமட் சஹிப் மற்றும் மொஹமட் சிஹான் ஆகியோர் கொல்லப்பட்டனர். இந்த சம்பவம் குறித்த விசாரணைகளை கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவினர் முன்னெடுத்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மண்டைதீவு பிரதான வீதியின் புனரமைப்பு பணிகள் இடம்பெற்று வரும் வேளையில் அந்த வீதியிலுள்ள 12 பாலங்களில் 2 பாலங்களுக்கான புனரமைப்பு வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இந்த வீதியில் உள்ள பாலங்களில் 3 சிறியவை ஏனையவை பெரிய பாலங்கள் ஆகும். இந்த 12 பாலங்களில் 10 கட்டி முடிக்கப்பட்ட நிலையில் எஞ்சியுள்ள இரண்டு பாலங்களுக்கான புனர்நிர்மாண வேலைகள ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருவதனைக் காணலாம். (எஸ்.51)

# தலைமுறைகள் தாண்டிய தேசியவாதத்தை கைவிட்டு யதார்த்தமாக மக்களை வழிநடாத்த உழைக்க வேண்டும்

## - யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெகன் தெரிவிப்பு -



(யாழ்ப்பாணம்)

இளைப்பாற வேண்டிய நிலையில் இருக்கும் தமிழ்த் தேசியத் தலைவர்களது தற்போதைய அரசியல்நீரோட்டம் இன்றைய காலத்திற்கு என்றுமே ஏற்புடையதாக இருக்கப் போவதில்லை. இவர்கள் கூறி வரும்அரசியல் நோக்கங்களும் இரண்டு தலைமுறைகள் தாண்டி களைத்துப் போய்விட்டன - என யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி.ஒருங்கிணைப்பாளர் வி.கே.குகேந்திரன் (வி.கே.ஜெகன்)தெரிவித்தார்.

நல்லூர் ஜே / 104 பகுதி மக்களது அடிப்படை வாழ்வாதார பிரச்சினைகள் தொடர்பாக மக்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் சந்திப்பு அப்பகுதி சனசமூக நிலையத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஒருங்கிணைப்பாளர் வி.கே. ஜெகன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் -

ஆயுதப் போராட்டத்தில் தோல்விகண்ட எமது இனம் சாத்வீக போராட்டத்துக்கு மறுபடியும் தள்ளப்படுவது என்பது இதுநாள்வரை தேசியம் பேசியவர்களது அரசியல் தோல்வியையே கூறிநிற்கின்றது. இதனால தான் தற்போதைய தமிழ் தேசியக் கூட்டமைப்பிலுள்ள பலர் இவர்களது கொள்கையை நிராகரிக்கும் நிலைக்கு வந்துவிட்டதுடன் தற்போது தமிழரசுக் கட்சியில் பல மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்த மாற்றத்தின் மூலம் இதுவரை காலமும் தமிழ் மக்கள் அனுபவித்த துன்பங்களுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் யதார்த்த ரீதியான ஒரு கட்டுமானத்தை தற்போதைய தலைமை செய்ய முன்வருமா என்றால் அதுவும் கேள்விக்குறியாகத்தான் உள்ளது.

இவர்களது தவறுகளைச் சுட்டிக்காட்டுவதற்கும் ஆராய்வதற்கும் எந்த ஊடகங்களும் கூட முன்வருவதில்லை.

தமிழர்களின் உணர்வுகளை தூண்டிவிடுவதற்காக 1949இல் செல்வநாயகத்தால் வடக்கு - கிழக்கில் உருவாக்கப்பட்ட தமிழரசு கட்சி இன்றுவரை தமிழ இனத்தின் தீர்வுக்கான எந்தவொரு திடமான அடித்தளத்தையும் இட்டதாக தெரியவில்லை.

அன்றைய தமிழரசுக் கட்சியின் தலைமையின் கீழ் இருந்து தோற்றம் பெற்ற தமிழர் விடுதலைகூட்டணி 1976இல் பண்ணாகத்தில் நடந்த மாநாட்டில் "வட்டுக்கோட்டைத் தீர்மானம்" என்ற ஒரு தீர்மானத்தை மக்களிடம் முன்வைத்தது. இதன் அடிப்படையில் இலங்கையில் தனி தமிழீழ நாட்டை உருவாக்க வேண்டும் என பிரகடனம் செய்தது. இந்த தீர்மானத்தை வலுப்படுத்த அன்றைய தமிழ் சமூகத்தினரை இரத்தம் சிந்த முன்வருமாறு உணர்ச்சிவசனம் பேசி ஆயுதப் போராட்டத்திற்குள் கால்பதிக்கச் செய்தனர்.

1976இல் இருந்து ஆரம்பமான போராட்டத்துக் கும் அதனால் தமிழ்மக்கள் எதிர்கொள்ள நேர்ந்த அழிவுகளுக்கும் இந்த இலக்கற்ற தேசியப் பேச்சுக்கள்தான் காரணம். 1956 இல் இருந்து இன்றுவரை தமிழ் மக்களின் அதிகவாக்குகளைப் பெற்று தமிழர்களின் ஏக பிரதிநிதி என்று கூவித்திரியும் தேசியவாதம் பேசுபவர்கள் தமிழ் மக்களின் துன்பங்களை வைத்து குளிர் காய்ந்து வருவதுதான் வேதனையான விடையமாக உள்ளது என்றார்.

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

துணுக்காய் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மல்லாவி பொது நூலகவளாகம் முதல் மல்லாவி நகரம் வரை ஜனாதிபதி செயலக பணியினரால் வாரம் தோறும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் பிரதேச சபையின் பொதுநூலக வளாகத்தினை பிரதேச சபைச்செயலாளர் சத்தியநாதன் தலைமையில் டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு விசேட சிரமதானப்பணிகள் இடம் பெற்றன. இதில் மல்லாவி இராணுவத்தினர் தொடக்கம் பொலிஸார் உட்பட பிரதேசசபை உத்தியோகத்தர்கள் பணியாளர்கள் என 60இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு சிரமதான பணியை மேற கொண்டனா. (140)

# முரசின் இன்றைய பலன்



(16.09.2014 செவ்வாய்க்கிழமை)

ஜய வருஷம் ஆவணி மாதம் 31 ஆம் திகதி.
சித்தம் / அட்டமி.
மிருகசீரிட நட்சத்திரம் பின்னிரவு பின் திருவாதிரை
இராகு காலம 03.03 - 04.33 வரை. சுபநேரம 10.33 - 12.03 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | புதிய நிலையம் திறக்கும் முயற்சிக்காக வெளிநாட்டிலிருந்து பணவரவை எதிர்பார்த்தல். வாடகை அதிகரித்துக காணப்படுவதினால் குடியிருக்கும் மனையைக் கைவிட்டு விடத்தீர்மானித்தல். |
| ரிஷபம் | தேங்கிய பொருட்களை விற்பனை செய்ய அதிரடிக் கழிவு முறையை மேற்கொள்ளல். வீண்பழி சுமத்தப்பட்ட நிலையை நினைந்து மனத்துயரில் மூழ்குதல். |
| மிதுனம் | சனீஸ்வரபலன் கெடுதியைக் கொண்டுவரலாமென நினைந்து பயணத்தைக் கைவிட்டு விடல். காதலில் வீசிய புயல் நீங்கியதினால் மனமகிழ்வேற்படல். |
| கடகம் | தாமரை இலைநீர் போல அயலவர்களுடன் உறவைப் பேணவும். மாணவர்கள் இலட்சிய நோக்குடன் செயற்படுவது கண்டு பெற்றோர் மகிழ்வடைதல். |
| சிம்மம் | எதிர்பாராது ஏற்பட்ட சுபகாரியத்தைக் கொண்டாட பணத்திற்கு கையேந்தும் நிலை தக்க வைத்தல். அரசுப்பணியில் உள்ளோருக்கு மேலதிக பொறுப்புக்கள் சுமத்தப்படலாம். |
| கன்னி | பணியகத்தில் அவசர முடிவினை எடுப்பதைக் கைவிட்டால் நன்மையுண்டு. தொழிலில் மந்த நிலை அற்றுப்போதல். |
| துலாம் | கடந்த காலத்தில் ஏற்பட்ட சம்பவத்தை நினைந்து துயரடைதல். குடும்பத்தின் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்ய விழைதல். |
| விருச்சிகம் | குடும்பத்தின் நன்மைகருதி பாவனையை விட்டுவிடல். பாதுகாப்பில் கவனமெடுத்ததினால் திருடரின் முயற்சி முறியடிக்கப்படல். |
| தனுசு | வாக்குவன்மையால் காரியசித்தி ஏற்படல். வீண்வாக்கு வாதத்தை கைவிடுதல் நன்று, குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். |
| மகரம் | சாட்சி மீது அச்சுறுத்தல் செய்ய முயன்ற வரை காவல் துறை கைது செய்தல். பெற்றோரின் வற்புறுத்தலால் விருப்பமின்றி திருமணத்துக்கு சம்மதித்தல். |
| கும்பம் | உறவில் கைகொடுக்க முன்வருதல். நோய் குணமடையும் பொருட்டு தெய்வதலத்திற்கு தீர்த்தயாத்திரை செல்தல். |
| மீனம் | மன அழுத்தத்தைக் குறைக்க நண்பர் சகிதம் சுற்றுலா சென்று வர முயற்சி எடுத்தல். குழந்தைப்பாக்கியமின்றி பிறர் பிள்ளையைத் தத்தெடுக்க விரும்பும் முயற்சியில் ஈடுபடல். |

# பேருந்திலிருந்து வெற்றிலையை உமிழ்ந்ததால் வீதியில் சென்றவருக்கு இடைஞ்சல்

பேருந்துகளில் பயணிக்கும் பயணிகள் ஏனையவர்களின் சிரமங்களைப்பாராது பேருந்து நகரும் போது கண்ணாடி, ஜன்னல் வழியாக வெற்றிலையை மென்று வெளியே துப்பியும், தண்ணீரால் கைகளைக் கழுவியும் வருகின்றனர். இதனால் வீதியால் பயணிப்போரும் அலுவலகங்களுக்கு செல்வோரும் பெரும் இன்னல்களை எதிர்நோக்குகின்றனர்.

இவ்வாறான சம்பவமொன்று இருபாலைப் பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

நேற்றையதினம் அச்சுவேலி - யாழ்ப்பாணம் ஊடாக சென்ற தனியார் பேருந்தில் பயணித்த ஒருவர் வெற்றிலையைமென்று வீதியில் உமிழ்ந்து அநாகரீகமாக செயற்பட்டதால் அப்பகுதியால் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவா தனது அவசர தேவையை நிறைவேற்ற முடியாது ஆடையில் வெற்றிலை. கறைபடிந்த படி நின்றதாக தெரிவித்துள்ளார்.

இந்தச்சம்பவம் இருபாலை வீதியில் வைத்து இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. எனவே இவ்வாறான சம்பவங்கள இடம்பெறாது தடுக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி,51)

# தேசிய மட்ட பளு தூக்கல் போட்டி வடமாகாணத்திற்கு ஆறு பதக்கம்

(கண்டி)

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான பளு தூக்கல் போட்டியில் வடமாகாணம் வீரர்கள் ஆறு பதக்கங்களை வென்று அசத்தியுள்ளனர்.

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் ஆண், பெண்களுக்கான பளு தூக்கல் போட்டி கண்டி உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்று வருகின்றது.

நிறை அடிப்படையில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் நேற்றுக் காலை வரை வடமாகாண வீரர்கள் ஒரு தங்கம் உட்பட ஐந்து பதக்கங்களை வென்றுள்ளனர்.

இதில் 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான 64 கிலோ எடைப் பிரிவில் யாழ். மத்திய கல்லூரி வீரர் விஸ்ணுகாந் 165 கிலோ எடையைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும், ஆண்களுக்கான 17 வயதுப் பிரிவின் 50 கிலோ பிரிவில் யாழ். இந்துக் கல்லூரி வீரர் அஜித் ராம் 115 கிலோ எடையைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தையும், 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான 56 எடைப் பிரிவில் யாழ். இந்துக் கல்லூரி வீரர் விதுஷன் 121 கிலோ எடையைத் தூக்கி தங்கப் பதக்கத்தையும், இதே வயதுப் பிரிவின் 77 கிலோ எடைப் பிரிவில் யாழ். இந்துக் கல்லூரி வீரர் பவிலன் 120 கிலோ எடையைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும், 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான 77 கிலோ எடைப் பிரிவில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய வீரர் விது 110 கிலோ எடையைத் தூக்கி வெண்கலப் பதக்தக்தையும் வென்றுள்ளனர். இதேவேளை, வடமாகாண வீர,வீராங்கனைகள் இன்னும் பல பதக்கங்களை வெல்லக் கூடிய வாய்ப்பிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்று வரும் ஆண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் தொடரின் இறுதி ஆட்டம் இன்று காலை நடைபெறும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)

## கால எல்லை நீடிப்பு

தென்னாபிரிக்க அணியின் தலைமை பயிற்சியாளர் ரஸல் டொமிங்கோவின் பதவிக்காலம் 2016 ஏப்ரல் வரை நீடிக்கப்பட்டுள்ளது.

டொமிங் கோவின் இரண்டு ஆண்டு ஒப்பந்தம் எதிர்வரும் 2015 ஏப்ரல் மாதத்துடன் முடிவுறும் நிலையிலேயே தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை ஒரு மனதாக இந்த முடிவை எடுத்துள்ளது.

ஜொஹன்னஸ்பேர்க்கில் கடந்த சனிக்கிழமை நடந்த தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை கூட்டத்தின்போது அணியின் முகாமையாளர் மொஹமத் மூசாஜீயினது ஒப்பந்தத்தையும் நீடிக்க தீர்மானிக்கப்பட்டது.

டொமிங்கோ தமது பயிற்சியாளர் பொறுப்பை கடுமையான போட்டித் தொடர்களுடனேயே ஆரம்பித்தார். எனினும் அவரது பயிற்சியில் தென்னாபிரிக்க அணி 2013 மே மாதம் நடந்த சம்பியன்ஸ் கிண்ண தொடரின் அரையிறுதிவரை முன்னேறியதோடு கடந்த யூலையில் இலங்கையுடனான ஒருநாள் தொடரையும் 4-1 என கைப்பற்றியது.

இலங்கை சுற்றுப்பயணத்திற்கு சவாலான இடம் என்றபோதும் அங்கு தென்னாபிரிக்கா தனது முதல் ஒருநாள் தொடரை வென்றதாக டொமிங்கோ விபரித்துள்ளார். அதே போன்று தென்னாபிரிக்க அணி டெஸ்ட் தரவரிசையிலும் முதல் இடத்திற்கு முன்னேறியது.



## சம்பியன் மங்கை

(ஹொங்கொங்)

ஹொங்கொங் ஓப்பன் ரென்னிஸ் போட்டித் தொடரின் [illegible]ளிர் ஒற்றையர் பிரிவில், ஜேர்மனி வீராங்கனை சேபைன் லிசிக்கி சம்[illegible]பன் பட்டம் வென்றார்.

இறுதிப் போட்டியில் செக் குடியரசின் கரோலினா பிளிஸ்கோவாவுடன் நேற்று முன்தினம் மோதிய லிசிக்கி 7-5 என்ற கணக்கில் முதல் செட்டை கைப்பற்றி முன்னிலை பெற்றார். இரண்டாவது செட்டில் கரோலினாவின் சேர்வீஸ் ஆட்டங்களை எளிதாக முறியடித்து புள்ளிகளைக் குவித்த அவர் 7-5, 6-3 என்ற நேர் செட்களில் வென்று கோப்பையை கைப்பற்றினார்.

கடந்த மூன்று ஆண்டுகளில் லிசிக்கி பெறும் முதல் டபுள்யு.டி.ஏ சம்பியன் பட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது. அவர் இதுவரை 4 டபுள்யு.டி.ஏ பட்டங்களை வென்றுள்ளார்.

# பந்துவீச்சு முறையை கண்டறிய புதிய தொழில்நுட்பம் விரைவில் அறிமுகப்படுத்தவுள்ளது ஐ.சி.சி.

(டுபாய்)

கிரிக்கெட் போட்டிகளில் பந்துவீச்சு முறையை கண்காணிக்கும் தொழில்நுட்பத்தை 2015ஆம் ஆண்டில் பரிசோதனை முயற்சியாக பயன்படுத்த சர்வதேச கிரிக்கெட் சபை திட்டமிட்டுள்ளது. இந்த திட்டத்தின்போது உடலில் பொருத்திக் கொள்ளக்கூடிய சென்சர் கருவிகளை மேம்படுத்தி அதன்மூலம் முறையற்ற பந்துவீச்சை போட்டிகளின்போதே அவதானிக்கவுள்ளது. இதில் ஐ.சி.சி.யினால் தற்போது பயன்படுத்தப்படும் முழங்கை வளைவு அளவை கணிக்கும் பரிசோதனை தரத்தை பயன்படுத்த திட்டமிட்டிருப்பதாக கிரிக்கெட் பொதுச்செயலாளர் ஜெப் அலடிக் குறிப்பிட்டுள்ளார்.

சட்டவிரோத பந்துவீச்சு காரணமாக பாகிஸ்தான் சுழற்பந்து வீச்சாளர் சயிட் அஜ்மல் கடந்த வாரம் பந்துவீச தடைக்குள்ளானார். இதில் அஜ்மலின் பந்துவீச்சு சோதனைக்குட்படுத்தப்பட்டபோது அவர் வீசிய ஒரு பந்துகூட சட்டவிதிக்கு உட்பட்டது அல்ல என்பது கண்டறியப்பட்டது.

உலகின் முதல்நிலை ஒருநா[illegible] பந்து வீச்சாளரான அஜ்மல், இதுவரையில் முறையற்ற பந்துவீச்சில் சிக்கிய வீரர்களில் முன்னணியில் இருக்கும் பந்துவீச்சாளராவார்.

இலங்கையின் சச்சித்ர சேனாநாயக்க, மேற்கிந்திய தீவுகளின் ஷேன் ஷில்லிங்போர்ட் மற்றும் நியூசிலாந்தின் வில்லியம்ஸ் ஆகியோரும் கடந்த 12 மாதங்களுக்குள் முறையற்ற பந்துவீச்சு காரணமாக தடைக்கு முகம் கொடுத்தவர்களாவர்.

இந்நிலையில் போட்டிகளின்போது பந்துவீச்சை பரிசோதிக்கும் புதிய தொழில்நுட்பம் அடுத்த ஆண்டு நடுப்பகுதிக்கு முன்னர் நடைமுறைக்கு வர வாய்ப்பு இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் ஆரம்பகட்டமாக முறையற்ற பந்துவீச்சை கண்டறிய எவ்வாறான சென்சர் கருவியை பயன்படுத்துவது என்பது குறித்து ஐ.சி.சி. தீர்மானிக்கவுள்ளது. பின்னர் குறித்த கருவியை ஆரம்பகட்ட சோதனைகளுக்கு உட்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்தே போட்டி சூழலில் இதனை பயன்படுத்துவது குறித்து தீர்மானிக்கப்படவுள்ளது.

இதில் போட்டியைப்பாதிக்காத வகையில் பந்துவீச்சாளர்களின் கையில் குறித்த சென்சர் கருவியை பொருத்துவது பெரும் சவாலாக இருக்கும் என நம்பப்படுகிறது. இந்த திட்டத்தை மேம்படுத்துவதில் முன்னேற்றங்கள் காணப்பட்டுள்ளன. ஆனால் நடைமுறைப்படுத்துவதில் சற்று சாவால்கள் இருக்கின்றன என்று கிரிக்கெட் பொதுச்செயலாளர் ஜெப் அலடிக் குறிப் பிட்டுள்ளார்.



## அஜ்மலின் தடைக்கு ஆஸி. பயிற்றுநர் வரவேற்பு

(பிரிஸ்பேன்)

விதிமுறைக்கு புறம்பாக பந்து வீசுவதாக பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் சயித் அஜ்மலுக்கு சர்வதேச கிரிக்கெட் சபை தடை விதித்திருப்பதற்கு அவுஸ்ரேலிய பயிற்சியாளர் டரன் லீமன் வரவேற்பு தெரிவித்துள்ளார்.

தடை குறித்து லீமன் குறிப்பிடுகையில், நீங்கள் விதிமுறைக்குட்பட்டு பந்து வீசினால் பிரச்சினை இல்லை. இல்லாவிட்டால் உங்களது பந்து வீச்சு கவனிக்கப்படும். அதன் அடிப்படையில் முடிவு எடுப்பார்கள். அஜ்மலின் விடயத்திலும் அது தான் நடந்திருக்கிறது. இது விளையாட்டுக்கு நல்ல விடயம் என்றார். அவுஸ்ரேலிய அணி அடுத்த மாதம் பாகிஸ்தானுடன் டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரில் மோதவிருப்பது குறிப்பிடத்தக்கது.

## மே.தீவுகள் முதல் இனிங்ஸ் 380



பங்களாதேஷ் அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி முதல் இனிங்ஸிற்காக 380 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்துள்ளது.

மேற்கிந்தியத்தீவுகள், பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இரண்டாவது போட்டிகளைக் கொண்ட இறுதி டெஸ்ட் போட்டி மே.தீவுகளின் செயின்ட் லூசியாவில் நடைபெற்று வருகின்றது.

இதில் முதல் இனிங்ஸிற்காக ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 380 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சந்தர்போல் அரைச் சதம் (84) விளாசினார்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய வரும் பங்களாதேஷ் அணி இரண்டாவது நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை ஒரு விக்கெட்டை இழந்து 15 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதேவேளை, 500ஆவது டெஸ்ட் போட்டியில் நானும் அங்கம் வகித்திருப்பது மகிழ்ச்சி. இப்போட்டியில் சிறப்பாக செயற்பட்டு அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்வேன் என மேற்கிந்தியத்தீவுகள் அணியின் டெஸ்ட் கப்டன் ராம்டின் நம்பிக்கை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆசிய வலைப்பந்தாட்டம் சிங்கப்பூர் சம்பியன்

ஆசிய வலைப்பந்தாட்டப் போட்டிகளின் சம்பியன் பட்டத்தை தொடர்ந்து இரண்டாவது தடவையாகவும் சிங்கப்பூர் அணி வென்றெடுத்துள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் இலங்கை வலைப்பந்தாட்ட அணியை 59- 41 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிகொண்டதன் மூலமே சிங்கப்பூர் சம்பியனானது

சிங்கப்பூரில் நடைபெற்ற ஆசிய வலைப்பந்தாட்டப் போட்டிகளில் இலங்கை மற்றும் சிங்ப்பூர் அணிகள் ஒரு போட்டியிலேனும் தோல்வியுறாமல் இறுதிப் போட்டிக்குள் பிரவேசித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இறுதிப் போட்டியின் முதல் பாதியில் இலங்கை வீராங்கனைகள் 12-8 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை வகித்தனர்.

எனினும் இரண்டாவது சுற்றில் சுதாகரித்துக்கொண்ட சிங்கப்பூர் அணி முழு போட்டியையும் தம் வசப்படுத்திக் கொண்டது. சிங்கப்பூர் அணி ஆசிய வலைப்பநதாட்ட சம்பியன் பட்டத்தை வென்றெடுத்த மூன்றாவது சந்தர்ப்பம் இதுவென்பது குறிப்பிடதக்கது.

தமது அணிக்கு தேசிய பயிற்றுவிப்பாளர் இல்லாமை அணியின் முழுத் திறமையையும் வெளிக்காட்டுவதில் தடங்கலை ஏற்படுத்தியதாக இலங்கை அணித்தலைவி ஷசிகா சமரசிங்க இறுதிப் போட்டியின் பின்னர் தெரவித்தார்.

## விளையாட்டு செய்திகள்

# முல்லைத்தீவில் மாகாண விளையாட்டு விழா ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி

(முல்லைத்தீவு)

வடக்கு மாகாண வருடாந்த விளையாட்டு விழா எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

விளையாட்டு அமைச்சின் அனுசரணையுடன் வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் நடாத்தும் இப்போட்டியில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வீர,வீராங்கனைகள் பங்குகொள்ளவுள்ளனர்.

இதன்போது தடகளம் உள்ளிட்ட போட்டிகள் நடைபெறவுள்ளதாகவும், இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் மும்முரமாக நடைபெற்று வருவதாகவும் வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, முதல் நாள் நிகழ்வின் பிரதம விருந்தினராக விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே, இறுதி நாள் நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இப்போட்டியின் யாழ். மாவட்ட வீர, வீராங்கனைகள் சிறப்பான முறையில் செயற்பட்டு மாவட்டத்திற்கு பெருமை சேர்ப்பர்கள் என்ற நம்பிக்கை தமக்கிருப்பதாக யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி மோகன்ராஜ் தெரிவித்துள்ளார். (எஸ்.பி.)

## பூப்பந்து உபகரணம் அன்பளிப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்ட பாடசாலை வீரர்களின் பூப்பந்தாட்ட திறனை அதிகரிக்கும் வகையில் உலகத் தமிழர் பூப்பந்தாட்டப்பேரவை, பூப்பந்தாட்ட உபகரணங்களை அண்மையில் வழங்கியது.

வடமாகாணத்தில் விளையாட்டுத் துறையை குறிப்பாக பூப்பந்தாட்ட விளையாட்டை ஊக்குவிப்பதற்கு தமது பேரவை தீர்மானித்துள்ளதாக அண்மையில் இலங்கைக்கு வருகை தந்த உலகத் தமிழர் பூப்பந்தாட்டப் பேரவையின் பிரதிநிதியும் பிரான்ஸ் தமிழர் உள்ளக அரங்க விளையாட்டுத்துறை அமைப்பின் தலைவருமான ராஜ்குமார் தெரிவித்தார்.

வடபகுதிக்கும் விஜயம் செய்த இவர் வவுனியா மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு பூப்பந்தாட்ட உபகரணங்களை வழங்கியிருந்தார். இந்நிகழ்வினை வவுனியா மாவட்ட பூப்பந்தாட்ட பயிற்றுநரும் மாவட்ட விளையாட்டுத் துறை உத்தியோகத்தருமான கமலன், உடற்கல்வி ஆசிரியர் சுந்தாரங்கன் ஆகியோர் ஒருங்கிணைத்திருந்தனர்.

## யாழ்ப்பாண லீக் சம்பியன்

(மன்னார்)

வடமாகாண கால்பந்தாட்ட லீக் அணிகளுக்கிடையிலான மாபெரும் கால்பந்துபோட்டியில் யாழ்ப்பாண லீக் அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் மாகாண அணிகளின் 19 வயதுப் பிரிவினருக்கிடையில் மாபெரும் கால்பந்துத் தொடரை நடாத்தி வருகின்றது. இதில் வடக்கு மாகாண அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டம் கடந்த சனிக்கிழமை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இதில் யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக் அணியும் மன்னார் லீக் அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக் அணி ஒரு கோலைப் போட்டு முன்னிலை பெற்றிருந்தது. இதற்குப் பதிலடி கொடுக்கும் முனைப்புடன் இறுதி வரை போராடிய மன்னார் கால்பந்தாட்ட லீக் அணியின் முயற்சிகள் அனைத்தும் யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக் அணியால் முறிடிக்கப்பட்டன. இறுதியில் யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

ஏனைய மாகாண அணிகளுக்கிடையிலான போட்டிகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் இப்போட்டிகள் நிறைவடைந்தவுடன் மாகாண மட்டத்தில் சம்பியன் பட்டம் வென்ற அணிகளுக்கிடையிலான போட்டிகள் நடைபெறும் எனவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)

## கல்கோபன் அதிரடி ஜொலிஸ்ரார் பெருவெற்றி

(கொக்குவில்)

ஸ்ரான்லி அணிக்கெதிரான போட்டியில் ஜொலிஸ்ரார் அணி எட்டு விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்றது.

கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் 30 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் தொடர் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் அனுசரணையுடன் நடைபெற்று வரும் இப்போட்டித் தொடரின் ஆட்டமொன்று கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதில் ஸ்ரான்லி அணியும் ஜொலிஸ்ரார் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய ஸ்ரான்லி அணி 30 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 161 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிரசன்ன 42, சம்சண் 28, விதுர்சன், கஜதீபன் ஆகியோர் தலா 17 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சாரங்கன் மூன்று, மதுஷன் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 162 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஜொலிஸ்ரார் அணி 14 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் கல்கோபன் 86, மதுஷன் 30 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். ஆட்டமிழக்காது மணிவண்ணன் 13, சஜீவன் 24 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் மதன் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

## சவாலான தொடர்

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள இங்கிலாந்து அணிக்கெதிரான ஒரு நாள் தொடர் சவால் நிறைந்ததாக இருக்கும் அதேவேளை, உலகக் கிண்ணத் தொடருக்கான சிறந்த பயிற்சி ஆட்டமாகவும் அது அமையும் என இலங்கை அணிக் கப்டன் மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

இத்தொடரில் நாங்கள் பரீட்சார்த்தமாக சில யுத்திகளை கையாளவுள்ளோம். அது பெரும் பலனைத் தரும் என்று நம் புகின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஊரெழு லயன்ஸ் விளையாட்டுக்கழக ஆண்டு நிறைவு மென்பந்து

# முதல் சுற்றில் வெற்றிபெற்ற அணிகள்

ஊரெழு லயன்ஸ் விளையாட்டுக்கழகத்தின் மென்பந்து கிரிக்கெட் தொடரின் இரண்டாவது சுற்றுக்கு மல்லாகம் நியூவாரியர்ஸ், கரவெட்டி ஞானம்ஸ், உரும்பிராய் சரஸ்வதி, கொக்குவில் பொற்பதி இந்து அணிகள் முன்னேறியுள்ளன.

ஊரெழு லயன்ஸ் விளையாட்டுக்கழகத்தின் ஐந்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்ட மென்பந்து கிரிக்கெட் அணிகளுக்கிடையில் மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடாத்தி வருகின்றது. அணிக்கு எட்டுப் பேர் கொண்ட இச் சுற்றுப் போட்டி ஆறு ஓவர்களைக் கொண்டதாகும்.

இதில் கடந்த சனி, ஞாயிறு தினங்களில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றியீட்டிய அணிகளின் விபரம் வருமாறு,

முதல் போட்டியில் கொக்குவில் காமாட்சி அணியும் மல்லாகம் நியூவாரியர்ஸ் அணியும் மோதின. முதலில் ஆடிய கொக்குவில் காமாட்சி அணி நிர்ணயிக்கப்பட்ட ஆறு ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு 65 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மல்லாகம் நியூவாரியர்ஸ் அணி 4.5 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் கரவெட்டி ஞானம்ஸ் அணியும் நீர்வேலி ஐக்கிய அணியும் மோதின. முதலில் ஆடிய நீர்வேலி ஐக்கிய அணி ஆறு ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 56 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய கரவெட்டி ஞானம்ஸ் அணி 5.3 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

மற்றுமொரு போட்டியில் உரும்பிராய் சரஸ்வதி அணியும் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணியும் மோதின. முதலில் ஆடிய குறிஞ்சிக்குமரன் அணி ஆறு ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 44 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய உரும்பிராய் சரஸ்வதி அணி 5.5 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

இறுதியாக நடைபெற்ற போட்டியில் கொக்குவில் பொற்பதி இந்து அணியும் மானிப்பாய் பிறைட் அணியும் மோதின. முதலில் ஆடிய கொக்குவில் இந்து அணி ஆறு ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 87 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு 88 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மானிப்பாய் பிறைட் அணி ஆறு ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 54 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது.



வலி. தெற்கு உடுவில் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட யாழ். மாவட்ட அணிகளுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் தொடரில் இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்ட குருநகர் கார்மேல் போய்ஸ் அணியைக் காணலாம். இப்போட்டித் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை உடுவில் ஸ்டைல்ஸ் போய்ஸ் அணி கைப்பற்றிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (48)

# ஜே.வி.பி தமிழ் பேசும் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெறமுடியாமல் போனது ஏன்?

**8** - சுப்பராஜன் [வானவில் இதழ்]



இன்னொரு விடயமும் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெறாமல் போனதற்குக் காரணம் உள்ளது என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அதாவது கட்சியின் தலைமைத்துவ நபரான சண்முகதாசன் ஒரு தமிழர் என்ற காரணி.

நாம் எவ்வளவுதான் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்துவம் பற்றி உரக்கப் பேசினாலும், பின்தங்கிய ஆசிய சமூகங்களில் இன, மொழி, மத, சாதி, பாலின, பிராந்திய வேறுபாடுகள் பலமான ஆதிக்கத்தைக் கொண்டிருக்கின்றன என்பதை மறுக்க முடியாது. அதுவும் பிரித்தானிய காலனித்துவவாதிகளால் இன முரண்பாடு திட்டமிட்ட முறையில் விதைக்கப்பட்டு, அதன் காரணமாக இன வன்செயல்களைக் கண்ட இலங்கையில் இனவாதம் பலமாக வேரூன்றியுள்ளதை எவரும் மறுக்க முடியாது.

அதன் காரணமாக சண்முகதாசன் என்ற தமிழர் ஒருவரின் தலைமையை ஏகப்பெரும்பான்மையான சிங்கள மக்கள் ஏற்கும் சூழல் நிலவவில்லை.

அத்துடன் எப்படி ரோகண விஜேவீர சிங்கள இளைஞர்களைத் தன்பக்கம் இழுப்பதற்கு சண்முகதாசன் ஒரு தமிழர் என்ற பிரச்சாரத்தை மேற்கொண்டாரோ, அக்கீழ்த்தரமான யுக்தியை கம்யூனிஸ்ட் பிளவுபட்ட பின்னர் சோவியத் சார்பு அணியினரும் மேற்கொண்டனர். அந்த அணியின் சில தலைவர்கள் பகிரங்கக் கூட்டங்களில் பேசும்போது கூட சண்முகதாசனை விமர்சிக்கும் போது, வெறுமனே சண்முகதாசன் என்று சொன்னால் அதைச் சிங்கள மக்கள் “சண்முகதாச” என்ற சிங்களவர் என்று தவறாக நினைத்து விடுவார்களோ என்று கருதி நாகலிங்கம் சண்முகதாசன் என்று அவரது முழுப்பெயரையும் சொல்லி அவர் ஒரு தமிழர் என மறைமுகமாகச் சுட்டிக்காட்டி வந்துள்ளனர்.

இப்படியான பல்வேறு காரணிகளால் சிங்கள மக்கள் மத்தியில் சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சி என்று அழைக்கப்பட்ட புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி செல்வாக்குப் பெறமுடியாமல் போய்விட்டது.

ஆனால் அன்றும் சரி, இன்றும் சரி தமிழ் பேசும் மக்கள் மத்தியில் ஜே.வி.பி. செல்வாக்குப் பெற முடியாமல் போனதற்காக புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி நடாத்திய பிரச்சார இயக்கத்தில் சண்முகதாசனின் பங்களிப்பையும் எவரும் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது.

ஜே.வி.பி இயக்கம் 1971 ஏப்ரல் 5ஆம் திகதி ஆரம்பித்த கிளர்ச்சி காரணமாக சிங்களப் பகுதிகளில் ஏற்பட்ட பாதிப்பு அளவுக்கு தமிழ் பேசும் பகுதிகளில் பெரும் பாதிப்பு ஏற்படவில்லையாயினும், ஒரு குறிப்பிட்ட அளவு அதன் தாக்கம் இருக்கத்தான் செய்தது.

குறிப்பாக சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சி என அந்த நேரத்தில் முதலாளித்துவ ஊடகங்களால் வர்ணிக்கப்பட்டு வந்த, நா.சண்முகதாசனை பொதுச் செயலாளராகக் கொண்ட புரட்சிகர இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிக்கு தெற்கில் மட்டுமின்றி வடக்கு கிழக்கிலும் பாதிப்பு இருந்தது. வடக்கில் செயற்பட்ட அதன் கட்சி உறுப்பினர்கள் பலர் பாதிப்புக்கு உள்ளாகினர்.

அதற்குக் காரணங்கள் பல இருந்தன. முதலாவது, அந்தக் கட்சி மட்டும்தான் ரஸ்யா, சீனா, வியட்நாம், கியூபா, வட கொரியா போன்ற நாடுகளில் ஏற்பட்டது போன்று ஆயுதப் போராட்டம் மூலம் மட்டுமே அதிகாரத்தைக் கைப்பற்றி இலங்கையில் சோசலிச அரசொன்றை அமைப்பது பற்றிப் பேசி வந்தது.

இரண்டாவது, அந்தக் கட்சியிலிருந்து விலகிச் சென்ற ரோகண விஜேவீர தான் ஜே.வி.பி இயக்கத்தை ஸ்தாபித்து 71 ஏப்ரல் ஆயுதக் கிளர்ச்சியை ஏற்படுத்தியவர் என்றபடியால், புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியும் வாய்ப்புக் கிடைத்தால் அவ்வாறான பாதையில் செல்லலாம் என்ற அச்சம் அரசாங்கத்துக்கு, குறிப்பாக ஆயுதப்படைகளுக்கு இருந்தது.

மூன்றாவது, இலங்கை கம்யூனிஸ்ட் இயக்க வரலாற்றிலேயே அந்தக் கட்சிதான் புரட்சிகர வழிமுறைகளைப் பயன்படுத்தி வட பகுதியில் தீண்டாமைக்கு எதிரான போராட்டத்தை நடாத்தியதன் மூலம் அதில் கணிசமான அளவு வெற்றி பெற்று, தனது புரட்சிகர குணாம்சத்தை புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி வெளிப்படுத்தியிருந்த இரண்டு வருடங்களிலேயே ஜே.வி.பி.யின் ஆயுதக் கிளர்ச்சி நடைபெற்றிருந்தது.

அந்தப் போராட்டத்தின் மூலம் திரட்டப்பட்ட பெரும் வாலிபர் அணியொன்று அக்கட்சியிடம் இருந்ததால், ஏதாவது கிளர்ச்சி நடவடிக்கைகளில் அக்கட்சி இறங்கலாம் என்ற எதிர்பார்ப்பு பொலிசாருக்கு இருந்தது. நான்காவது, புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரை அதன் கிளிநொச்சி கிளை மிகவும் துடிப்புடன் செயற்பட்ட ஒன்றாக இருந்தது.

கொழும்பிலிருந்த கட்சித் தலைமை வாயளவில் புரட்சிகர சுலோகங்களை உச்சரித்துக் கொண்டு நடைமுறையில் தொழிற்சங்கவாதத்தில் மூழ்கியிருக்க, கிளிநொச்சி கட்சிக் கிளை ஆரம்பத்தில் தான் செய்து வந்த சீர்திருத்தவாத விவசாய சங்க வேலைகளிலிருந்து கூட விடுபட்டு, புரட்சிகர வழிமுறைகளைக் கையாளத் தொடங்கியிருந்தது.

(அதனால்தான் 1972இல் கட்சியின் பெரும்பான்மை சண்முகதாசனை நிராகரித்து மார்க்சிச - லெனினிச கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கிய போது. அவர்களுக்கு எதிர்ாக சண்முகதாசன் அடித்து வெளியிட்ட அறிக்கையில் கிளிநொச்சி கட்சி உறுப்பினர்களை “நக்சலைட்டுகள்” என வர்ணித்ததுடன், தனது 16 பக்க அறிக்கையில் ஏறத்தாழ 3 பக்கங்களை கிளிநொச்சிப் பகுதிக் கட்சி உறுப்பினர்களை வசை பாடுவதிலேயே செலவழித்திருந்தார்)

# பாரதி நினைவில்...

- அ.மார்க்ஸ் -



பாரதி குறித்தும் அவரது இலக்கியத் தகுதி குறித்தும் இங்கு நட்ந்த விவாதங்கள் தமிழ் “நவீனமான” கதையின் மிக ஆபத்தான கூறுகள் சிலவற்றை நமக்குக் குறிப்புணர்த்தும். இன்று அரசியல் கலக்காத இலக்கியத்தைக் கொண்டாடுபவர்களின் முன்னோடிகள் தான் அன்று பாரதியைக் கவிஞனே இல்லை எனச் சொன்னவர்கள்.

ஆனால் சம கால அரசியலிலிருந்து விலகியும் இலக்கியம் சாராத அம்சங்களில் ஆழ்ந்த கனமும் விசாலமான படிப்பும் இல்லாதவர்கள் உலகத்தரமான இலக்கியங்களை எழுதியதில்லை. பாரதிக்குப் பின் இன்னும் கூட பாரதிக்கு இணையான ஒரு கலைஞன் யாரும் ஏன் தமிழில் உருவாக இயலவில்லை..?

இரண்டு அம்சங்கள் இதில் உள்ளன. அவன் உலக அளவில அரசியலை நுணுக்கமாக உணர்ந்தவன். ரசியப் புரட்சியைக் கண்டு உலகமே அஞ்சி அதைக் கடுமையாகக் கண்டித்துக் கொண்டிருந்த தருணத்தில் அதைப் பாராட்டும் அளவுக்கு உலக அரசியலை உணர்ந்தவன் .அவன். அடுத்து அவன் சம கால வாழ்வில் அதிகாரத்தில் இருந்த பிரிட்டிஷ் ஆட்சியை நத்திப் பிழைத்து வாழாதவன்...

எத்தனை பேர், பாரதியால் உரம் பெற்றவர்கள்..: எத்தனையோ பேர்..

உங்கள் கவனத்திற்கு வராத ஒருவரைப் பற்றிச் சொல்கிறேன்...

ஜாவர் சீதாராமன். ஜாவர் என்பது “ஏழை படும் பாடு” திரைப்படத்தில் ஜாவராக நடித்ததால் ஒட்டிக் கொண்ட பெயர். உலகப் புகழ்பெற்ற நவீனம் - விக்டர் ஹ்யூகோவின் “லே மிசரபிள்” இல் கதாநாயகனைத் தொடர்ந்து வரும் காவல்துறை அதிகாரியின் பெயர் “ஜாவர்”. அந்தப் படம் இன்று யாருக்கும் நினைவிருக்காது. ஆனால் ஜாவர் சீதாராமனின் இன்னொரு திரைப்படம் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு நினைவிருக்கலாம். அது”பட்டணத்தில் பூதம்”. அந்த வெற்றிப் படத்தில் பூதமாக (ஜீ பூம் பா) நடித்தவர் சீதாராமன்.

சீதீராமன் ஒரு ஜனரஞ்சக எழுத்தாளரும் கூட. குமுதத்தில் அவர் எழுதிய, “உடல் பொருள் ஆனந்தி” எனும் பயங்கரங்கள் நிறைந்த தொடர்கதையை வாரந்தோறும் காத்திருந்து நடு நடுங்கிப் படித்த சிறுவர்களில் நானும் ஒருவன்.

அவரது பேட்டி ஒன்றும் குமுதத்தில் வந்தது. வாழ்க்கையில் பெரு வெற்றிகள் எதையும் அடைந்தவர் அல்ல அவர்.

தான் விரக்தியுற்ற நேரங்களில் எல்லாம் தனக்கு ஒரே நிவாரணமாக அமைந்தது பாரதியின் பாடல்கள்தான் என்கிறார் அந்தப் பேட்டியில்.

*** *** ***

என்னுடைய குறைந்த படிப்பு அனுபவத்தில் பாரதி குறித்த மூன்று கட்டுரைகள் ஆகச் சிறந்தன என்பேன். ஒன்று பேராசிரியர் கைலாசபதியின் “சிந்துக்குத் தந்தை”. மற்றது பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையின் கட்டுரை. திருவனந்தபுரத்தில் சாலையில் பாரதியைச் சந்தித்த நிகழ்வுடன் தொடங்கும் அது. ஒரு காலத்தில் உ.வே.சா பாரதிக்கு முன்னுரை அளிக்க மறுத்தார். முதன் முதலாக ஒரு மரபு வழித் தமிழறிஞர் பாரதியை 'மகாகவி என் ஏற்று வியந்த கட்டுரை அது. மூன்றாவதாக பாரதி குறித்து என் உள்ளம் கவர்ந்த கட்டுரையை எழுதியவர் சோமசுந்தர பாரதியார்.

*** *** ***

பாரதி நூற்றாண்டின் போது அவர் குறித்து ஏராளமான நூல்கள் வந்தன. எல்லா இதழ்களும் சிறப்பு மலர்கள் வெளியிட்டன. நாடகக் கலைஞர் பேராசிரியர் மு.இராமசாமி அப்போது நண்பர்களுடன் இணைந்து நடத்தி வந்த “விழிகள்” எனும் சிற்றிதழிலும் ஒரு கட்டுரை வந்தது. அப்போது 90இற்கும் மேற்பட்ட வயதுடையவர்களை எட்டயபுரத்திலும், கடையத்திலும் சென்று நேரில் சந்தித்து பாரதி நினைவுகளைத் தொகுத்த கட்டுரை அது. அதில் பாரதியை நேரில் பார்த்திருந்த பலரும் பாரதி பற்றிச் சொன்னது.. “அவரா அவர் ஒரு “கோட்டி” ஆச்சே...”. (கோட்டி - கோணல் - அரைப் பைத்தியம்.) ஒரு கவிஞனுக்கு இதை விட என்ன பெருமை இருக்க இயலும். ஏன் எந்த மனிதனுக்குமே அதை விடப் பெரிய பெருமை என்ன வாய்த்துவிட இயலும்.

*** *** ***

பாரதி நூற்றாண்டை ஒட்டி “பார-

# சினிமா சினிமா



✖ வருகிற தீபாவளிக்கு விஜய்யின் கத்தி, விஷாலின் பூஜை, ஷங்கர் இயக்கத்தில் விக்ரமின் ஐ,. கமலின் உத்தம வில்லன், தனுஷின் அனேகன் படங்கள் போட்டியில் குதிக்கவுள்ளன. கத்தி படம் தீவிரத் தமிழ்த் தேசியர்களின் எதிர்ப்பில் திண்டாடுகிறது. தீபாவளி ரிலீஸ் என்று ஏற்கனவே அறிவித்து, பின்வாங்கினால் சரிவராது... என்று, கத்தி படத்தை எப்படியேனும் தீபாவளிக்கு வெளியிட்டு விட வேண்டும் என்று, பிரச்னைகளை சுமூகமாக தீர்க்கும் வேலைகளில் இறங்கியிருக்கிறார் விஜய்.

✖ தமிழ், தெலுங்கு, கன்னடம் என பல மொழி படங்களில் நடன இயக்குநராகப் பணியாற்றியிருப்பவர் ஸ்ரீதர். தான் நடனம் அமைக்கும் பாடல் காட்சிகளில் கதாநாயகனுடன் இணைந்து பல படங்களில் தோன்றியுமிருக்கிறார். “நாக்க முக்கா” பாடல் உதாரணம். இவர் தற்போது “போக்கிரி மன்னன்” படத்தில் கதாநாயகனாக அறிமுகமாகிறார்.

✖ 1978 இல் கமல், ஸ்ரீதேவி நடிப்பில் வெளியான படம் சிவப்பு ரோஜாக்கள். அந்தப் படத்தின் இரண்டாம் பாகத்தை இயக்கவிருக்கிறார் பாரதிராஜா. “சிவப்பு ரோஜாக்கள் படத்தை இன்றைய இளைஞன் ஒருவன் பார்த்தால், அவனது ரியாக்ஷன் எப்படி இருக்கும் என்பதை கருத்தில் வைத்து, இதற்கான கதை உருவாக்கப்படும்...” என்று கூறியுள்ள பாரதிராஜா, அதையடுத்து, என்னுயிர்த்தோழன் படத்தின் இரண்டாம் பாகத்தையும் இயக்கவிருக்கிறார்.

✖ “கஜினி”யின் ஹிந்தி ரீமேக் மூலம் பொலிவுட் சென்ற அசின், தமிழ் ஹீரோக்களுடன் நடிக்க வந்த வாய்ப்புகளைத் தட்டி கழித்தார். ஆனால், அங்கு சோனாக்ஷி சின்ஹா, கத்ரினா கைப், பிரியங்கா சோப்ரா, ஆலியாபாட் போன்ற ஹீரோயின்களின் அதிரடி கவர்ச்சிக்கு ஈடு கொடுக்க முடியாமல் திணறியவர், தற்போது மீண்டும் தென்னிந்திய படங்களுக்கு திரும்ப முடிவு செய்திருக்கிறார். இந்த முறை முன்னணி இயக்குநர்களிடம் சென்று வாய்ப்புகளைக் கேட்காமல் சமீபத்தில் கவனத்தை ஈர்த்த இயக்குநர்களிடம் வாய்ப்புகளைப் பெறுவதிதை அசின் விரும்புவதாக தெரிகிறது.



✖ ”கான காந்தர்வன்“ கே.ஜே.யேசுதாஸின் கலைப்பயணத்துக்கு இது 50-வது ஆண்டு. 1964-ஆம் ஆண்டில் எடுத்து வைத்த அடி, 50 ஆண்டுகள் கடந்து நீள்கிறது. “எதிலும் செயற்கைத்தனங்கள் இருந்தால் ரசிக்க முடியாது. இசையில் அப்படி இருக்கவே கூடாது. ஒரு பூ தானாக மலருவது போல் மலர வேண்டியது பாடல். அது இப்படித்தான் வேண்டும் என்று கட்டளை பிறப்பிக்காதீர்கள்” என்பது இளம் தலைமுறையினருக்கு யேசுதாஸின் அறிவுரை. உங்களுக்கு பிடித்த பாடகர் யார்? என்ற சமீபத்தில் கேள்வி ஒன்றுக்கு.... யேசுதாஸின் பதில்: “நடிகர் சந்திரபாபு.”

✖ அந்தக்கால நடனக் காட்சிகளில் கலக்கிய நடிகை அனுராதா, தன் மகள் அபினயஸ்ரீயை நடிக்க வைத்தார். ஆனால், மகளுக்கு எதிர்பார்த்த அளவிற்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. இப்போது, மகன் கெவினை நடிகராக்கியுள்ளார். “என்னை பிடிச்சுருக்கா” என்ற படத்தில் நடித்து வருகிறார் கெவின்.

✖ ஐ படத்தில் விக்ரமுடன் நடித்துள்ள எமி ஜாக்சன்,” அடுத்து வெங்கட் பிரபு இயக்கும் படத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். இதே படத்தில், இன்னொரு நாயகியாக நயன்தாராவும் இருக்கிறார். எமிக்கு, இரண்டு கோடி சம்பளம் பேசியுள்ளனர். இது நயன்தாராவின் காதுக்கு சென்றபோது, தற்போது ஒருகோடி வாங்கி வரும் அவர், “மூன்று படங்களில் நடித்த எமிக்கு 2 கோடி ரூபாய் என்றால் எனக்கும் அவ்வளவு தர வேண்டும்...” என்று போர்க்கொடி பிடித்துள்ளார்.

✖ டிசம்பர் 12-ஆம் திகதி ரஜினியின் பிறந்த நாளில் “லிங்கா” வெளிவருகிறது. பொங்கலுக்கு கௌதம் வாசுதேவ்மேனன் இயக்கத்தில் உருவாகி வரும் அஜித்தின் படம் வெளிவருகிறது. அனுஷ்கா முதன் முறையாக அஜித்துடன் இப்படத்தில் நடிக்கிறார். இரு வேடத்தில் நடிக்கும் அஜித்துக்கு இன்னொரு ஹீரோயின் த்ரிஷா.

✖ சமந்தாவுக்கு ஹிந்திப்பட வாய்ப்புகள் தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கின்றன. ஆனால், தமிழ் மற்றும் தெலுங்கில் பிசியாக இருப்பதால், தட்டிக்கழித்து வருகிறார்.

✖ அட்டகத்தி பட நடிகை ஐஸ்வர்யாவுக்கு ஒரு படத்திலேனும் விலைமாதுவாக நடிக்க வேண்டும் என்பது லட்சியமாக உள்ளது.

✖ நாய்கள் ஜாக்கிரதை படத்தில் நடித்து வரும் சிபிராஜ், அப்படத்தில் தன்னுடன் நடிக்கும் நாயிடம் 13 முறை கடி வாங்கி, ஊசி போட்டிருக்கிறார்.

---

தியின் மரண பயம்” குறித்து ஒரு கட்டுரை எழுதினேன். கவிஞர் மீராவின் “அன்னம்” இதழில் அது வெளி வந்தது. பாரதியிடம் ஒரு மரண பயம் இழையோடிக் கொண்டிருந்ததாக எனக்கு ஒரு உணர்வு. “காலா உன்னை ஒரு புல்லென, மதிக்கிறேன். என் காலருகே வாடா, சற்றே உன்னை மிதிக்கிறேன்...” என்று அவர் பாடியதெல்லாம் கூட அந்த மரண பயத்தின் ஒரு வெளிப்பாடுதான் என நினைத்தேன்.


அப்போது நான் தீவிரமாக ப்ளெகானோவை வாசித்துக் கொண்டிருந்தேன். மேற்தட்டு மக்கள் மத்தியில் அடித்தள மக்களைக் காட்டிலும் அதிக மரண பயம் உண்டு என்பதை அவர் அழகாகச் சொல்லியிருப்பார். பாரதி பற்றிய அந்தக் கட்டுரையை எழுத அதுவும் ஒரு தூண்டுதலாக இருந்தது.

எனது கட்டுரைக்கு மறுப்பாக எழுத்தாளர் ஆதவனிடமிருந்து ஒரு விரிவான கட்டுரை வந்திருந்ததாகவும் அதை அடுத்த இதழில் வெளியிடப் போவதாகவும் மீரா கடிதம் எழுதியிருந்தார். அடுத்த சில நாட்களில் ஆதவன் நீரில் மூழ்கி இறந்தார். அன்னம் இதழும் நின்று போனது. அந்தக் கட்டுரையைக் கடைசி வரை என்னால் படிக்க இயலவில்லை. எத்தனை பெரிய இழப்பு.

---

உங்களிடம் விண்டோஸ் 7 சிஸ்டம் இயங்கும் லப்டொப் கம்ப்யூட்டர் உள்ளதா? இங்கு தரப்பட்டுள்ள ஆர்வமூட்டும் குறிப்பினைப் படித்து அதில் சோதனை செய்து பார்க்கவும். Win + X அழுத்தவும். உடன், நீங்கள் உங்கள் விண்டோஸ் 7 லப்டொப், கம்ப்யூட்டர் திரையில், Dashboard ஒன்று காட்டப்படும். இதில் கம்ப்யூட்டரை மொனிட்டர் செய்திடலாம். கீ செயற்பாடுகளையும் இதன் வழியில் கட்டுப்படுத்தலாம்.

மொனிட்டர் திரையின் ஒளி அளவை மாற்றலாம். ஒலி அளவை பட்டைக் கோடு மூலம் அதிகரிக்கவும் குறைக்கவும் செய்திடலாம். பற்றரியின் மின் சக்தி எந்த அளவில் உள்ளது என அறியலாம். வயர்லெஸ் இணைப்பினை இணைக்கலாம் நீக்கலாம். உங்கள் இணைப்பினையும் கண்காணிக்கலாம். வேறு ஒரு மொனிட்டரை இணைத்து அதனையும் கட்டுப்படுத்தலாம். விண்டோஸ் 8.1 உள்ள சிஸ்டத்தில் Win + X இன்னும் பல வசதிகளுக்கான Options தரும்.





## விண்டோஸ் 7 விந்தை!

---

## ஆயிரம் மடங்கு இன்ரநெற் வேகம்!

உலகில் அதி வேகம் கொண்ட இன்ரநெற் ப்ரோட்பாண்ட் உள்ள நாடுகளில், தென்கொரியா முன்னணியில் இருக்கிறது. உலகில் பேஸ்புக் பிறப்பதற்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன், “சைவேல்ட்” என்ற சமூக வலையமைப்பை கொரியா பயன்படுத்தி வந்தது. இங்குள்ள குழந்தைகள் கால்பந்து மற்றும் விளையாட்டுகளை விட, வீடியோ கேம் விளையாடுவதையே விரும்புகின்றனர். அடுத்த, 15 ஆண்டுகளுக்குள் தென் கொரியாவில், “வயர்லஸ் 5ஜி” நெட்வேர்க் உருவாக இருக்கிறது. இது இன்றைய இன்ரநெற்றை விட, ஆயிரம் மடங்கு அதிக வேகத்தை கொண்டது.

---




## கேள்விகளால் ஒரு வேள்வி!

Gregory Stock என்பவர் எழுதிய The Book of Questions என்ற புத்தகம் அமெரிக்காவில் பரபரப்பான விற்பனையில் இருக்கிறது. இதில், 217 கேள்விகள் உள்ளன; அவற்றுக்கு தொடர்பான, 50 கேள்விகள், கடைசியில் கொடுக்கப்பட்டு உள்ளன.

ஒருவர் தன்னைப் பற்றி, தானே அறிந்து கொள்ளும் விதமாக மதிப்பு, நம்பிக்கை, வாழ்க்கை, காதல், பணம், செக்ஸ், நேர்மை, தயாளம், பெருமை, இறப்பு போன்ற, வி'யங்களும், தன் கடந்த காலம், - நிகழ்காலம் பற்றி ஆராய்ந்து பதிலளிக்கும் விதத்தில் கேள்விகளும் உள்ளன.

இப்படி பதில் காண்பதால் என்ன பயன்?

புத்தகத்திலுள்ள கேள்விகள் மாதிரிக்கு இரண்டு:

உங்களுடைய குழந்தைக்கு ஒரு வயது! நல்ல அழகு. பிரசவ ஆஸ்பத்திரியில் நடந்த தவறால், குழந்தை மாறி விட்டது. உங்களது என நினைத்து வளர்க்கும் குழந்தை, உங்களது அல்ல எனத் தெரிய வருகிறது. என்ன செய்வீர்கள்... குழந்தையை மாற்றிக் கொள்வீர்களா?

உங்கள் எதிரே உள்ள, 10 துப்பாக்கிகளில் - ஒன்றில் மட்டும் குண்டு உள்ளது! அது, எது எனத் தெரியாது. 10ல் ஒரு துப்பாக்கியை எடுத்து, நெற்றிப் பொட்டில் சுட்டுக் கொள்ள வேண்டும். உயிர் தப்பினால், பத்து லட்சம் டொலர் பரிசு! பந்தயத்தில் கலந்து கொள்வீர்களா?

- இதுபோன்ற கேள்விகள். சுவாரஷ்யமான புத்தகம்!




# செயலா? செய்யும் விதமா? ஆனந்தம்



அடிப்படையாக, வாழ்க்கையில் நாம் என்ன செயல் செய்கிறோம் என்பதைவிட, அந்த செயலை எப்படி செய்கிறோம் என்பதில்தான் நம் வாழ்க்கையின் தன்மை அமைகிறது. ஒரு ஊரில் மூன்று பேர் வேலை செய்து கொண்டிருந்தார்கள்.

அப்போது அங்கு வந்த ஒரு வழிப்போக் கர் முதல் நபரிடம், "நீ இங்கே என்ன செய்துகொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார். அந்த நபர் நிமிர்ந்து பார்த்து, "பார்த்தால் தெரியவில்லையா?, நான் கல் கொத்திக்கொண்டு இருக்கிறேன். உனக்கு என்ன கண் குருடா? என்று கேட்டார். உடனே அந்த நபர் அடுத்தவரிடம் சென்று, "நீ இங்கே என்ன செய்துகொண்டு இருக்கிறாய்?" என்று கேட்டார். அவர் உடனே நிமிர்ந்து பார்த்து, "ஏதோ வயிற்றுப் பிழைப்பிற்காக செய்கிறேன். அவர்கள் என்ன செய்யச் சொல்கிறார்களோ அதைச் செய்வேன், அவ்வளவுதான" என்று சொன்னார்.



அடுத்து அவர் மூன்றாவது நபரிடம் சென்று, நீ இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய், என்று கேட்டார். அதற்கு அந்த மூன்றாவது நபர் மிகவும் ஆனந்தமாக எழுந்து நின்று, நான் இங்கே ஒரு அழகான கோவிலை உருவாக்கிக் கொண்டிருக்கி றேன் என்று சொன்னார்.

அவர்கள் எல்லோருமே ஒரே வேலையைத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்த ஒரே வேலையை மூன்று பேருமே மூன்று விதமாக உணர்கிறார்கள். அதற்கேற்றார் போல்தான் அவர்கள் வாழ்க்கையின் தன்மையும் அமைகிறது. எனவே எளிமையான செயல் செய்கிறீர்களா அல்லது மிகவும் கடினமான செயல் செய்கிறீர்களா என்பதைவிட செய்யும் வேலையை எப்படி செய்கிறீர்கள் என்பது தான் உங்கள் வாழ்க்கைத் தன்மையை நிர்ணயிக்கிறது.

# விடுகதைகள்

அம்மாடி என சொல்ல வைக்கும் காய்?

1. மரத்திற்கு மரம் தாவுவான் குரங்கு அல்ல பட்டை தீட்டியிருப்பான் சாமியார் அல்ல - அவன் யார்?
2. கறுத்த ரோஜா மொட்டு, கனத்த மேகம் கண்டு கணத்தில் இதழ் விரித்திடும், காத்திடும் பின் சாய்ந்திடும் - அது என்ன?
3. நெஞ்சிலே ஒரு கல், வீட்டிலே ஒரு கல், வானத்திலே ஒரு கல் - அவை எவை?
4. பார்த்தவர் இருவர், எடுத்தவர் ஐவர், உண்டவரோ ஒருவர் - அவர்கள் யார்?
5. வாயிலிருந்து நூல் போடுவான் மந்திரவாதியும் இல்லை<br>கிளைக்குக் கிளை தாவுவான் குரங்கும் இல்லை<br>வலைவிரித்துப் பதுங்கியிருப்பான் வேடனும் இல்லை - அவன் யார்?
6. ஊளையிட்டாலும் ஊரைச் சுமந்து செல்வான் - அவன் யார்?
7. கல்லிலே காய்க்கும் பூ - காய்ந்தால் மலரும் பூ: பூவிலே இது வெள்ளைப்பூ. - என்ன பூ?
8. எண்ணெய் இல்லை திரியும் இல்லை<br>ஏற்றி வைக்க ஆளும் இல்லை<br>ஆனாலும் தெரியுது வெளிச்சம். - அது எது?
9. கருப்பு நிறமுடையவன்<br>கபடம் அதிகம் கொண்டவன்<br>கூவி அழைத்தால் வந்திடுவான்<br>கூட்டம் சேர்த்தும் வந்திடுவான் - அவன் யார்?
10. அரிசி போல் பூ பூக்கும்.<br>அம்மாடி எனச் சொல்லும் காய் காய்க்கும் - அது என்ன?

# அறிவியலால் வந்த விரோதம்

உலகின் மிகப் பெரிய சிந்தனையாளர்களில் ஒருவர் சோக்ரடீஸ். அவர் சொந்தமாக நூல்களொன்றும் எழுதவில்லை. சோக்ரடீஸ் பிளாட்டோவின் குருவாக இருந்தார்.மற்றவர்களின் குறிப்பாக பிளாட்டோவின் நூல்களின் மூலமாகத்தான் சேர்க்ரடீஸின் கருத்துகளை நாம் தெரிந்துகொள்ள முடியும். திறந்த மனத்துடன் அனைத்தைப் பற்றியும் கேள்வி எழுப்புங்கள் அதற்கு விடை காண்பதன் மூலம் அறிவு பெறுங்கள் என்பதுதான் அவரது பாணி.

அறிவியலால் மட்டுமே நன்மை ஏற்படும் என்றும், மனிதர்கள் தங்களைத் தெளிவாக அறிந்திருக்க வேண்டுமென்றும் அவர் நம்பினார் ஆயினும் சமூகத்திற்கு கெட்ட வழி காட்டுகிறார் என்று குற்றம் சுமத்தி கி.மு. 399ல் ஆட்சியதிகாரிகள் அவருக்கு மரண தண்டனை விதித்தார்கள்.

வாழ்வை எதிர்கொண்டது போலவே அவர் சற்றும் பதறாமல் மரணத்தையும் ஏற்றுக்கொண்டார். எதையும் கேள்விக் கேட்கும் அவரது குணத்தின் காரணமாக மிகக் குறைவான நண்பர்களையே பெற்றிருந்தார். தங்கள் கருத்துக்களும், விவாதங்களும் எதிர்க்கப்படுவதை விரும்புபவர்கள் குறைவாகத்தானே இருப்பார்கள்? அதனால் அவருக்கு மிக அதிகமான எதிரிகள் உருவானார்கள் எனவே அவர் விஷம் அருந்தி இறக்கவேண்டி வந்தது.



# கவிதை சிரிப்பு

மூளை முன் மொழிய<br>
முகம் முடிவெடுக்க<br>
உதடுகள் ஒத்துக் கொண்டு<br>
வாய்வழி அனுப்பும்<br>
அற்புத மலர்<br>
சிரிப்பு...

சிநேகத்தின் வரவு..<br>
சிரிப்பு...

சிந்தனையின் முதிர்ச்சி..<br>
சிரிப்பு...

அன்பின் வரவேற்புரை..<br>
சிரிப்பு...

அவசர உலகின்<br>
இடைக்கால நிவாரணி..<br>
சிரிப்பு...


நோய்களை விரட்டும்<br>
இயற்கை மருத்துவம்..<br>
சிரிப்பதில் சிக்கனமா?<br>
சிரித்துச் சிரித்து<br>
உங்களுக்கு நீங்களே<br>
மருத்துவம் பாருங்கள்..<br>
இல்லை என்றால்<br>
என் ஆட்சியில் வரும்<br>
இப்படி ஒரு சட்டம்<br>
"சிரிக்கத் தெரியாதவனுக்கு சிறை"

# பொன்மொழிகள்

## அளவுக்கதிகமான ஓய்வு என்னவாகும்?

- செயல் புரிபவர் அனைவரும் சிந்திப்பவர்களின் அடிமையே.
- ஒரு மனிதனின் சிறந்த நண்பர்கள் அவனது பத்து விரல்களே.
- கல்வி கற்பது ஒரு பணியோ சிக்கலோ சுமையோ அல்ல. உலகில் வாழ அது ஒரு வழி.
- மனிதன் சிரிக்கக்கூடிய நிலையில் இருக்கும் வரை அவன் ஏழையாக மாட்டான்.
- உலகில் கூறப்படும் அழகான கருத்துக்கள் அனைத்தும் ஒரு நல்ல செயலுக்கு ஈடாகாது.
- அளவுக்கு அதிகமான ஓய்வு மிதமிஞ்சிய வேதனையாகும்.
- உலகத்தை வெறுக்கலாம். ஆனால் உலகம் இன்றி வாழ முடியாது.
- பிறந்ததற்காக அழும் குழந்தை அறிவுள்ளதுதான்.
- கூலி கொடுப்பவனை ஊனமாக்கி கூலி வாங்குபவனுக்கு உதவ முடியாது.
- இன்பம் துய்க்க எண்ணினால் பிறர் இன்பமடைய வழி செய்ய வேண்டும்.
- அடக்கம் நல்லதுதான். ஆனால், அது அடிமைத்தனமாக இருக்கக்கூடாது.
- நம்பிக்கை என்பது. கண் விழித்திருக்கும் போதே காணும் கனவு.
- எதிர்காலத்தை எண்ணி அஞ்சாதவனே நிகழ் காலத்தை நுகரலாம்.
- உடலுக்கு உணவு தேவையானது போன்று உள்ளத்துக்குப் பண்பாடு தேவை.
- அதிர்ஷ்டம் அடுத்தவர்களின் உழைப்பிற்கும் தகுதிக்கும் நாம் தரும் அநியாயமான பெயர்.
- புத்தகங்கள் இல்லாத வீடு உயிரில்லாத உடலைப் போன்றது.
- உதவியின் மதிப்பு உதவுகின்றவனின் மதிப்பு அளவேயாகும்.
- சில சமயங்களில் இழப்பதுதான் பெரிய ஆதாயமாக இருக்கும்.
- விரைவில் புகழ் பெற்றவன் பெயரைக் காப்பாற்றிக் கொள்வது பெரிய பாரம்தான்.
- அமைதி நிறைந்த அடிமைத்தனத்தை விட ஆபத்துடன் கூடிய சுதந்திரமே மேலானது.

# பொருளின் மேற்பரப்பைக் கண்டுபிடியுங்கள்



முல்லா கதைகள்

# கல்விமானுக்கு எழுந்த சந்தேகம்



ஒரு நாள் அயல்நாட்டில் இருந்து வந்த இரண்டு கல்விமான்கள் முல்லாவைச் சந்தித்து அவருடன் உரையாடிக் கொண்டிருந்தார்கள்.அப்போது அந்தக் கல்விமான்களில் ஒருவர் முல்லாவை நோக்கி முல்லா அவர்களே! உலகத்தில் பொய்யைக் காட்டிலும் உண்மையின் மதிப்பு அதிகமாக இருக்கிறது, அது ஏன்? என ஒரு சந்தேகத்தைக் கேட்டார்.நானும் உம்மை ஒரு கேள்வி கேட்கிறேன் உலகத்தின் இரும்பைவிடத் தங்கத்துக்கு அதிக மதிப்பு இருக்கிறதே. அது ஏன்? என்று பதில்க்கேள்வி கேட்டார் முல்லா.


உலகத்தில் இரும்பு தாரளமாக எங்கம் கிடைக்கிறது. அதனால் இரும்பின் மதிப்பு மிகவும் குறைவாக இருக்கிறது. தங்கமோ உலகத்தில் மிகவும் அரிதாகத்தான் எங்காவது ஒரிடத்தில் கிடைக்கிறது. அதனால்தான் தங்கத்தின் மதிப்பு அதிகமாக இருக்கிறது என்றார் கல்விமான்.

பொய்க்கும் உண்மைக்கும் இந்த உதாரணமும் பொருந்தும். பொய் உலகத்தில் யாரிடமும் தாராளமாக் கிடைக்கிறது. ஆனால் உண்மை பேசுபவர்களைக் கண்டு பிடிப்பதுதான் அரிதாக இருக்கிறது. இவ்வாறு உண்மை எளிதில் கிடைக்காத பொருளாக இருப்பதால்தான் அதற்கு அதிகமான மதிப்பு இருக்கிறது என்று முல்லா பதில் சொன்னார்.

அந்த விளக்கத்தைக் கேட்டு கல்விமான்கள் இருவரும் மகிழ்ச்சி அடைந்தார்கள்.

# வாழ்வாதார செயற்றிட்டத்தை முன்னெடுக்க இளைஞர் அணி அமைப்பது அவசியமாகும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு



எமது மக்களின் அபிவிருத்தி போன்ற வாழ்வாதார செயற்றிட்டங்களை எதிர்காலத்தில் சிறப்பாக முன்னெடுப்பதற்கு இளைஞர் அணி அமைக்கப்படுவது அவசியமும் காலத்தின் தேவையாகுமென ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரியில் அமைந்துள்ள தென்மராட்சி கலைமன்றத்தின் கலாசார மண்டபத்தில் சாவகச்சேரி இளைஞர் அணியை நேற்று முன்தினம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இப்பிரதேசத்தில் இவ்வாறானதொரு இளைஞர் அணியை கட்டியெழுப்புவதில் முன்னின்று உழைத்த அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கடந்த காலங்களில் சரியான அரசியல் வழி நடத்தல் இல்லாத காரணத்தினாலேயே மக்கள் அழிவுகளை சந்திக்க வேண்டிய துர்ப்பாக்கியம் ஏற்பட்டது.

அவ்வாறானதொரு அழிவுகளும் இழப்புகளும் எதிர்காலத்திலும் நிகழாது இருக்க இப்பேற்பட்ட இளைஞர் அணிகள் அமைக்கப்படுவது அவசியமானதும் காலத்தின் தேவையுமாகும்.

இன்று நீங்கள் எதிர்பார்ப்புடனும் நம்பிக்கையுடனும் எதிர்காலத்தை எதிர்நோக்கும் வகையில் எடுக்கப்பட வேண்டிய தீர்மானங்களுடன் வருகைதந்துள்ளீர்கள் அந்தவகையில் உங்களது மகிழ்ச்சியும் எதிர்பார்ப்பும் நிறைவேறும் என்பதுடன் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ள இவ் இளைஞர் அணி எமது மக்களின் பொருளாதாரம் அபிவிருத்தி போன்ற செயற்பாடுகளை சரியாகவும் விரைவாகவும் நடைமுறைப்படுத்துவதற்கு எல்லோரும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டும் என்றார்.

அவ்வாறு எல்லோரும் ஒன்றிணைந்து உங்களது பங்களிப்பை மக்கள் நலன் சார்ந்து வழங்குகின்ற போதே மக்களுக்கான சேவைகள் யாவையும் முழுமைப்படுத்த முடியுமென்றும் சுட்டிக்காட்டினார்.


அத்துடன் இந்த இளைஞர் அணியூடாக முன்னெடுக்கப்படவுள்ள எதிர்கால செயற்றிட்டங்களுக்கு முழுமையான பங்களிப்பும் ஆதரவும் வழங்க தான் தயாராக இருப்பதாகவும் அமைச்சர் இத்ன்போது உறுதிபடத் தெரிவித்தார்.

இந்த இளைஞர் அணியில் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 200 வரையான இளைஞர் யுவதிகள் அங்கம் வகிக்கின்றனர்.

பிரதேசத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி செயற்றிட்டங்களை வலுப்படுத்தி மேம்படுத்தும் வகையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலுக்கு அமைவாக பிரதேச ரீதியாக இளைஞர் அணி உருவாக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெகன், ஈ.பி.டி.பியின் தென்மராட்சி இணைப்பாளர் சாள்ஸ், ஈ.பி.டி.பியின் சர்வதேச இணைப்பாளர் மித்திரன், ஈ.பி.டி.பியின் சர்வதேச முக்கியஸ்தர் விந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# நலன்புரி நிலையத் திறப்பு விழாவும் நாகதீபம் வி.க. நூலக அடிக்கல் நாட்டலும்



நாகர்கோவில் நலன்புரி நிலைய திறப்புவிழா நிகழ்வும், நாகதீபம் வி.க நூலக அடிக்கல் நாட்டு விழாவும் கடந்த 10 ஆம் திகதி நடைபெற்றது.

நாகர்கோவில் நலன்புரிச் சங்கம் கடந்த புதன்கிழமை மாலை 2.30 மணியளவில் நாகர் கோவில் வடக்கு பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டது. லண்டனில் இருந்து வருகைதந்த கிராமத்து பெரியார் ஆறுமுகம் சுந்தரலிங்கத்தினால் நலன்புச் சங்க பெயர்பலகை திரைநீக்கம் செய்யப்பட்டது.

அதனைத்தொடர்ந்து நாகர் கோவில் கிழக்கு நாகதீபம் விளையாட்டுக்கழகத்திற்கு நூலகம் ஒன்று அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வும் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஏராளமான பெரியார்கள் மற்றும் சிறார்கள் உட்பட அனைவரும் கலந்துகொண்டு நிகழ்வினை சிறப்பித்துள்ளார்கள். இவ் நலன் புரிச்சங்கத்திற்கு உதவுவோர்கள் நலன்புரிச்சங்க நிர்வாகத்தினருடன் தொடர்புகொண்டு ஆலோசனைகளை பெற்று இவ் நலன் புரிச்சங்கம் மக்களுக்கு உண்மையில் உதவியாக உள்ளதா? என்பதை அறிவித்துக்கொண்டு உங்களது உதவிகளை வழங்குங்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

# பருத்தித்துறை கடலில் கைது செய்த மீனவர்களுக்கு விளக்கமறியல்

யாழ்.பருத்தித்துறை கடற்பரப்பில் கைதுசெய்யப்பட்ட 21 மீனவர்களையும் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்ற நீதிபதி.கஜநிதிபாலன் உத்தரவிட்டுள்ளார்.

இந்தியா நாகபட்டினம் பூம்புகார் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் 21 பேர் ஸ்ரில் படகில் பருத்தித்துறை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டனர் எனக் கூறி காங்கேசன்துறை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு, யாழ். மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மேற்படி மீனவர்களை யாழ்.மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அதிகாரிகள் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது, மேற்படி மீனவர்களை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (25)

# பதிவிறக்கப் பெட்டகம்

நான் வளர்ந்த பருவத்தில் மதம் சார்ந்த அரசியலை முன்வைத்து இயங்கிய அரசியல் சூழலில், அதனூடான வன்முறைகளில் வாழ நேர்ந்தேன். என் முயற்சிகள் ஒரு பக்கம் இந்த மதவாத அரசியலை எதிர்ப்பதாகவும் இன்னொரு பக்கம் இந்த மதங்களைப் புரிந்து கொள்ளும் முயற்சிகளாகவும் அமைந்தன.

என் புரிதல்கள் எனக்கு ஒன்றைச் சொல்லின. மதங்கள் அப்படி ஒன்றும் வெறுக்கத் தக்கவை அல்ல. ஆனால் மதவாதிகள் எல்லோரும், ஆம் எல்லோரும் வெறுக்கத் தக்கவர்கள்.

யார் மதவாதிகள்? தங்கள் மதம் மட்டுமே சரியானது என நம்புகிற எல்லோருமே மதவாதிகள்..

அவர்களைக் காட்டிலும் கொடியவர்கள் யாரும் இல்லை.

ஒரு மதத்தை நம்புவதற்குத் தன் மதம் மட்டுமே சரியானது என்கிற நம்பிக்கை தேவையில்லை என உணர்த்தியவன் நான் பிறப்பதற்கு 20 மாதங்களுக்கு முன்பே செத்துப் போனான்..... இல்லை அதற்காகவே கொல்லப்பட்டான். சுட்டுக் கொல்லப்பட்டான்.

மதங்கள் பற்றி என் சிற்றறிவுக்குத் தெரிந்தவரை சரியாகச் சொல்லிப் போனவன் ஒருவன். கார்ல் மார்க்ஸ்... மதம் மக்களின் அபின்.. மது, கள்.... மயக்கும் போதை.....

**– அ.மார்க்ஸ்**

புகை பிடிப்பது கெடுதல்தான். முக்கியமாக ஐரோப்பாவில் இது ஒரு பெரிய பிரச்சினையாக இருந்தது. இருக்கிறது. இப்போது சிகரெட்டுக்கு எதிரான விழிப்புணர்வு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் சாலை வசதி, போக்குவரத்து வசதி, தண்ணீர், சுகாதாரம், கல்வி போன்ற மக்களின் ஆதாரமான தேவைகளைப் பூர்த்தி செய்யாத நமது அரசு மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்காகவும், இன்றைய அவலமான வாழ்க்கைக்கு மக்களின் மீதே பழி போடுவதற்காகவும் தான் மிகவும் ஹிஸ்டீரிக்கலாக சினிமா தியேட்டர் தோறும் மக்களைப் பார்த்து புகைக்காதீர்கள் என்று கத்திக் கொண்டிருக்கிறது. சினிமா பார்க்கவே சகிக்க முடியவில்லை. எந்தக் கதாபாத்திரம் சிகரெட் குடித்தாலும் புகை பிடிப்பது கேடு என்ற எழுத்துக்கள் வந்து விடுகின்றன. ஏன், பல பெண்கள் ஜட்டி பிராவோடு வந்து குத்தாட்டம் போடுகிறார்களே அந்தக் காட்சிகளிலும் "கண்களை மூடிக் கொள்ளுங்கள்... இந்தியாவில் ஏற்கனவே ஜனத்தொகை பெருத்து விட்டது" என்று ஸ்லைடு போட வேண்டியதுதானே?

**– சாரு நிவேதிதா**

தொலைக் காட்சி விவாதங்களில் அபூர்வமாக சில சமயங்களில் எதிர்பாராத தாக்குதல்களில் நான் நிலைகுலைந்து போவதுண்டு. இன்று அப்படி ஒரு சம்பவம். மது விலக்கு பற்றிய விவாதத்தில் கள் இறக்குவோர் சங்கத்தில் இருந்து வந்திருந்த நல்லுச்சாமியிடம் போதை தரும் மதுப் பழக்கத்தை தடை செய்வது பற்றி கேட்கப்பட்டது. அதற்கு நல்லுச்சாமி சொன்னார். "இந்த உலகிலேயே அதிகம் போதை தருவது பெண்கள்தான். மதுவை தடை செய்யச் சொல்பவர்கள் மாதுவை தடை செய்யத் தயாரா?"

ஷோ முடியும் வரை என்னால் சுதாரிக்க முடியவில்லை.

**– மனுஷ்ய புத்திரன்**

நாவல்கள் படித்தால் இளைய சமுதாயம் கெட்டுப்போய்விடும் என்று இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பல அறிவு ஜீவிகள் நினைத்திருக்கிறார்கள். குறைந்தது பெண்கள், குழந்தைகளாவது நாவல்கள் படிக்காமல் இருக்கவேண்டும் என்று நினைத்திருக்கிறார்கள். அதாவது மது, சிகரெட் போல.

திரு.வி.க. பெண் குழந்தைகளை நோக்கி, நாவல்கள் படித்துக் கெட்டுப் போய்விடாதீர்கள் என்று எழுதியிருக்கிறார். நாவல்கள் படித்தால் உடல் வியாதி வந்துவிடுமாம். மனம் தவறான பாதையில் சென்றுவிடுமாம். பெண்ணாகப் பிறப்பதே தாய்மையை அடையத்தான் அதற்குத்தான் கடவுள் இந்த உடலைக் கொடுத்திருக்கிறான் அதை நாவல்கள் படித்து வீணாக்கிவிடாதீர்கள் என்கிறார் திரு.வி.க.

பாவி மனுஷன்!

யார் சொல்லும் அறிவுரையையும் கேட்காத நம் மக்கள், திரு.வி.கவின் இந்த அறிவுரையை மட்டும் அப்படியே பின்பற்றியிருக்கிறார்கள்.

**– பத்ரி சேஷாத்ரி**

பெண்கள் ஹீரோ போல் இருப்பவனை காதலிக்கிறார்கள்...

காமெடியன் போல் இருப்பவனை நண்பனாக ஏற்கிறார்கள்...

குணச்சித்திர நடிகன் போல் இருப்பவனை கல்யாணம் செய்கிறார்கள்..

**– அம்புஜா சிமி**

# தேர்தல் வன்முறைகள் தொடர்பில் பொலிஸாரின் நடவடிக்கை போதாது

## சுட்டிக்காட்டுகிறது கபே




(கொழும்பு)

தேர்தல் வன்முறைகள் தொடர்பில் பொலிஸார் நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளதாக கபே என்ற தேர்தல் கண்காணிப்புக் குழு குற்றம் சுமத்தியுள்ளது.

ஊவா மாகாணத்தின் பதுளை மற்றும் மொனராகல மாவட்டங்களில் இடம்பெற்று வரும் தேர்தல் விதிமீறல்களை பொலிஸார் கண்டுகொள்வதில்லை எனத் தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவும், பொலிஸ் மா அதிபர் என்.கே. இளங்கக்கோனும் மொனராகல் மாவட்டத்திற்கு விஜயம் செய்திருந்த அன்று பிரதேசத்தில் அமைதி நிலவியதாக கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்கு முன்னரும் பின்னரும் தொடர்ச்சியாக வன்முறைகள் தேர்தல் விதி மீறல் சம்பவங்கள் இடம் பெற்று வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் வன்முறைகளைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் பொலிஸாருக்கு இருக்கின்ற போதிலும், சில காரணங்களினால் அவர்கள் சிரத்தை எடுத்து வன்முறைகளைக் கட்டுப் படுத்துவதில்லை என ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

# எலிக்காய்ச்சல் நோயால் கம்பஹாவில் ஒருவர் பலி



கம்பஹா மாவட்டத்தில் மீண்டும் எலிக்காய்ச்சல் நோய் மிக வேகமாக பரவி வருவதாக மேல் மாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது

கம்பஹா, மினுவாங்கொடை, மீரிகம, நீர்கொழும்பு, திவுலுப்பிட்டிய ஆகிய பிரதேசங்களிலேயே எலிக்காய்ச்சல் நோய் பல பேருக்கு தொற்றியிருப்பது தெரிய வந்துள்ளதாக சுகாதார அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

எலிக்காய்ச்சல் காரணமாக நீர்கொழும்பு மாவட்ட வைத்தியசாலையில் நீர்கொழும்பைச் சேர்ந்த 63 வயதுடைய நபரொருவர் கடந்த புதன்கிழமை உயிரிழந்துள்ளார்.

லொறிச்சாரதியான இவர் செருப்பு அணியாத நிலையில் எலிகளின் மலசலக்கழிவுகள் உள்ள இடங்களில் நடமாடியதாலேயே காய்ச்சலால் பீடிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை எதுவும் பலனளிக்காத நிலையில் உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

# ஐ.தே.க ஆட்சிக்கு வந்தால் ஒரு மில்லியன் வேலைவாய்ப்பு



ஐ.தே.க. ஆட்சிக்கு வந்தால் இளைஞர்களுக்கு ஒரு மில்லியன் வேலைவாய்ப்பு உருவாக்கப்படும் எனவும் அதில் ஒரு இலட்சம் வேலைவாய்ப்புகள் கட்சிக்காக உழைக்கும் இளைஞர்களுக்காக ஒதுக்கப்படும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பதுளையில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற பிரசாரக் கூட்டத்தில் வைத்தே இவ்வாறு தெரிவித்த அவர் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியமைத்தால் ஊவா மாகணத்தின் பல்வேறு பிரச்சினைகள் தீர்க்கப்படும் எனவும் அதில் ஒன்றுதான் இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு எனவும் குறிப்பிட்டதோடு தமது ஆட்சியில் ஒரு மில்லியன் வேலை வாய்ப்பு உருவாக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

# ஊவா மாகாண சபைத் தேர்தல்

# கடமையில் 12,500 அரச அலுவலர்கள்

## தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ள ஊவா மாகாண சபைத் தேர்தலில், சுமார் 12,500 அரசாங்க உத்தியோகத்தர்கள் தேர்தல் கடமையில் ஈடுபடுத்தப்பட உள்ளனர் என தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார்.

வெளிமாவட்ட அரச உத்தியோகத்தர்கள் 18 ஆம் திகதி முதல் கடமைகளை ஏற்பதற்காக செல்லவுள்ளனர். தேர்தல் நடைபெறும் பாடசாலைகள் 19ஆம் திகதி மூடப்படும் .

பதுளை மாவட்டத்தில் இருந்து 18 உறுப்பினர்களும் மொனராகலை மாவட்டத்திலிருந்து 14 உறுப்பினர்களும் தெரிவாவதோடு பதுளை மாவட்டத்தில் 6,09,966 வாக்காளர்களும், மொனராகலை மாவட்டத்தில் 3,32.764 வாக்காளர்களும் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.



ஊவா மாகாண சபைத் தேர்தலுக்கான பிரசாரப் பணிகள் யாவும் நாளை மறுதினம் வியாழக்கிழமை நள்ளிரவு 12.00 மணியுடன் நிறைவடைகின்றன.

தேர்தலுக்கு இன்னமும் 5 தினங்களே எஞ்சியுள்ள நிலையில் பிரதான அரசியல் கட்சிகள் இறுதிக்கட்ட பிரசார பணிகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளன. தேர்தலுக்காக அமைக்கப்பட்டுள்ள பிரசார பதாகைகள், கட் அவுட்கள் என்பவற்றை 17ஆம் திகதி நள்ளிரவுக்குப் பின் அகற்றுமாறு சகல அபேட்சகர்களிடமும் அவர்களது ஆதரவாளர்களிடமும் தேர்தல்கள் ஆணையாளர் கோரியுள்ளார்.

19ம் திகதி முற்பகலுடன் தேர்தல் கட்சி அலுவலகங்களும் அகற்றப்பட வேண்டும் எனவும் அவை அகற்றப்படாவிட்டால் அவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஆணையாளர் குறிப்பிட்டார்.

நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல் நடத்தப்படுவதை உறுதி செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் அவர் வேட்பாளர்களையும் ஆதரவாளர்களையும் கோரியுள்ளார்.

# அமெரிக்கா பயணமாகிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

நியூயோர்க் நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ள 69 ஆவது பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் செப்ரெம்பர் 22 ஆம் திகதி ஐக்கிய அமெரிக்கா செல்லவுள்ளார்.

மேலும் 24 ஆம் திகதி நடைபெறவுள்ள இப்பொதுக்கூட்டதில் உலக தலைவர்கள் மத்தியில் ஜனாதிபதி உரையாற்றுவார்.

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் வெளிவிவகார அமைச்சின் கண்காணிப்பு அமைச்சர் சஜின் டி வாஸ குணவர்தன ஆகியோரும் ஜனாதிபதியுடன் செல்லவுள்ளனர்.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீஎல். பீரிஸ் ஜனாதிபதிக்கு முன்னரே செப்ரெம்பர் 19 ஆம் திகதி நியூயோர்க் செல்லவுள்ளார்.

# வவுனியா காட்டுப் பகுதியில் தீ 10 ஏக்கர் காடுகள் எரிந்து நாசம்

(வவுனியா)

வவுனியா, ஈரப்பெரியகுளம் பிரதேசத்தில் உள்ள காட்டு பகுதியில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக 10 ஏக்கர் வரையிலான காடுகள் எரிந்து அழிந்துள்ளதாக ஈரப்பெரியகுளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, ஈரப்பெரியகுளம் பகுதியில் அமைந்துள்ள சிவில் பாதுகாப்பு படை அலுவலகத்தை சூழ்ந்துள்ள காட்டுப் பகுதியே நேற்று முன்தினம் மாலை தீப் பற்றி எரிந்துள்ளது.

சம்பவம் குறித்து பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டதையடுத்து ஈரப் பெரியகுளம் மற்றும் வவுனியா பொலிஸார் தண்ணீர் பவுசர்களின் உதவியுடன் தீயைக்கட்டுப்படுத்த முனைந்தனர்.

எனினும் அது வேகமாக பரவியமையால் விமானப் படையின் தீயணைப்பு படையினரும் சம்பவ இடத்திற்கு அழைக்கப்பட்டு தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. இவ்வாறு தீ விபத்து ஏற்பட்ட போதும் சிவில் பாதுகாப்பு படை அலுவலகத்திற்கு சேதம் ஏற்படவில்லை.

அருகில் இருந்த வயல் நிலங்களுக்கு வைக்கப்பட்ட தீயே இவ்வாறு பரவியிருக்கக் கூடும் எனக் கருதப்படுகிறது. இது தொடர்பான விசாரணைகளை ஈரப்பெரியகுளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


# வவுனியாவில் வாகன விபத்து மயிரிழையில் தப்பிய மாணவர்கள்



வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் முன்பாக உள்ள பாதசாரிகள் கடவையில் இடம்பெற்ற வாகன விபத்தில் மாணவர்கள் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர். நேற்றுக் காலை 7.35 மணியளவில் பாடசாலை முன்பாகவுள்ள பாதசாரிகள் கடவையில் கடமையில் நின்ற பொலிஸார் குறித்த கடவையூடாக மாணவர்கள் செல்வதற்காக அவ்வீதியால் பயணித்த வாகனங்களைத் தடுத்து நிறுத்தியுள்ளார்.


இதன் போது மூன்றுமுறிப்பு பகுதியில் இருந்து வவுனியா நகரை நோக்கி வந்த இராணுவத்தின் தண்ணீர் பவுசர் நிறுத்தப்பட்ட போது அதன் பின்னால் வந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்து கட்டுப்பாட்டை இழந்து தண்ணீர் பவுசருடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதன் போது தண்ணீர பவுசரை செலுத்திய சாரதி தனது வாகனத்தை நகரவிடாது கட்டுப்படுத்தியதால் மஞ்சள் கடவையில் பயணித்த மாணவர்களுக்கு எந்த வித பாதிப்புக்களும் ஏற்படவில்லை. இது தொடர்பான விசாரணைகளை வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


தற்போது நாட்டில் நிலவும் வறட்சி காரணமாக யால சரணாலயத்தில் உள்ள விலங்குகளுக்கு பொது மக்களால் கொட்டப்படும் பழங்கள் உணவுவகைகள் கண்டி, இரத்தினபுர, எம்பிலிப்பிட்டிய ஆகிய இடங்களிலிருந்து சேர்த்து வாகனங்களில் ஏற்றிக்கொண்டு வந்து விலங்குகளுக்கு வழங்கப்படுகிறது.

27. பின்வரும் எந்தப் பொருட் சோடி மேலிருந்து பார்க்கப்படும் போது ◎ ⊙ எனத் தோன்றும்.




1. 2. 3.

28. பின்வரும் எந்தப் பொருட்சோடி மேலிருந்து பார்க்கப்படும் போது ◎ ◎ எனத் தோன்றும்.




1. 2. 3.

29. அடுத்துவரும் வினாக்களுக்கு உருக்களையும் அவை குறிப்பிடும் விடயங்களையும் பயன்படுத்தி விடை எழுதுக.



ஆண் பிள்ளை — பெண் பிள்ளை — காலையில் — கோயில் — திரும்பி

30.



வீடு — செல்கின்றது — வருகின்றது — நோக்கிச் — மகிழ்ச்சியுடன்


31.



32. எதனைக் குறிக்கின்றது?

1. ஆண் பிள்ளை வீடு நோக்கிக் காலையில் செல்கின்றது.
2. ஆண் பிள்ளை கோயிலை நோக்கிக் காலையில் செல்கின்றது.
3. ஆண் பிள்ளை காலையில் கோயிலை நோக்கிச் செல்கின்றது.

33.



குறிப்பது?

1. பெண் பிள்ளை வீடு நோக்கி மகிழ்ச்சியுடன் திரும்பிவருகின்றது.
2. பெண் பிள்ளை வீட்டிற்கு திரும்பி வருகின்றது.
3. பெண் பிள்ளை திரும்பி வீடு நோக்கி வருகின்றது.

**இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் சனிக்கிழமை வெளிவரும்**



## தரம் - 4 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015


பகுதி - I
1:30 மணி

# கல்வி முரசு




**1 ஆம் 2 ஆம் வினாக்களில் பொருத்தமற்ற உருவைத் தெரிக.**

1.




1. 2. 3. 4.

2.



1. 2. 3. 4.

3. இம்மெழுகுதிரிகள் ஒரு குறித்த இயல்பு தொடர்பாக ஒழுங்குபடுத்தி வைத்தால் கிடைக்கத்தக்க யாது?



A B C D

1. CBDA 2. BACD 3. DBCA

4. உடைந்த ஒரு வரைகோலின் 4 பகுதிகள் கீழே தரப்பட்டுள்ளன.




1. 2. 3. 4.

வரைகோலை ஆக்குவதற்கு சரியாகப் பொருத்த வேண்டிய விதத்தைக் காட்டும் விடையைத் தெரிவு

1. 4213 2. 2431 3. 3142

5.



1. 2. 3. 4.

6.



1 2 3 4 5 6

போத்தலை ஆக்குவதற்குப் பொருத்த நான்கு துண்டுகள் இடம்பெறும் விடையைத் தெரிக.

1. 3215 2. 4532 3. 3521

**7 ஆம் 8 ஆம் வினாக்களிற்கு பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து வெற்றிடத்தில் எழுதுக.**

07. பலாவுக்குச் சுளைபோன்று மாதுளைக்கு ..........................
   1. பருப்பு  2. முத்து  3. தாறு

08. திறப்புக்கு கோர்வை போன்று புகையிலைக்கு ..........................
   1. சிப்பம்  2. குவியல்  3. கற்றை

09. ஒவ்வொரு பாத்தியிலும் ஒரு வகை மாத்திரம் இருக்கத்தக்கதாக 5 பாத்திகளில் மரக்கறிப்பயிர்களும், பழமரங்களும் வளர்க்கப்படுகின்றன. பழமரங்கள் வளர்க்கப்படும் பாத்திகளின் எண்ணிக்கை மூன்று ஆகும் மரக்கறிப் பயிர்களும் பழமரங்களும் இருக்கத்தக்க விதத்தைத் தெரிவு செய்க.
   1. கோவா, முள்ளங்கி, அவரை, கொய்யா, தோடை
   2. கோவா, முள்ளங்கி, கொய்யா, தோடை, பப்பாசி
   3. கோவா, வாழை, கொய்யா, தோடை, பப்பாசி


**10 ஆம் 11 ஆம் வினாக்களுக்குப் பின்வரும் அடைப்பில் தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்தி விடையைத் தெரிவு செய்க.**

10.




லீற்றருக்குச் சமமான படத்தை வரைக.

..........................................................................

11.

எதற்குச்சமம்.
   1. 1000ml  2. 1400ml  3. 1600ml

12. பின்வருவனவற்றில் மிகவும் சரியான தொடர்பு.



13. ஒரு வீதியில் இரு மின்கம்பங்களுக்கிடையே 4 கொடிகள் வீதம் தொங்கவிட்டுஅவ்வீதியை அலங்கரிக்கத் தீர்மானிக்கப்பட்டது. வீதியில் 9 மின்கம்பங்கள் இருந்தால் அவற்றுக்கிடையே தொங்கவிடுவதற்கு எத்தனை கொடிகள் தேவை?
   1. 32 கொடிகள்  2. 36 கொடிகள்  3. 40 கொடிகள்

14. 2011 ஆம் ஆண்டில் 365 நாட்களும் 2012 ஆம் ஆண்டில் 366 நாட்களும் உள்ளன. 2011 ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் 1 ஆம் திகதி புதன் கிழமையாகும். 2012 ஆம் ஆண்டில் ஜனவரி 1 ஆம் திகதி வியாழக்கிழமையாகும். இதற்கேற்ப 2013 ஜனவரி 1 ஆம் திகதி
   1. புதன் கிழமை  2. வெள்ளிக்கிழமை  3. சனிக்கிழமை



15. ஐந்து திங்கட்கிழமைகள் உள்ள ஓர் ஆவணி மாதத்தில் உள்ள திங்கட்கிழமைகளின் தேதிகளின் மொத்தத்திற்கு இருக்கத்தக்க உயர்ந்த பட்சபெறுமானம்
   1. 75  2. 80  3. 85

16. வகுப்பறையில் நிதமும் இருப்பவை.
   1. ஆசிரியரும் மாணவரும்  2. கூரையும் தளபாடங்களும்  3. புத்தகமும் தண்ணீர்ப்போத்தலும்

17. ஒரு புத்தகத்தில் நித்மும் இருப்பவை.
   1. எழுத்துக்கள் படங்கள்  2. கருத்தும் அச்சுப்பிழையும்  3. படங்களும், விளக்கமும்

18. சந்திரன் தோன்றிய ஒருநாளில் நள்ளிரவில் வீட்டிலிருந்து வெளியே வந்தபோது வௌவால்கள் பறந்து செல்வதைக்கண்டேன் என ராணி கூறினாள். இது உண்மையாக இருக்கலாம் இதற்குக் காரணம்.
   1. இருளில் அத்தகைய ஒரு நிகழ்ச்சியைப் பார்க்க முடியாது.
   2. பகலில் மட்டுமே வௌவால்கள் பறந்து திரியும்.
   3. நிலவில் வௌவால்கள் பறப்பதைப் பார்க்க முடியும்.

19. ராஜியின் ஒரே பிள்ளையாகிய காயத்திரி பாடசாலைக்குத் தாமதமாக வந்து தங்கையுடன் கடைக்கு சென்று திரும்பி வருவதற்குத் தாமதம் ஏற்பட்டதெனக் கூறினார். இது உண்மையாவதற்குக் காரணம்.
   1. காயத்திரிக்குச் சில சகோதரிகள் இருக்கின்றமை.
   2. காயத்திரிக்கு உலாவித் திரிய விரும்புகின்றமை.
   3. காயத்திரியின் சிறிய தாயாரின் ஒரு மகளும் அவரின் வீட்டில் இருக்கின்றமை.

20. பாடசாலைச் சேவைப் பேருந்துதாமதமாக பாடசாலைக்கு வருகின்றது.
   1. இது பெரும்பாலும் நடைபெறும் ஒரு நிகழ்ச்சியாகும்.
   2. இது ஒரு போதும் நடைபெறுவதில்லை.
   3. இது சில வேளைகளில் நடைபெறும் நிகழ்ச்சியாகும்.

21. நாம் ஒற்றுமையாக இருந்தால் எக்காரியத்தையும் சாதிக்க முடியும்.
   1. இது எப்போதும் உண்மையாகும்.
   2. இது பெரும்பாலும் உண்மையாகும்.
   3. இது ஒரு போதும் உண்மையாகாது.

22. காற்று வீசுவதால் வெப்பம் குறைகின்றது. அதற்கான காரணம்.
   1. காற்றுக் குறைகின்றது.
   2. காற்றுக் கூடுதலாக வெப்பத்தை அள்ளிச் செல்கின்றது.
   3. காற்று வீசுவதால் மாற்றமில்லை.

23. கம்பனின் வீடு வள்ளுவரின் வீட்டுக்கு வடக்கே உள்ளது. வள்ளுவரின் வீடு இளங்கோவின் வீட்டுக் வடக்கே உள்ளது. ஆகவே
   1. கம்பனின் வீடு இளங்கோவின் விட்டுக்கு வடக்கே உள்ளது.
   2. இளங்கோவின் விடு கம்பனின் வீட்டுக்கு அண்மையில் உள்ளது.
   3. இளங்கோவின் வீடு வள்ளுவரின் வீட்டிலும் பார்க்க கம்பனின் அண்மையில் உள்ளது.

**வெற்றிடங்களை நிரப்புவதற்கு அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிந்து நிரப்பி எழுதுக.**

விமலா வலைப்பந்தில் மிகுந்த விருப்பத்தைக் கொண்டுள்ளாள். ஆகவே ஆசிரியர் அதற்கா (24) .............................. (உற்சாகப்படுத்துவதற்கு, பயிற்சியளிப்பதற்கு, வழிப்படுத்துவதற்கு) எண்ணின விமலா மிகுந்த விருப்பத்துடன் நேரம் தவறாமல் சென்று வலைப்பந்து (25) .............................. (பா அடிக்க, விளையாட) நன்றாகக் கற்றுக் கொண்டாள். அதனால் விமலா மிகுந்த (26) .............................. (கவலை, இரக்கம், மகிழ்ச்சி) அடைந்தாள்.

## ஆபத்து!



விபத்துக்களை ஏற்படுத்தக்கூடிய வகையில் மின்கம்பம் ஒன்று யாழ்.வைத்தியசாலை வீதியின் அருகே காணப்படுகின்றது.

இப்பகுதியில் இந்த ஒரு மின்கம்பம் மட்டுமே வீதியின் கார்ப் பெற்றுக்குள் காணப்படுகின்றது. இதனால் வீதியில் செல்வோர், வாகனங்களை விலத்திச் செல்லும் போது பெரும் இன்னல்களுக்கு முகம் கொடுப்பதாகவும் இதனைச் சீர் செய்ய உரியவர்கள் நடவடிக்கை ஏ்டுத்து ஏற்படவுள்ள விபத்துக்களைத் தவிர்க்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ)

# எதிர்கால திட்டமிடல்கள் மக்களுக்கு நன்மையளிப்பதாக அமையவேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

எதிர்கால திட்டமிடல்கள் மக்களுக்கு பயனுள்ளதும் நன்மையளிக்கக் கூடிய வகையிலும் அமையப் பெறுதல் வேண்டுமென அமைச்சர் டக்ளஸ தேவானந்தர் தெரிவித்துள்ளார்.

ஏ9 வீதி மாங்குளம் வீதியில் அமைந்துள்ள மகிழ்ச்சிக்கான பாலம் நிலையத்தில் வன்னிவள சுய அபிவிருத்தி நிறுவனப் பிரதிநிதிகளுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது பகுதியை அபிவிருத்தியால் கட்டியெழுப்பும் அதே வேளை, மக்களின் வாழ்வாதாரத்தையும், பொருளாதாரத்தையும் கட்டியெழுப்ப வேண்டியதும் அவசியமாகவுள்ளது.

இந்நிலையில் எதிர்காலத்துக்கு வளம்சேர்க்கும் நோக்குடன்



செயற்படுத்தப்படவுள்ள ஒவ்வொரு திட்டங்களும் எதிர்காலத்தை முன்னிறுத்தியதாக கொள்ள வேண்டும்.

அந்தவகையில் தான் மக்களுக்கு பயனுள்ள வகையிலும் நன்மையளிக்கக் கூடிய வகையிலும் ஒவ்வொரு திட்டங்களும் நன்கு திட்ட... பட்டு செயற்படுத்தப்ப... ...ாது அந்தந்தப் பகுதி ...த் தியிலும் பொ... முன்னேற்றத்...

எனவே, ...ப் பாதுகாத்துக் ...கொண்டு அதிலிருந்து முன்னேற்றம் காண வேண்டியது அவசியமானது. இந்நிலையில் பனம் தொழிற்துறை மட்டுமல்லாது ஏனைய கைப்பணி மற்றும் கைவினை தொழிற்துறை சார்ந்தோருக்கு ஒளிமயமான வளமான எதிர்காலத்தைப் பெற்றுக் கொடுப்பதே எமது நோக்காகும்.

இந்நிலையில் ஒரு பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்தி மேம்பாட்டுக்கு அந்தந்தப் பகுதிகளிலுள்ள பொது அமைப்புக்களினவை ஒத்துழைப்புகள் அவசியமானது என்பதுடன், பெண்களை கொண்டியங்கும் பொது அமைப்புக்களின் பங்களிப்பும் காத்திரமானது என்றும் சுட்டிக்காட்டினார்.

இதனிடையே அங்கு வைக்கப்பட்டிருந்த கைவினை மற்றும் கைப்பணிப் பொருட்களை பார்வையிட்ட அமைச்சர் துறை சார்ந்தோருக்கு தமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டார். இதன்போது மாங்குளம் பங்குத் தந்தை வண.பிதா பத்திநாதர் அடிகளாரும் கலந்துகொண்டார்.

# பொலிகண்டிப் பிரதேசங்களில் தாட்டான் குரங்குகள் அட்டகாசம்


## அச்சத்தில் வாழும் மக்கள்

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பொலிகண்டி கிராமத்தில் தாட்டான் குரங்குகள் பொதுமக்களின் குடிமனைகளுக்குள் புகுந்து பயன்தரு மரங்களை அழித்து அச்ச உணர்வை ஏற்படுத்தி வருவதாக கிராமவாசிகள் தெரிவித்துள்ளனர்.

கரையோரப்பகுதியை அண்டிய குடிமனைகளுக்குள் சென்று இரவு பகலின்றி வீட்டின கூரைகளுக்கு மேல் பாய்ந்து தாவித்திரிவதாகவும் வீட்டில் உள்ள மா, தென்னை போன்ற பயன்தரு மரங்களிலிருந்து கிடைக்கும் பயன்களைப் பெற்ற பின் தூக்கிவீசுவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

இதனை விட மக்கள் நடமாட்டம் அதிகரித்துள்ள வீதிகளில் நின்று வீதியால் செல்வோருக்கும் இடையூறுகளை விளைவித்து வருவதுடன் பாடசாலைக்குச்செல்லும் மாணவர்கள் அச்சத்துடன் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

இவற்றை பொதுமக்கள் பிடித்து காட்டுப் பிரதேசங்களுக்குள் விட எண் ணியபோதிலும் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழலினால் அந்த எண்ணம் கைவிடப் பட்டதாகவும்



அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே பொதுமக்களுக்கு தினமும் இடையூறுகளையும் அச்சத்தையும் ஏற்படுத்திவரும் இத்தாட்டான் குரங்குகளை காட்டுப் பிரதேசங்களுக்கு அனுப்பி வைக்க சம்பந்தப்பட் டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கிராமவாசிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (116)

# மாடுகளுக்கு கால்வாய் நோய் இறைச்சி விற்பனை பாதிப்பு

மல்லாவி பிரதேச சபையின் அளுகைக்குட்பட்ட மல்லாவி மாட்டிறைச்சிக் கடை கேள்வி அறிவித்தல் மூலம் சபையினால் குத்தகைக்கு வழங்கப்பட்ட நிலையில் தற்போது மாடுகளுக்கு கால்வாய் நோய் ஏற்பட்டதால் மாட்டு இறைச்சி விற்பனை நிறுத்தப்பட்டு ஆடு, கோழி, இறைச்சி, விற்பனை இடம்பெறுவதால் வருவாய்



குறைவடைந்துள்ளதாக குத்தகைக்காரரால் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த பெப்ரவரி மாதம் குத்தகைக்கு கடை வழங்கப்பட்ட நிலையில் முன்னர் வியாபாரம் இடம்பெற்றதாகவும் பின்னர் 2 மாதங்கள் பூட்டிய நிலையில் மீளவும் திறக்கப்பட்டு மான், மரை ஆடு, ஆகிய இறைச்சி விற்பனை செய்யப்பட்டு வருவத்ாகவும் குத்தகைக்காரரால் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் வருவாய் குறைவடைந்து போனதால் மிகுந்த கஷ்டத்தின் மத்தியில் பிரதேச சபைக்கு பணம் கட்டியதாகவும் தெரிவிக்கும் குத்தகைக்காரர் இதனால் தாம் நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளதாக கவலை தெரிவித்தார். (140)

# புதுப்பொலிவுபெறும் தபால்பெட்டிகள்




(யாழ்ப்பாணம்)

140 ஆவது உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்டத்தில் பல பகுதிகளிலும் பொருத்தப்பட்டுள்ள தபால் பெட்டிகள் வர்ணம் பூசப்பட்டு புதுப் பொலிவு பெறுகின்றன.

தற்போது தபால் பெட்டிகளுக்கும் வர்ணம் பூசப்பட்டுள்ளதுடன் கடிதம் எடுக்கும் நேரம் போன்றவை குறித்தும் அவற்றில் தகவல்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

மிக நீண்டநாட்களாக புனரமைப்புச் செய்யப்படாது இருந்த தபால் பெட்டிகளும் இந்நிகழ்விற்காக புனரமைக்கப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் 9 ஆம் திகதி 140 ஆவது உலக அஞ்சல் தினம கொண்டாடப்படவுள்ளது. (இ)

# யாழ்.போதனா வைத்தியசாலையில் கண் வங்கி ஆரம்பிக்க ஏற்பாடு

யாழ்.போதனாவில் கண் வங்கி ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதாக வைத்தியசாலையின் பிரதி பணிப்பாளர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார்.

தற்போது கண்தானம் மேற்கொள்ள விரும்புவோர் விலாசங்கள் கிடைத்துள்ள போதும அவர்களால் ஒப்புதல் போன்ற விடயங்கள் குறித்தும் இவ்வாறு ஒருவர் இறந்து 24 மணி நேரத்தினுள் கண் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு கண் எடுக்கப்பட்டு பேணப்பட வேண்டும். இவற்றுக்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படவேண்டும் இதற்கென கண் வங்கி தயார் செய்யப்பட வேண்டும்.

முதற்கட்டமாக விலாசம் பெற்றுள்ளோம் கண் வங்கி உருவாக்கியவுடன் இக் கண்தானத்தை மேற்கொள்ள முடியும் என பிரதி பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (இ,25)

# யாழில் கடந்த 8 மாதங்களில் 14 அனர்த்த சம்பவங்கள் பதிவு

யாழ். மாவட்டத்தில் கடந்த எட்டு மாதங்களில் 14 அனர்த்த சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப்பணிப்பாளர் ரவி சங்கரப்பிள்ளை நேற்று தெரிவித்தார்.

கோப்பாய், பருத்தித்துறை, மருதங்கேணி, யாழ்ப்பாணம், காரைநகர், நெடுந்தீவு, தெல்லிப்பளை பிரதேச செயலகங்களுக்குட்பட்ட பகுதிகளில் இந்த அனர்த்த சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

அதில், கோப்பாய் தீ விபத்து 01, மருதங்கேணி மற்றும் கசூரினா சவுக்கு காட்டுப் பகுதிகளில் 4 காட்டுத் தீ விபத்து, சிறிய அளவிலான சூறாவளிச் சம்பவம் 2, மின்னல் தாக்கம் 03 சம்பவங்களும், பலமான காற்றுத் தொடர்பில் நெடுந்தீவு, காரைதீவு பகுதியில் 04 சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

அத்துடன், மின்னல் தாக்கத்தினால் ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும், இதுவரை தீ. விபத்துக்கள் மற்றும் மினிசூறாவளியினால் பாதிப்பட்டவர்களுக்கான நஷ்டஈடுகள் வழங்கப்பட்டுள்ளதாக வும் அவர் மேலும் தெரிவித்தார்.(இ,25)


## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ........................................

முகவரி :- ........................................

பிறந்த ஆண்டு :- ........................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

........................................

பெற்றோர் கையொப்பம்

# ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகளுக்கு எதிரான போர்

## 600 வீரர்களை அவுஸ்ரேலியா அனுப்பிவைப்பு

ஈராக்கிலும், சிரியாவிலும் கைப்பற்றும் பகுதிகளை இணைத்து இஸ்லாமிய அரசை ஏற்படுத்தும் நோக்கில் அங்கு ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகள் யுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். கிட்டத்தட்ட 35,000 போராளிகள் அந்தப் பகுதிகளில் போரிட்டுக் கொண்டிருப்பதாக அமெரிக்க புலனாய்வுத்துறை . தெரிவித்துள்ளது. இதனால் ஆயிரக்கணக்கானோர் பலியானதுடன் இலட்சக்கணக்கான மக்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேற வேண்டியும் ஏற்பட்டுள்ளது.

இந்த நெருக்கடியை ஒரு முடிவுக்குக் கொண்டுவரும் எண்ணத்துடன் கடந்த வாரம் அமெரிக்க அதிபர் பாரக் ஒபாமா ஏவுகணைத் தாக்குதல்கள் மூலம் தீவிரவாதிகளை எதிர்த்து போரிடும் திட்டத்தை முன் வைத்தார். இதற்கான உலக நாடுகளின் ஒத்துழைப்பையும் அவர் எதிர்நோக்கினார்.

இதனைத் தொடர்ந்து சவுதி அரேபியாவிற்கு அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜான் கெர்ரி வருகை தந்தார். அங்கு நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பத்துக்கும் மேற்பட்ட அரபு நட்பு நாடுகள் தீவிரவாதிகளை எதிர்ப்பதற்கான தங்களின் ஒப்புதலை அளித்துள்ளன. இதில் துருக்கி மட்டும் தங்களின் ஒப்புதலை அளிக்கவில்லை. கிட்டத்தட்ட 40 நாடுகள் உலகளாவிய இந்தத் தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கையில் பங்கேற்க ஒப்புதல் அளித்துள்ளதாக கூறப்படுகின்றது.

இந்தப் போரில் இணைந்துள்ள ஆஸ்திரேலியா 600 வீரர்களை ஐக்கிய அரபு குடியரசு நாடுகளுக்கு அனுப்புவதாக அந்நாட்டுப் பிரதமர் டோனி அபோட் தெரிவித்துள்ளார். அவரது இந்த அறிவிப்பானது பயங்கரவாத அச்சுறுத்தல் அதிகரித்துள்ளதை ஆஸ்திரேலியா அறிவித்த இரண்டு நாட்களில் வெளிவந்துள்ளது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

நாட்டின் பாதுகாப்பை நிலைப்படுத்த இந்த உதவியை மிகவும் வரவேற்பதாக ஈராக் தெரிவித்துள்ளது என்று அபோட் இன்று குறிப்பிட்டார். இதனைத் தொடர்ந்து பிரான்சில் இன்று பிராந்திய பாதுகாப்பு உச்சி மாநாடு நடைபெறவுள்ளதாகவும் தகவல்கள் குறிப்பிட்டுள்ளன.'



அமெரிக்கா, ஒஹியோ, மேரியன் பகுதியில் கிறாம்பெரிஸ் பழங்களின் அறுவடை களைகட்டி உள்ளது

உலகச் செய்திகள்

# தேசத்தின் வளர்ச்சிக்காக திறமையை பயன்படுத்துங்கள்

## பிரதமர் மோடி தெரிவிப்பு



தங்கள் திறமைகளை முழு வீச்சில் பயன்படுத்தி பொறியியல் துறையில் உலகத்தரம் வாய்ந்த சேவைகளை அளிக்குமாறு பொறியாளர்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இன்று விஞ்ஞானி எம்.விஸ்வேஷ். வரய்யாவின் பிறந்ததினம். அவரை கௌரவிக்கும் வகையில் ஆண்டு தோறும் செப்டம்பர் 15 ஆம் திகதி, பொறியாளர்கள் தினமாகக் கொண்டாடப்படுகிறது. இதனையொட்டி, டுவிட்டரில் வாழ்த்து ,தெரிவித்துள்ள பிரதமர் மோடி "தங்கள் திறமைகளை முழு வீச்சில் பயன்படுத்தி பொறியியல் துறையில் உலகத்தரம் வாய்ந்த சேவைகளை அளிக்க வேண்டும் என்றார்.

கடின உழைப்பு, ஆராய்ச்சிகள், புத்தாக்கம் மூலம் நமது பொறியாளர்கள் நாட்டை மேம்படுத்துவதில் பெரும் பங்காற்றியிருக்கின்றனர்" எனவும் தெரிவித்துள்ளனர்.

# 23 நாளில் 7 பேரை கொலை செய்த "மனநோய்" கொலையாளி கைது



கடந்த 23 நாட்களில் 7 பேரை கொலை செய்த வழக்கில், சேலம் பெத்தநாயக்கன் பாளையத்தைச் சேர்ந்த "மனநோய்" கொலையாளியை காவல் துறையினர் கைது செய்துள்ளனர்.

சேலம் மாவட்டம் தலைவாசல் அருகே பெரியேரி கிராமத்தைச் சேர்ந்த செல்வம் (வயது 45) என்பவரது கடைக்குள கடந்த சில தினங்களுக்கு முன் அடையாளம் தெரியாத ஒருவர் நுழைந்துள்ளார்.

குறித்தநபரை அந்த மர்ம நபர் அரிவாளால் வெட்டி பணம் பறிக்க முயற்சித்துள்ள போது அவர் கூச்சல் எழுப்பியதையடுத்து திரண்டு வந்த அயலவர்கள் இளைஞரைப் பிடித்து, தலைவாசல் காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

காவல்துறையினர் விசாரணை நடாத்தியதில் தெரியவந்தவை வருமாறு, சேலம் அருகே கத்திரிப்பட்டியைச் சேர்ந்த சுப்புராயன் கடந்த 2012 ஆம் ஆண்டு தனது பாட்டியை பணத்துக்காக கொலை செய்த வழக்கில் கைது செய்யப்பட்டு, சேலம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். கடந்த ஒரு மாதத்துக்கு முன், சிறையில் இருந்து வெளியே வந்த சுப்புராயன், சேலம் மாவட்டம் தம்மம்பட்டி அருகே உலிபுரத்தில் உள்ள கல்குவாரியில் வேலைக்கு சேர்ந்துள்ளார். கடந்த ஆகஸ்ட் 13 ஆம் திகதி குவாரி அருகே தனியாக வசித்து வந்த பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்ததுடன், அவரைக் கொலை செய்துள்ளார். வீட்டில் இருந்து ரூ.10 ஆயிரம் ரூபா பணத்தையும் திருடிக்கொண்டு திருச்சி சென்றுள்ளார். ஆகஸ்ட் 21 ஆம் திகதி டால்மியாபுரம் கள்ளக்குடியில் 82 வயது மூதாட்டியை கொலை செய்து ஆயிரம ரூபாய் திருடியுள்ளார்.

அரியலூர் மாவட்டம் கைரலாபாத் கிராமத்தில் தனியாக வசித்து வந்த லட்சுமி (75), சாவித்திரி (50) ஆகிய இருவரைக் கொலை செய்த சுப்புராயன், வீட்டில் இருந்த பணத்தையும் திருடிதப்பியுள்ளார்.

கடந்த 5 ஆம் திகதி அரியலூர் சேந்தமங்கலத்தில் வேல் முருகன் என்பவர் வீட்டில் புகுந்து அவரை கொலை செய்து, அவரது மனைவியையும் பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய் துள்ளதுடன் அவர்களது இரண்டு வயது குழந்தையையும் கொலை செய்துள்ளார். 23 நாட்களில் 7 பேரை கொலை செய்த இவர் ரிக் வண்டியில் வேலை செய்து வந்துள்ளார். இச்சூழலில் பாட்டி கொலை வழக்கில் சிறையில் இருந்து வெளியே வந்த சுப்புராயனுக்கு வேலை எதுவும் கிடைக்காததால், மனநோய் போல் கொலை, கொள்ளையில் ஈடுபட்டு வந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

# புற்றுநோய் திசுக்களை கண்டறிய நாய்களுக்கு மோப்பசக்தி பயிற்சி

ஆரம்ப கட்ட புற்றுநோய் திசுக்களை கண்டறியும் முயற்சியில் கடந்த 2004 ஆம் ஆண்டிலிருந்து உயர்வகை நாய்களின் மோப்ப சக்தி பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இவ்வகை நாய்கள் தங்களது சிறப்புத் தன்மையினால் சிறுநீர்ப்பை புற்றுநோய், மெலனோமா, நுரையீரல், மார்பகம் மற்றும் ப்ராஸ்டேட் உட்பட அனைத்து வகைகளையும் கண்டறிகின்றன. ஆனால் மருத்துவப் பயன்பாடுகள் இவை ஏற்றுக் கொள்ளப் படுவது குறித்து விஞ்ஞானிகள் இன்னமும் பேச்சுவார்த்தைகளிலேயே உள்ளனர். நீரிழிவு நோயாளிகளின் அவசரத்திற்கும், வலிப்பு நோயாளிகளின் அவசர நிலை குறித்தும் வழிப்போக்கர்களுக்கு எச்சரிக்கை அளிக்கும் வண்ணமும் நாய்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளன.

அதுபோல் அமெரிக்காவின் பென்சில்வேனியா பல்கலைக் கழகத்தில் உள்ள பயிற்சி பெற்ற நாய்கள் புற்றுநோய் திசுக்களை இனம் பிரித்துக் காட்டுவதில் தேர்ந்தவையாக இருக்கின்றன. நாங்கள் இதனை எதிர்பார்க்கவில்லை. ஆனால் எங்களின் இந்த முயற்சியானது ஆரம்பகட்ட புற்றுநோய் திசுக்களைக் கண்டறிவதில் ரசாயன் மற்றும் நானோ தொழில்நுட்பத்தை மேம்படுத்தும் என்று நாங்கள் நம்புகின்றோம் என்று நாய்கள் பயிற்சி மையத்தின் நிறுவனரும், நிர்வாக இயக்குநருமான டாக்டர் சிண்டி ஓட்டோ குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மே மாதம் அமெரிக்காவில் சிறுநீரகவியல் மருத்துவர்களின் வருடாந்த மாநாடு நடைபெற்றது. அதில் இத்தாலிய பாதுகாப்பு அமைச்சகத்தில் இருந்த இரண்டு பயிற்சி பெற்ற ஜெர்மன் ஷெப்பர்ட் வகை நாய்கள் 98 சதவிகிதம் சிறுநீரில் காணப்பட்ட ப்ராஸ்டேட் புற்றுநோய் திசுக்களை சரியாகக் கண்டறிந்தன என்பது குறிப்பிடப்பட்டது. ஆனால் அதன்பின்னர் தொடர்ந்த ஆராய்ச்சிகளில் முன்னேற்றம் காணப்படவில்லை என்பதுவும் தெரியவந்தது.

எனினும், நூற்றுக்கணக்கான நிறுவனங்களும், ஆயிரக்கணக்கான விஞ்ஞானிகளும் புற்றுநோயின் ஆரம்பகட்ட அறிகுறிகளைக் கண்டறிய முயற்சி செய்துகொண்டிருக்கும் இத்துறையில் தங்கள் மோப்ப சக்தி மூலம் கான்சர் திசுக்களைக் கண்டறிந்து சொல்லும் இந்த நாய்களும் ஒரு வகையில் ஆராய்ச்சியாளர்களைப் போலவே செயல்படுவதாக கூறப்படுகின்றது.

# சீன ஊடுருவலை தடுக்க அரசுக்கு தைரியம் இல்லை

## காங்கிரஸ் குற்றச்சாட்டு




சீன ஊடுருவலை தடுக்கும் மத்திய அரசுக்கு தைரியம் இல்லை என்று காங்கிரஸ் மூத்த தலைவர் மணீஷ் திவாரி குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து டில்லியில் நேற்று நிருபர்களிடம் அவர் கூறியதாவது பஞ்சசீல கொள்கையின் 60 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு அண்மையில் இந்திய குழுவினர் சீனாவுக்கு சென்றிருந்தனர். அப்போது சீனா தரப்பில் அந்த நாட்டு வரைபடம் வழங்கப்பட்டுள்ளது. அதில் அருணாச்சலப் பிரதேசத்தின் பல பகுதிகள் சீனாவின் பகுதிகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளன.

இதேபோல் லடாக் எல்லையில் சீன இராணுவம் இப்போது ஊடுருவியுள்ளது. ஆனால் சீனாவின் அத்துமீறல்களை மத்திய அரசு கண்டுகொள்ளாமல் தொடர்ந்து மௌனம் சாதிப்பதுடன் சீன இராணுவ ஊடுருவலைத் தடுக்கும் தைரியம் அரசுக்கு இல்லை என்றும் அதனால் ஊடுருவல்கள் அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

காஷ்மீரின் லடாக் பகுதியில் சுமார் 500 மீற்றர் தொலைவுக்கு சீன இராணுவம் ஊடுருவி இருப்பதாகவும், அந்த நாட்டு வீரர்கள் கூடாரங்கள் அமைத்து தங்கியிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. சீன அதிபர் ஜி ஜின்பிங் இந்தியாவுக்கு வருகை தரவுள்ள நிலையில் இந்த ஊடுருவல் இருநாடுகளிடையேயும் பதற்றத்தை அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# பிரதேச சபை ஊழியர்கள் 24 பேருக்கு நேற்று நியமனம்



வேலணைப் பிரதேசசபையில் இதுவரை வெற்றிடமாகவிருந்த 24 வெற்றிடங்களுக்குரிய நியமனங்களை நேற்று ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரினால் (உதயன்) வேலணைப் பிரதேச சபையில் வைத்து வழங்கப்பட்டது. பிரதம அதிதியாக கலந்து கொண்டு நியமனங்களை வழங்கி வைத்து உரையாற்றிய நீடாளுமன்ற உறுப்பினர்,

எமது தீவக மக்கள் இயற்கை காரணிகளினால் வறுமையெனும் பதத்தில் பல்வேறான துயரங்களை அனுபவித்து வருகின்றனர். குடிநீர் பிரச்சினை மற்றும் கால்நடைகளை வளர்ப்பதில் எதிர்நோக்கும் பிரச்சினைகள், வாழ்வாதாரத்தொழிலில் இவ்வாறு பல்வேறான இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர். இருந்த போதிலும் தீவக பிரதேச மக்களின் நலன்களிற்காக விசேட திட்டங்களை அமுல் செய்து வருகின்றோம் என்று தெரிவித்தார்.

தீவகத்திற்கு வெளியே நின்று மக்களின் வியர்வைத் துளிகளிலும் இரத்தத்திலும் அரசியல் செய்து குளிர்காய்ந்தவர்கள் தற்போது தீவகப் பிரதேசங்களிலும் நுழைந்து தங்கள் சூதாட்ட அரசியலினை ஆரம்பித்துள்ளனர். இவர்கள் எந்த மக்களிற்கும் இதுவரை எதையும் பெற் றுக்கொடுத்ததும் இல்லை பெற்றுக்கொடுக்கப்போவதும் இல்லை. மக்களை நடுத்தெருவிற்கு வரச்செய்து குளிர்காய மட்டுமே இவர்களால் முடியும்.

தீவகம் குடிநீர் இன்றி வறட்சியால் வாடுகின்ற போது எம்மால் முன்வைக்கப்பட்டு அரசினால் நிதி ஒதுக்கப்பட்ட இரணைமடு குடிநீர்த்திட்டத்தினை எதிர்த்தவர்கள் தற்போது தீவக மண்ணில் வந்து நின்று நீலிக்கண்ணீர் விடும் ஓநாய்கள் ஆகிவிட்டனர்.

தீவக மக்கள் உணவின்றி தவித்த போது நெடுந்தீவு வரை சென்று தனது தோள்களில் உணவுப்பொதி சுமந்து ஒவ்வொரு வீடாக சென்று உணவளித்தவர் எமது தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா என்பதை தீவக மக்கள் என்றும் மறக்க மாட்டார்கள் எமது மக்களிற்கு வாழ்வளிக்கும் உத்தமரையும் நீலிக்கண்ணீர் வடிக்கும் ஓநாய்களையும் நன்றாகவே இனங்காணத்தெரியும் எனத் தெரிவித்ததுடன்,

இன்று பெற்ற நியமனங்களூடாக மக்களிற்கு நிறைந்த சேவைகளையும் பிரதேசத்திற்கு விசுவாசத்துடனும் பணிபுரிவதோடு தமது குடும்பத்தையும் நன்றாக பேண வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

பிரதேசசபைத் தவிசாளர் சிவராசா (போல்) தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கொ.ஜக்சில், உபதவிசாளர், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அநாமதேய துண்டுப்பிரசுரம்



(யாழ்ப்பாணம்)

"இன்று செப்ரெம்பர் 15 சர்வதேச ஜனநாயக தினம்" என்ற தலைப்பிலான அநாமதேய துண்டுப்பிரசுரம் ஒன்று யாழ். நகரப்பகுதிகளில் நேற்று ஒட்டப்பட்டும் வீதிகளில் வீசப்பட்டும் இருந்தன.

இதில் அன்று, இன்று என இரு பிரிவுகளாக கார்ட்டூன் படங்களும் அதில் ஒரு பகுதியினர் அரசியல்வாதிகள் என்ற தலைப்பில், தமிழ் அரசியல்வாதிகள் மூவரின் படங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

# மீண்டும் டெங்கு; நேற்றும் அறுவர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்றும் ஆறு பேர் டெங்குத் தொற்றிற்கு இலக்காகிய நிலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாக வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலிருந்து ஒருவரும், சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலிருந்து இருவரும், யாழ். சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலிருந்து மூவருமாகவே மொத்தம் ஆறு பேர் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

மேலும் இவ்வாறு டெங்குத் தொற்றிற்குள்ளாகி யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டவர்க்ளின் எண்ணிக்கை இந்த மாதம் நேற்று வரை 40 பேரையும் கடந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## பொன்சேகாவுக்...

சாந்தகுமார ஆகிய வேட்பாளர்களே இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளனர்.

ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா, அதன் பதுளை மாவட்ட முதன்மை வேட்பாளர் சானக்க சமரவீர, வியலுவ தொகுதியின் இணை அமைப்பாளர் இந்திக்க ஆகியோர் முறைப்பாட்டில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

## சர்வதேச...

நிலைமை, எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டு நிபுணர்கள் கிளிநொச்சியில் நடைபெறும் காணாமற் போனவர்கள் தொடர்பிலான அமர்வுகளில் பங்கேற்பார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரையில் இந்த அமர்வுகள் இடம்பெறவுள்ளன.

# பேராசிரியர் வித்தியானந்தனுக்கு யாழ். பல்கலையில் சிலை நிறுவ மறுப்பு

## கிளம்புகிறது கண்டனம்

(திருநெல்வேலி)

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் அப்பீடம் உருவாகுவதற்கு அல்லும் பகலும் அயராது பாடுபட்ட பேராசிரியர் வத்தியானந்தனுக்கு சிலை ஒன்று வைப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டபோது அப்போதைய பல்கலைக்கழக நிர்வாகம் மறுப்புத் தெரிவித்து அனுமதி தருவதற்கு மறுத்தது என இப்போது குற்றச்சாட்டுக்கள் கிளம்பியுள்ளன.

அப்போது வெளிவந்த ஈழநாடு பத்திரிகையில் பேராசிரியர் வித்தியானந்தனின் உரையொன்று பிரசுரமாகியிருந்தது. யாழ்ப்பாணத்தில் மருத்துவபீடம் ஒன்று அமைப்பதற்கு பொருத்தமான காணியொன்றை எவராவது தந்தால் அதற்கான முயற்சியை தன்னால் மேற்கொள்ள முடியும் என அவர் அதில் குறிப்பிட்டிருந்தார்.

இதற்கமைய கொக்குவில், பிரம்படியைச் சேர்ந்த ஆறுமுகராசா என்பவர் தனது காணியை தந்து உதவுவதாக பேராசிரியருக்கு ஒரு தபாலட்டை போட்டார். அவரைச் சென்று சந்தித்து யாழ். பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடம் அமைப்பதற்கான ஏற்பாடுகளை பேராசிரியர் செய்தார்.

இதன்பலனாக 1978 ஆம் ஆண்டு மருத்துவபீடம் உருவானது. இம்மருத்துவபீடம் உருவாகுவதற்கு காரணகர்த்தாவாக இருந்த பேராசிரியர் வித்தியானந்தனுக்கு மருத்துவபீடத்தில் ஒரு சிலை அமைக்க வேண்டும் என்னும் கோரிக்கையை பேராசிரியர் நந்தி, கலாநிதி ஆறு திருமுருகன், யாழ். கல்வியியற் கல்லூரியின் முதலாவது பீடாதிபதி குழந்தை ம.சண்முகலிங்கம் ஆகியோர் பல்கலைக்கழகத்திற்குச் சென்று விடுத்தபோது, பேராசிரியர் வித்தியானந்தனுக்கு மருத்துவபீடத்தில் மட்டுமல்ல பல்கலைக்கழ்கத்தின் எந்தப் பகுதியிலும் சிலை வைப்பதற்கு அனுமதி தரமுடியாது என அப்போதைய பல்கலைக்கழக நிர்வாகம் மறுப்புத் தெரிவித்தது என கலாநிதி ஆறு. திருமுருகன் இப்போது குறிப்பிட்டுள்ளார். (137)

## இந்தியாவுக்கு...

இணைந்து.செயற்படவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இறுதிப்போரில் முக்கிய தலைவர்கள் கொல்லப்பட்டாலும் விடுதலைப்புலிகளின் இரண்டாம் நிலை தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் இந்தியா, பாகிஸ்தான், அவுஸ்ரேலியா போன்ற நாடுகளில் மறைந்து வாழ்கின்றனர் என்பது உண்மைதான். இவ்வாறு தெரிவித்துள்ளார் தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல.

இந்தியாவில் கைதுசெய்யப்பட்ட இலங்கையரான அருண் செல்வராஜன் தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சைகள் குறித்து கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

புலிகளுக்கு ஆயுதப்பயிற்சி வழங்கி அவர்களை வளர்த்ததும் இந்தியாதான். பிரபாகரனைத் தோற்கடிப்பதற்கு இலங்கை அரசுக்கு ஆயுத உதவி வழங்கியதும் இந்தியாதான். அதே புலிகளின் ஒருசிலர் இன்று பாகிஸ்தானுடன் சேர்ந்து இந்தியாவுக்கு எதிராகச் செயற்படுகின்றனர்.

இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ள இலங்கையரான அருண் செல்வராஜன் குறித்து இந்திய புலனாய்வு அதிகாரிகள் இலங்கைக்கு வந்து விசாரணை நடத்துவதற்கு நாம் பூரண ஒத்துழைப்பு வழங்குவோம். விடுதலைப்புலி உறுப்பினர்கள் தீவிரவாத அமைப்புக்களுடன் இணைந்து செயற்படுவதற்கு முயற்சிக்கின்றனர். இவர்களால் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் ஆபத்துள்ளது.

நாம் புலிகளை மீள அணிதிரள ஒருபோதும் இடமளிக்கமாட்டோம், அத்துடன் இந்தியாவும் கவனத்துடன் இருக்கவேண்டும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

## முறிகண்டியில்...

தவறிவீழ்ந்த நிலையில் சில்லுக்குள் அகப்பட்டு உயிரிழந்துள்ளார்.

சடலம் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. விபத்து தொடர்பான விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (29)

## பள்ளிவாசல்...

மேலும் குறிப்பிட்டுள்ளார்.

பள்ளிவாசலில் மிம்பர் அமைந்துள்ள இடத்தின் பின் பக்கத்தில் இந்தத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

குறித்த இடத்தில் பெற்றோல் நிரப்பிய போத்தல் உள்ளிட்ட சில பொருட்கள் காணப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் தம்புள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து, பொலிஸார் பள்ளிவாசலுக்கு வருகை தந்து வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளதாகவும் அவ்வுறுப்பினர் மேலும் குறிப்பிட்டார்.

## சீன ஜனாதிபதி...

தனது விஜயத்திற்கு முன்னதாக சீன ஜனாதிபதி கொழும்புத் துறைமுகத்திற்கு செல்லவுள்ளார்.

இதேவேளை, அவரது இந்த விஜயத்தின்போது கொழும்பு போர்ட் சிட்டி திட்டம் தொடர்பான ஒப்பந்தமும் கைச்சாத்தாகவுள்ளது. சீனா துறைமுக நிறுவனம் இந்தத் திட்டத்தில் முதற்பகுதிக்கு 1.3 பில்லியன் டொலர்களை முதலீடு செய்யவுள்ளது.

இதேவேள்ளை, இரு நாட்டு தலைவர்கள் மத்தியிலான சந்திப்பின் போது சீனாவின் சில்க் பாதை திட்டத்திற்கு மகிந்த ராஜபக்ஷ தனது ஆதரவை வெளியிடுவார். சர்வதேச அரங்கில் சீனா அளித்து வரும் ஆதரவிற்கும் அவர் தனது நன்றியைத் தெரிவிப்பார்.

## மகிந்தவுடன்...

வாயத்தின் சீர்திருத்தம் மற்றும் 2015 பின்னரான நிகழ்ச்சி நிரல் குறித்து ஆராயவுள்ள இந்த மாநாடுகளில் கலந்துகொள்ளும் உறுப்பு நாடுகளின் தலைவர்கள், குறிப்பிட்ட இரு விவகாரங்கள் மற்றும் அமைப்பிற்கு பொதுவான விடயங்கள் பற்றிக் கருத்துத் தெரிவிக்கவுள்ளனர்.

இதன்போது பொதுநலவாயத்திற்கு தலைமை தாங்கும் இலங்கை, அந்த அமைப்பின் கொள்கைகளை பின்பற்றாதது குறித்து கனடா கடும் விமர்சனங்களை முன்வைக்கலாம் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் விசாரணைகளை மறுத்து விசாரணையாளர்களுக்கு நாட்டிற்குள் அனுமதி வழங்க மறுத்து வரும் தருணத்தில் கமரூன், ஹார்ப்பரை ஜனாதிபதி மகிந்த எதிர்கொள்வதும் முக்கியமானது.

# சமூக மேம்பாட்டுக்கு ஊக்கமளிக்கும் முயற்சி

## அமைச்சர் டக்ளஸ் மீது பங்குத்தந்தை நம்பிக்கை தெரிவிப்பு

சமூக மட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தி அதனூடாக மாற்றத்தையும் மேம்பாட்டையும் கொண்டு வருவதில் நீண்டகாலமாக அர்ப்பணிப்புடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உழைத்து வருகின்றார் என மாங்குளம் பங்குத்தந்தை வண.பிதா பத்திநாதர் அடிகளார் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு வீதி, மாங்குளத்தில் அமைந்துள்ள நல்லாயன் இல்லத்திற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்டு சிறார்களை சந்தித்து கலந்துரையாடிய நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அவரது இளவயது முதல் மிக நீண்டகாலமாக நான் நன்கறிவேன். 1978 களில் வவுனியா செட்டிக்குளம் பகுதியில் மிகவும் பின்தங்கிய கிராமமொன்றில் தமது சமூக சேவைகளை இன்முகத்துடன் ஆற்றிக் கொண்டிருந்த போதே எனக்கு அறிமுகமானவர்.

அந்தவகையில் சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தி அதனூடாக மக்களிடையே மாற்றத்தையும் மேம்பாட்டையும் கொண்டு வர முடியுமென்பதில் திடமான நம்பிக்கை கொண்டு அதனையே இற்றைவரை சிறப்பாகவும் உறுதியாகவும் முன்னெடுத்து வருகின்றார்.

அந்தவகையில், புதியதொரு சமூகத்தை கட்டியெழுப்ப வேண்டுமென்பதிலும் அமைச்சர் தொடர்ச்சியாகப் பாடுபட்டுக் கொண்டிருப்பதையும் நான் நன்கறிவேன்.

ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத்தரத்தை முன்னேற்ற வேண்டுமென்பதில் அவர் ஆற்றி வரும் சேவைகள் இன்றியமையாதது என்பதுடன் அதற்காக அல்லும் பகலும் உழைத்தும் வருகின்றார்.

இருந்த போதிலும் அவரது சேவைகளுக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் ஒருசாராரால் பல்வேறுபட்ட விமர்சனங்களுக்கும் உள்ளாகிவருகின்றார்.

இருந்த போதிலும் விமர்சனங்களுக்கும், அவதூறுகளுக்கும் இடம்கொடுக்காது பிரதேசங்களின் அபிவிருத்திக்காகவும் மக்கள் நல மேம்பாட்டுக்காகவும் தனது பணியை சிறப்பாக முன்னெடுத்து வரும் அமைச்சர் சிறந்த மனிதநேய பண்பாளர் என்றும் சுட்டிக்காட்டினார்.

இதன்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றும் போது இவ் இல்லத்திற்கு வருகைதந்தது மகிழ்ச்சியளிக்கும் அதேவேளை, இங்குள்ள சிறார்களால் வழங்கப்பட்ட நிகழ்வு குறித்தும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்த இல்லம் தொடர்பாக முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக இல்லத்தின் முன்னேற்றத்திற்காகவும் மேம்பாட்டுக்காகவும் எனது முழுமையான பங்களிப்பும் ஆதரவும் வழங்கப்படுமென்றும் தெரிவித்தார்.

இதனிடையே நல்லாயன் இல்லத்தில் வாழ்ந்து வரும் சிறுவர்களினால் ஆற்றுகைப்படுத் தப்பட்ட கலைநிகழ்வுகளையும் அமைச்சர் பார்வையிட்டார்.

நல்லாயன் இல்லத்தில் கடந்த கால யுத்தத்தால் தமது பெற்றோரையும் உறவுகளை இழந்த சிறார்கள் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## திருக்குறள் சொல்லி திருமணம்



மாங்கல்ய மந்திரங்கள் எதுவும் ஓதப்படாமல், அதற்குப் பதிலாக திருக்குறள் சொல்லி நடத்தப்பட்ட திருமணமொன்று கிளிநொச்சி, கனகபுரம் பகுதியில் நேற்று இடம்பெற்றது.

இந்து முறைப்படி நடைபெற்ற இந்த திருமணத்தில் அந்தணர் எவரும் இல்லை. சமஸ்கிருத மொழியில் மந்திரங்கள் ஓதப்படவில்லை. இருப்பினும், திருக்குறள்கள் அங்கே உச்சரிக்கப்பட்டன. சுப முகூர்த்தத்தில் மணமகளின் கழுத்தில் மணமகன் தாலி கட்டி திருமணம் முழுமை பெற்றது.

கிளிநொச்சியில் தொலைத்தொடர்பு நிறுவனம் ஒன்றில் கடமையாற்றும் கனகேஸ்வரன் உதயபாபு என்ற மணமகனுக்கும் ஆசிரியையான இறைபிள்ளை அபிராமி என்பவருக்குமே இந்தத் திருமணம் நடைபெற்றது.

திருமணத்தை கிளிநொச்சி தமிழ்ச் சங்கத் தலைவரும், மணமகளின் தந்தையுமான வே.இறைபிள்ளை தலைமையேற்று நடத்தியதுடன், கிளிநொச்சி மாவட்ட செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் ஆசியுரையினையும் வழங்கினார்.

இந்தத் திருமண நிகழ்வில், திருவள்ளுவருடைய திருவுருவப்படம் வைக்கப்பட்டிருந்தது.

## சீனாவுக்கு தேயிலை அன்பளிப்பு

(சீனா)

சீனாவின் தென் மேற்கு பகுதியான யுனான் மாகாணத்தில் அண்மையில் ஏற்பட்ட நில நடுக்கம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக ஒரு தொகை தேயிலையை இலங்கை அரசாங்கம் அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் ரஞ்சித உயன்கொட இந்த தேயிலைத் தொகையை பீஜிங்கில் உள்ள சீனாவின் வெளிவிவகார அமைச்சில் கையளித்தார்.

நில நடுக்கம் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, சீன ஜனாதிபதி ஸீ ஜின்பிங்கிற்கு அனுதாபச் செய்தியொன்றை அனுப்பி வைத்ததோடு மருத்துவ உதவிகளை வழங்கத் தயார் என்றும் அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அநுராதபுரம் குளத்தில் மூழ்கி சிறை அதிகாரிகள் இருவர் பலி

அநுராதபுரம் சிறைச்சாலை அதிகாரிகள் இருவர் குளத்தில் மூழ்கி பலியானதுடன், பாதிக்கப்பட்ட ஒருவர் அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தார்.

சிறைச்சாலை அதிகாரிகளில் நால்வர், திஸ்ஸவெளவுக்கு குளிப்பதற்காக சென்றுள்ளனர். அதில் மூவர், அங்கிருந்த தோணி ஒன்றில் ஏறி, துடுப்பில்லாமல் கைகளால் படகை செலுத்தியுள்ளார்.

தோணி, நடுக்குளத்தில் வைத்து நிலை தடுமாறி கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. அதில், மூவரும் குளத்துக்குள் விழுந்துவிட்டனர்.

அவர்களில் இருவரே மரணமடைந்துள்ளனர். உயிரிழந்தவர்கள் ரம்புக்கனை மற்றும் கடுகண்ணாவையைச் சேர்ந்தவர்கள் என்றும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருபவர் கண்டியைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸர் மேலும் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில், அநுராதபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நோர்வே தூதுவர் நேற்று கிளிநொச்சியில்

கிளிநொச்சிக்கு நேற்று விஜயம் செய்த இலங்கைக்கான நோர்வே தூதுவர் யு.என்.டி.பி. நிறுவனத்தினால் நோர்வே அரசின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டங்களைப் பார்வையிட்டதுடன் அதன் முன்னேற்றங்கள் பற்றியும் கலந்துரையாடினார்.

முழங்காவில் பிரதேசத்தில் நோர்வே அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டு வரும் பால் சேகரிப்பு நிலையம், கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்தில் நோர்வே அரசின் நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் வெல்ல உற்பத்தி தொழிற்சாலை ஆகியவற்றையும் தூதுவர் சென்று பார்வையிடடார்.

இன்று காலை 8.30 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரனை நோர்வே தூதுவர் சந்தித்துப் பேசவுள்ளார்.

## சிறுமியைக் கடத்திய இளைஞன் பொலிஸாரல் கைது

கடந்த சனிக்கிழமை முதல் காணாமற்போயிருந்த வல்வெட்டித்துறை, கொற்றாவத்தையைச் சேர்ந்த 14 வயதுச் சிறுமியை தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வளாகத்தில் வைத்து நேற்று முன்தினம் காலை மீட்டதாக வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், சிறுமியை 2 நாட்களாக கடத்தி வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் அதேயிடத்தைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் கூறினார்கள். வீட்டிலிருந்த மேற்படி சிறுமி, கடந்த சனிக்கிழமைமுதல் காணாமற் போயிருந்ததாக சிறுமியின் பெற்றோர் கடந்த ஞாயிற்றுக்கிழமை வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்திருந்தனர்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையிலேயே அச்சிறுமி மீட்கப்பட்டுள்ளார் என பொலிஸார் கூறினர். சிறுமி தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், இளைஞன் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## தேர்தல் பிரசாரத்தில் ஹிருணிக்கா



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மேல் மாகாண சபை உறுப்பினர் ஹிருணிக்கா பிரேமச்சந்திரவுக்கு 6 மெய் பாதுகாவலர்கள் இருப்பதுடன் 8 அமைச்சரவை பாதுகாப்பு பிரிவினரின் பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது.

ஊவா மாகாண சபைத் தேர்தல் பிரசாரத்திற்கு சென்றிருந்த ஹிருணிக்கா தனது பாதுகாவலர்கள் எடுத்துக்கொண்ட புகைப்படம் இணையத்தில் வெளியாகியுள்ளது.

மொத்தமாக 14 பேரின் பாதுகாப்பு ஹிருணிக்காவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கறுப்பு சட்டை மற்றும் காற்சட்டை அணிந்திருக்கும் ஆறு பேர் மெய்ப்பாதுகாலர்கள். கறுப்பு காற்சட்டை மாத்திரம் அணிந்திருப்பவர்கள் அமைச்சரவை ப்ாதுகாப்பு பிரிவினர்.

ஹிருணிக்காவின் தந்தையான முன்னாள் அமைச்சர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர கொலை செய்யப்பட்ட பின்னர், அமைச்சரவை பாதுகாப்பு பிரிவினர் கறுப்பு நிற காற்சட்டை அணியும் முறை அறிமுகப்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தெல்லிப்பளையில் வாள்வெட்டு

தெல்லிப்பளை பகுதியில் நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட வாள்வெட்டுச் சம்பவமொன்றில் இருவர் படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் கூறினர்.

வீதியில் நின்றிருந்த இருவரையும், மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துரத்தி துரத்தி வாளால் வெட்டினர் என்று பொது மக்கள் கூறியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## சமாதான நீதவானை கடத்திச் செல்ல முயற்சி

### நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

கரவெட்டி பகுதியைச் சேர்ந்த சமாதான நீதவானான சி.சிதம்பரம் (வயது-63) என்பவரை, வானில் வந்த உறவினர் ஒருவர் கடத்த முற்பட்டுள்ளதாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

சமாதான நீதவான் தனது முறைப்பாட்டில், பருத்தித்துறை தம்பசிட்டி பகுதியைச் சேர்ந்த சுவிஸ் நாட்டில் வசிக்கும் தனது தூரத்து உறவினர்களில் ஒருவரே வானில் ஆட்களுடன் வந்து தன்னை கடத்த முற்பட்டதாக, அவர் தனது பொலிஸ் முறைப்பாட்டில் கூறியுள்ளார்.

ஊர் மக்கள் ஒன்று கூடியதையடுத்து வானில் வந்தவர்கள் தப்பி ஓடியதாக சமாதான நீதவான் தெரிவித்திருந்தார். முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணை மேற்கொண்ட போது, பணக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்திலேயே கடத்தல் முயற்சி இடம்பெற்றிருந்தமை தெரிய வந்தது. இதனையடுத்து, கடத்தலில் ஈடுபட முனைந்தவரை கைது செய்து விசாரணைகள் மேற்கொள்ளவுள்ளதாக பொலிஸார் மேலும் கூறியுள்ளார்.

## பாடசாலையில் திருட்டு

(அச்சுவேலி)

அச்சுவேலி பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயத்தின் கணினி அறையில் இருந்த ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான கணினிகளின் பாகங்கள் நேற்று முன்தினம் இரவு திருடப்பட்டுள்ளதாக, வித்தியாலய அதிபர் நேற்று திங்கட்கிழமை முறைப்பாடு பதிவு செய்துள்ளார் என்று அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

கணினி அறையின் ஓடுகளை பிரித்து உள் நுழைந்தே இந்த திருட்டு நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

அதிபர் நேற்றுக் காலையில் பாடசாலைக்கு சென்று பார்த்த வேளையிலேயே பாடசாலையில் திருட்டுப்போன விடயம் தெரிய வந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் கூறினார்கள்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 செப்ரெம்பர் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.